Sangathamil
சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 131 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 அக்டோபர் 2026

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

thuyarpakirvu.com

தொடர்புகளுக்கு

437 345 4203

thuyararivithal@gmail.com

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

Thuyarpakirvu.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

ஒரு பலம்வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும்.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.com

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

சங்கத்தமிழ்

பாதங்கள் பார்த்து சுவடுகள் காத்திருக்கின்றன...
கப்டன் விந்திரன் – எழிலரசன்

மணலாறு, தமிழீழப் போராட்ட வரலாற்றின் அழிக்க முடியாத அத்தியாயம். புலிச்சேனையை அரவணைத்த கங்காருத் தொட்டில். தமிழீழ விடுதலை என்ற அக்கினியைத் தன்மடி மீது வைத்து சீராட்டிய தாய். அக்கினியின் அத்திவாரமான எம் தலைவரைப் பொத்திவைத்த புனிதபூமி. எதிரியின் கணைகளையெல்லாம் தன் நெற்சில் தாங்கிய கவசம். குரங்குகளின் சிம்மிசங்கள், நீரேரிகளின் மீது வெண்பூக்களைத் தூவியது போல் மிதக்கும் கொக்குகள். மனிதவாடை கண்டவுடன் தாவியோடும் கரடிகள். மலைக்குன்றென அசைந்தோடும் மூர்க்க யானைகள். உயர்ந்த மரங்களில் தாவியோடும் மர அணில்கள். தலைக்குமேல் குடைபிடிக்கும் பச்சையங்கள். அரணாக காத்து நிற்கும் கற்பாறைகள். திடீரென வெகுண்டெழுந்தோடும் காட்டாறுகள். இவைதான் எம் தலைவரைக் காத்துநின்ற இதய பூமி.

1989 இன் இறுதிக்காலம். ‘செஞ்சோலை’ எனும் பெயர் சூடிய 05 ஆவது பயிற்சி முகாம். இருநூறுக்கு மேற்பட்ட போராளிகளைப் புடம்போட்ட பாசறை. இப்பாசறையில் தான் விந்திரனும் பயிற்சியெடுத்தான். குறளைகளை ஒன்றாக்கிய முதல் மூன்று பிரிவுகளில் விந்திரனும் ஓர் குறளை. சிறந்த பயிலுனன். சிறந்த ஒழுக்கசீலன். தன்திறமையால் பொறுப்பாளரின் கண்களைத் தன்பால் ஈர்த்தவன். அடிப்படைப் பயிற்சி முடிந்தகையோடு விசேட பயிற்சிக்கு தெரிவானவன்.

ஒரு போராளியாக விந்திரனை நான் சந்தித்தது, என் நினைவுப் பரப்பில் குத்திய சிறு முள்ளாக இன்னும் என் இதயத்தை நெருடுகிறது. ‘அமுதகானம்’, காட்டிலுள்ள ஒரு முகாமின் பெயர். காட்டிலுள்ள போராளிகளிற்கு உணவளிக்கும் அட்சயபாத்திரம். எம் முகாமிற்காகன உணவை எடுக்கச் சென்றேன். அங்குதான் விந்திரனையும் கண்டேன்.

‘எங்கேயோ பார்த்த முகமாகக் கிடக்கு’ உயிரில் கலந்திருந்த நினைவுகளை மீட்டினேன். மூளைத் திசுக்களைக் கசக்கினேன். அவன் சிரித்தபடி என்னை அணுகினான். பதினைந்து வயதுப் பால்முகம், பால் முகத்தில் கரிய, சிறிய கண்கள். கண்களிலே மற்றவர்களை ஊடுருவும்திறன். நிமிர்ந்த உறுதியான நடை. அவனது உயரத்தின் அரைவாசியை விழுங்கியிருக்கும் அவனது ஆயுதம். மொத்தத்தில் அவனது தோற்றம் வசீகரமானது. என் மூளைச் செல்களின் போராட்டம். ஓய்ந்தது. அவன் யார் என்று அறிந்து கொண்டேன். வல்வெட்டித்துறை; போராட்டத்தீக்கு தீக்குச்சி கொடுத்த இடம். எத்தனையோ மாவீரர்களும், போராளிகளும் தவழ்ந்த கரையோர நகரம். எல்லாவற்றிலும் மேலாக எம் தலைவரை தாலாட்டிய தொட்டில். விந்திரனின் தொப்புள்கொடி உறவும் இங்குதான். 1974 சித்திரை மாதம் 19ஆம் திகதி - இது விந்திரனின் பிறந்த நாள். அம்மா புவனேஸ்வரி, அப்பா பஞ்சலிங்கம். இவர்கள் தங்கள் மகனுக்குச் சூட்டிய பெயர் பாலமுரளி. மூன்று அக்காவுக்கு அடுத்ததாக இவன். ஒரு தம்பியும் உண்டு. ஆரம்பக்கல்வி சிவகுரு வித்தியாசாலை எனும் கல்விக்கூடம்.

வல்வெட்டித்துறை நகரத்தின் முதுகை இந்திய இராணுவச் சப்பாத்துக்கள் புண்ணாக்குவது வழமை. இராணுவம் இதயத்தை கிழித்துவிட்டுச் செல்லும். இரத்தம் பாய்ந்தோடும். அவ்விதயத்தின் சிறகுகளுக்குள்ளிருந்து புலிவீரர் வெளிவருவர். மீண்டும் புலிவேட்டைக்கு இராணுவ அரக்கர் வருவர். பார்த்திருந்தனர் புலிகள்.

1989 ஆம் ஆண்டு எட்டாம்மாதம் ஒரு நாள் அரக்கனின் பல் ஒன்று உடைந்து இரத்தம் வடிந்தது. உடனே ‘வல்வைப் படுகொலை’ எனும் கோரத்தாண்டவம் அரங்கேறியது. வல்வை நகரம் சுடுகாடாகியது. தீ நாக்குகள் நகரத்தைக் கரியாக்கின. விந்திரனின் இதயத் தீக்குச்சியிலும் ஒரு சிறு பொறி தெறித்தது. ‘போராட்டமே எமை மீட்கும் மீட்பர்’. போராட்டம் என்னும் சிறகுக்குள் தன்னையும் புகுத்திக் கொண்டான். நடுக்கடலில் தத்தளிப்பவனுக்கு கட்டை கிடைத்ததுபோல இவனுக்கு போராட்டம் எனும் கப்பல் கிடைத்தது. இறுகப் பற்றிக் கொண்டான்.

1990ஆம் ஆண்டு ஒரு நாள் ‘மன்னாரிலிருந்து விசேட பயிற்சி முடித்துவிட்டு அணியொன்று வந்திருக்கின்றது’. காற்று என் காதில் சேதி சொல்லிச் சென்றது. அவ் அணியில் விசேட பயிற்சி முடிந்து விந்திரனும் ஒருவனாக வந்திருந்தான். அகழ்ந் தெடுக்கப்பட்ட வைரத்திற்கு பட்டை தீட்டப்பட்டிருந்தது. என்னைக் கண்டதுமே அவன் முகம் பிரகாசமானது. அதே புன்னகை, அதே கண்கள். ஆனால் ஒரு வித்தியாசம், தோளிலிருந்த ஆயுதம் சிறியதாகத் தோன்றியது. நேற்றைய தூற்றலுக்கு துளிர்த்த புற்கள் போல் மீசையும் அரும்பியிருந்தது.

சக போராளிகளிடம் என் வாயைக் கொடுத்தேன். விந்திரனின் தியமைகளைப் புகழ்ந்தார்கள். மீனுக்கு நீச்சல் எப்படியோ, பறவைக்கு பறத்தல் எப்படியோ, அப்படியே விந்திரனுக்கு பயிற்சிகளும் என்றனர். இவனை, அடிக்கடி சக போராளிகள் சீண்டுவது வழக்கம். ஆனாலும் இவனுக்கு கோபம் வராது. விந்திரனிடம் பேச்சுக்கொடுத்தேன், ‘எம் அணி கஜுவத்தை முகாம் தாக்குதலுக்குச் சென்றது. எங்களைச் சின்னப்பெடியள் என்று சொல்லி சப்ளையில விட்டுவிட்டினம்’. இதைக் கூறும் போது அவன் முகத்தில் மின்னலைக் காணமுடியவில்லை. இருளையே காணமுடிந்தது.

விந்திரன் அதிஷ்ரக்காரன். எவருக்குமே அரிதில் கிடைக்காத பணி அவனைத் தேடி வந்தது. அவனது திறைக்குக் கிடைத்த அரும்பணி எமது தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவல் அணிக்குத் தெரிவானான். எல்லாத் திசைகளுக்கும் ஒரே நேரத்தில் வெளிச்சம் தருகின்ற எம் தலைவரின் நிழலில் தவழும் பாக்கியம்.

போராட்டத்தேர் முன்னோக்கிச் சென்று கொண்டேயிருந்தது. இதுவரை காலமும் ஒரு சண்டைக்குக் கூட போகவில்லை. எனும் கவலை அவனை வாட்டியது. பல வேகய 2 இராணுவ நடவடிக்கைக்கு எதிராகச் செல்லும் அணியில் விந்திரனும் ஒருவன். செய்தி இதயத்தை பூந்தளிரால் தடவியது. உயிரைப் பூவால் வருடிச் சென்றது. நுரையீரலுக்குள் இனிப்பூட்டிய காற்றுப் புகுந்தது.

இயக்கச்சி; எமக்குச் சாதகமற்ற நிலப்பரப்பு. ‘ஓமர் முக்தார்’ எதிரியை பாலைவனத்தில் எதிர்த்ததுபோல் சிறு சிறு பற்றைகளே எம் காப்பு. கரிய பெரிய களிறு பொல் எதிரியின் ராங்குகள். கார்த்திகை மாதத்து மழையென செல்கள். இவற்றிற்கு மத்தியில் விந்திரனின் கன்னிக் களம். பசித்திருந்தவனுக்கு பாலும் பழமும் கிடைத்தது. விந்திரனும் கிடைத்த சந்தர்ப்பத்தை திறமையாகப் பயன்படுத்தினான். பலரது பாராட்டுக்களைப் பெற்றான்.

அவனது திறமை எனும் மூலதனத்திற்கு மீண்டும் பரிசு எனும் ‘லொட்டரீ ‘ விழுந்தது. தேசியத் தலைவரின் உதவியாளர்களில் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

‘ஸ்பிறிங்’ கட்டிலின் மீது ஏறிநின்று துள்ளும் குழந்தைபோல் இனவது உயிரின் ஒவ்வொரு அணுக்களும் மகிழ்ச்சியில் துள்ளின. தலைவரின் சிறகுகளிற்குள் இருந்தபடியே அவரது புத்திமதிகளையும் அறிவுரைகளையும் கேட்கும் பாக்கியம். வானத்தின் கீழ் சில சதுரமைல்களையே அறிந்துவைத்திருந்தவன். எட்டுத் திசைகளின் விளிம்புகளுக்கே சென்றான்.

தாமரை இதழ் மீதிருக்கும் சேறுபோல் போராளிகளுக்கு இருக்கும் அந்நிய மொழிப் பெயர்கள் எல்லாம் தூய தமிழுக்கு மாற்றப்பட்ட வேண்டும். விந்திரன், எழிலரசன் ஆனான் அவனது பண்புக்கும் உருவத்திற்கும் ஏற்றமாதிரி தேசியத் தலைவரால் சூட்டப்பட்ட பெயர் இது.

1995 ஆம் ஆண்டு சந்திரிகாவின் பேச்சு வார்த்தை. விரைவிலேயே முகத்திரை கிழிந்தது. அரசின் போரமுகம் தெரிந்தது. மீண்டும் சண்டைக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. சண்டைக்குப் போதல் என்பது, ஒரு போராளியின் மனதைக் குளிர்விக்கின்ற மர்மமழை, போராட்ட வாழ்க்கையின் ஆறுதல் மந்திரம். சிறுபிள்ளைக்குத் கிடைத்த இனிப்பு. இதயத்தை மயிலிறகால் வருடுகின்ற இன்பசுகம்.

எழிலரசனுக்கு ஓர் இலக்கை வேவு பார்க்கும் பணி தரப்பட்டது.

இதில் ஈடுபடும்போது ஏற்படும் அனுபவம் புதுமையானது. இருட்டை நண்பனாக்கி, எதிரியின் முள்ளுக்கம்பியினூடாக தவழுவதும், உருளுவதும், எதிரி அறியாமலேயே அவனது தலைவாசலில் நடமாடுவதும், அவன் அறி யாமலே அவனது முக்காட்டை விலக்கி அவன் முகம் அறிவதும், இவையெல்லாம் சாதாரண மனிதரால் முடியாது. இரும்பை யொத்த மனவுறுதி வேண்டும். எழிலரசனும் இரும்பையொத்தவன்தான். அவன் சென்றால் பழம் இன்றி வரும் நாட்கள் மிகக்குறைவு.

கடின மேற்பரப்பைக் கொண்ட சிப்பிக்குள்தான் ஒளி வீசும் முத்து உள்ளது. இவனுக்குள் மேலும் சில திற மைகள் ஒளிந்திருந்தன. இவன் ஒரு கலைஞனுங் கூட. தேசத்தின் புயல்கள், கரும் புலிகளின் வீரத்தைச் சாற்றும் சலனப்படம். பொ. தாசனின் கைவண் ணத்தில் உருவான காவியம். மக்களின் இதயங் களைச் சிறுமுள்ளாகக் கீறி கண்ணீர் சிந்த வைத்த ஓவியம். இதில் ஒரு கரும்புலி வீரனான எழிலரசன் நடித்திருந்தான்.

விடுதலைப் புலிகளின் தொடர் அதிரடிகளால் தென்னி லங்கையில் அரசுக்குப் பெரும் நெருக்கடி. நீர்ப்பாம் பென வழுக்கிச்செல்லும் தன் செல்வாக்கை உயர்த்த வேண்டும். எவ்விலை கொடுத் தாலும் பரவாயில்லை. ரத்வத்தையின் தலைமீது இப்போது கத்தி. முன்னேக் கிப்பாய்ந்தது சிங்களப்படை. புலிகளும் புலிப் பாய்ச் சலால் பதிலடி கொடுத்தனர். எழிலரசனுக்கும் பாயும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அளவெட்டி ஆருணோதயாக் கல்லூரி, தமிழரின் கல்விக்கூடம்; சிங்களவனின் ஆயுதக் கூடமாக மாறியிருந்தது. புலிப்பாய்ச்சலின் ஓர் அங்கமாக இம் முகாம் மீது பட்டப்பகலில் பாய்ந்தனர் புலிவீரர்கள். முன் னணிக் காவலரண் ஒன்றின் மீது கைக் குண் டொன்றை எறிந்து சண்டையைத் தொடங்கினான் எழி லரசன். இராணுவம் எலியெனப் பின்வாங்கி ஓடியது. ஆயு தங்களைப் புலிவீரர் அள்ளினர்.

மீண்டும் அரசாங்கம் கண்டனங்களுக்குள்ளானது. மாங்காய் பிடுங்கும் போது பால் கண்ணுக்குள் தெறித்த கதையாகியது. பச்சை மரத்திலுள்ள கிளியை சொண்டை வைத்து அடையாளம் காணலாம். ஆனால் புலிவீரரை எப்படிக் கண்டு பிடிப்பது? ரத்வத்த தலை யைச் சொறிந்தார். அடுத்த அடியை அவதானமாக வைக்கவேண்டும்.

மீண்டும் பாரிய படையெடுப்புக்கான ஆயத்தங்கள். காலுடைந்த சிங்களத்துக்குப் பச்சிலைவைத்து கட்டப்பட்டது. ஆயுதக் கப் பல்கள் கொழும்புத் துறைமுகத்தை நிறைத்தன. அங்குமிங்கும் இரும்புப்பறவை பறந்தது. கிழக்கிலிருந்து சிங்களப் படை வடக் கிற்கு நகர்ந்தது. பலாலி பச்சையுடைத் திருவிழாவானது. புலி களும் ஆயுதங்களைத்துடைத்து எண்ணையிட்டனர். தமிழர் சேனை தயாராகியது. எழிலரசன் ஒரு செக்சன் லீடராக நிய மிக்கப்பட்டான். கடும் பயிற்சிகள் நடந்தன. ஒழுங்கு, வேகம், உருமறைப்பு, எல்லாவற்றிலும் திறமையாகச் செயற்பட்டு எழி லரசனின் அணி பாராட்டுக்களைப் பெற்றது. எல்லோருக்கும் இவனது அணியே முன்னுதாரணமாகக் காட்டப்படுவது வழக் கமாகியது. கூட்டத்தில் முன்னணியில் பறக்கும் கொக்குப்போல், இவனும் எப்போதும் எல்லாவற்றிலும் முன்னணியிலேயே நின்றான்.

1995, 10ஆம் மாதம் முதலாம்திகதி, இடி முழக்கம் எனும் பெயரில் இடி இடித்தது. மழைக்காலத்து ஈசல்கள் போல் இரா ணுவம் முன்னேறியது. அச்சுவேலி, புத்தூர்ப் பிரசேதம் பச்சை யுடையானது. இதற்கு எதிராக ஒரு தாக்குதல். எழிலரசன் இத் தாக்குதலின்போது விழுப்புண்ணுற்றான். இத்தாக்குதலில் நினைத்த வெற்றியை எம்மால் பெறமுடியவில்லை. ஆனாலும் எதிரிக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

கப்டன் விந்திரன் – எழிலரசன்.

இதே மாதம் பதினேழாம் திகதி. சூரியக்கதிர் யாழ். குடாவைச் சூட்டெரித்தது. எழிலரசன் குணமடைந்தான். இவன் குறிபார்த் துச் சுடவதலில் மிகத் திறமைமிக்கவனாக இந்தான். இவனது சூடுகள் அனேகமாகப் பத்துக்களுடனேறே உறவாடுவது வழக் கம். எப்போதாவது ஒன்பதுகளுடன் சம்பந்தம் வைத்து கொள் ளும். இத்திறமை இவனை வேறொரு பணிக்கு இட்டுச் சென் றது. குறுகியகாலப் பயிற்சி முடித்து ஒரு பதுங்கிச்சுடும் வீரனாக சூரியக்கதிரை சுட்டெரிக்கப் புறப்பட்டான். யாழ். நகரத்தின் தலைவாசலில் இராணுவம் வந்திருந்தது. நாவலர் வீதிச் சண்டை எழிலரசனின் திறமைக்குச் சான்றானது. ஒரே நாளில் பல இராணுவத்தினர் எழிலின் துப்பாக்கிக்கு அடிபணிந்தனர்.

யாழ். குடாநாட்டின் இதயத்தை சப்பாத்துக்கள் நசித்தன. அன் றலர்ந்ததாமரை போலிருந்த யாழ் மண் அரக்கனின் காலடியில் கசங்கியது. தந்திரோபாயமாக புலி வீரர் வன்னிக்கு வந்தனர். எழிலரசனின் பணி வன்னியிலும் தொடர்ந்தது. பயிற்சி என்பது அவனுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. பதுங்கிச்சூடும் சூட்டுப் பயிற்சியின் போது அவனது சூடுகள் இலக்கை முத்தமிடத் தவறு வதில்லை. 'பட்டிருக்கும்' என்று அவன் கூறினால் அந்தரவை கண்டிப்பாக மையத்தை ஊடுருவியிருக்கும். இது பிசகி விட்டது என்று அவன் கூறினால் இலக்கைப் போய்ப் பார்க்கத் தேவை யில்லை. முன்கூட்டியே தன் சூடுகளை மதிப்பிடும் திறன் அவனுக்கேயுரியதாகும்.

வன்னியில் இவனது முதற்களம் ஓயாத அலைகள் நடடிவக் கையாகும். வெண்கலக் கடையில் யானை புகுந்தது மாதிரி முல்லைத்தீவு முகாம் சின்னாபின்னப்படுத்தப் பட்டது. இதில் எழிலுக்கு அதிக வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் சத்ஜெய நடவடிக்கையில் இனவது துப்பாக் கியிலிருந்து புறப்பட்ட பல ரவகைள் எதிரி இரத்தத்தின் சுவையை அறிந்து கொண்டன. சண்டை மும்முர மாக நடந்து கொண்டிருந்தது. இவனது நிலைக்கு அண்மையாக ஒரு போராளியின் உயிரற்ற உடல் வெய்யிலுக்குள் கிடந்தது. இவனது இதயத்தை குண்டூசி ஒன்று கீறிச் சென்றது. உயிர் பிரிந்த பின்பும் நண்பனின் உடல் வெய்யிலில் வேகக்கூடாது. எறி கணைகளின் சீறலுக்கு மத்தியிலும் ஓடிச் சென்று அவ் வித்துடலை நிழலில் வைத்துவிட்டு வந்தான். பின் எடிபலவில் இவனது துப்பாக்கி ரவைகளைத் துப்பியது. எந் நேரமும் எதிரி இலக்குகளைத் தேடித்திரிவதே இவனது பொழுது போக்கு. காவலரணில் எதிரியின் தலைக்கறுப்பு, ஒரு சூடுதான்; எதிரியின் கெல்மற் சிவந்திருக்கும்.

நாட்காட்டி சுருங்கியது 'ஜெயசிக்குறுய்' திடமான பெயரிட்டான் எதிரி. காவியுடுப்புக்காரர் நல்லநாள் பார்த்துக் கொடுத்தனர். வன்னியின் இதயத்தைக் கிழிப்பதே நோக்கம். 'வாங்கடா, வழி மேல் விழி வைத்துள்ளோம்'. புலிவீரரும் திடம் கொண்டனர். மாரித் தவளைபோல் வானொலிகள் வெற்றி முழக் கமிட்டன. புலிகள் அழிந்தனர். போர் முடிந்தது. பழம் பறிக்கும் நேரத்து காக காத்திருந்தனர் புலிகள். தாண்டிக்குளத்தில் முதல் தூண்டில், ரத்வத்தவின் வாய் கிழிந்தது. பெரியமடுவில் ஆப்பிழுத்த குரங் கானது.

எழிலரசன் படையணிக்கு மாற்றப்பட்டான். ஓர் அணியை பொறுப்பேற்றான். இவனது அணியும் திறமைமிக்கதாயிருந்தது. ஓமந்தையில் வந்து நின்று, பட்ட காயங்களுக்கு எதிரி புனுகு பூசிக்சொண்டிருந் தான். 01.08.1997 அன்று எதிரியின் காவலரண்கள் மீது புலிகள் ஏறிநடந்தனர். முதல் இரண்டு ஊடறுப்புத் தாக்குதலுக்கும் செல்லவில்லையென்ற ஆதங்கம் எழிலரசனிடம் இருந்துது. இத்தாக்குதலில் அவனது துப்பாக் கியிலும் நெருப்புப் பூத்தது. அழகுக்கு மயில், பேச்சுக்கு கிளி, தந்திரத்திற்கு நரி. இல்லையில்லை புலிவீரர், வேகத்துக்கு சிறுத்தை, இல்வையில்லை, இதற்கும் புலிவீரர். ஓமந்தையில் நிரூபணமாயிற்று. பொயன்ற் எல் லாம் பிடிச் சிட்டம். இப்ப கிளி யர் பண்ணிக்கொண்டிருக்கிறம். ஆமியின்ர பொடிகள். ஆயு தங்கள் எல்லாம் நிறையக் கிடக்குது. எழிலின் குரல் ஓமந்தையில் கேட்ட வண்ணமேயிருந்தது.

மழை பொழிவது மண்ணுக்கு தன்னை அர்ப்பணிக்கவே. காற்று வீசுவது உலகம் உயிருடனிருக்கவே. மரங்கள் வாழ் வது உயிர்களை வாழவைக்கவே. மெழுகுதிரி தன்னை உருக் குவது உலகிற்கு வெளிச்சம் தரவே. புலிவீரர் வழ்வது தமிழீழ விடியலுக்கே. கூலிவந்த செல்லொன்று எழிலரசனின் அருகே வீழ்ந்து வெடித்தது. வெற்றியில் பூரித்திருந்தவனின் தலையை சிதறுதுண்டொன்று தாக்கியது. ஓமந்தை மண்ணில் அவனது குருதி படர்ந்தது. தமிழீழக் காற்றோடு அவனது உயிர் கலந்தது.

மரணத்தால் உன் உயிரைத் திருடமுடிந்தது. உன் புன்ன கையை, பொலிவை அதனால் திருடமுடியவில்லை. உனது குரல், உனது குறும்பு, என் இதயத்தில் இன்னும் பசையாய் ஒட் டியிருக்கிறது. எனக்கு தாகமெடுக்கும் போதெல்லாம் இப் போதும் என்அருகில் நீரோடையாய் ஓடி வருகிறாய் நீ. உன்னை விதைகுழியில் வைத்து ஒருபிடி மண்போட்டேன். போட்டதும் கையைத் திறந்தேன், அதிலும் உன்முகத்தான். ஆயிரமாயிரம் மாவீரருடன் நிம்மதியாக நீயும் உறங்கு. மழை யின் பயணம் மண்ணைத் தொடும்வரை ஓயாது. எமது பய



www.sangathamil.com

தமிழீழச் செய்திகள்



ஈகைச்சுடர் திலீபனின் சிலை அகற்றியமை குழந்தைகளின் உள்ளங்களிலும் திலீபனை உருவாக்கிவிட்டீர்கள்

அருட்தந்தை மா. சத்திவேல்

01.10.2026

தியாகத் தீபம் திலீபனுக்காக அமைக்கப்பட்டிருந்த சிலையை பொலிசார் அகற்றிச் சென்றதன் மூலம், எங்கள் தேசத்தில் பால் குடிக்கும் பிள்ளைகளின் உள்ளங்களிலும் திலீபனின் சிலையை உருவாக்கிவிட்டீர்கள் என சமூக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று வியாழக்கிழமை (01) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவின் காந்தியம் போதிக்கும் அகிம்சையும், இலங்கையில் புத்தனின் தர்மமும் தமிழர்களின் அரசியல், கலாச்சார, பண்பாட்டு வரலாற்றில் தோல்வி கண்டதில் உச்ச கட்ட வெளிப்பாட்டின் அடையாளமே தியாக தீபம் திலீபனின் உயிர்த்தியாகமாகும்.

அத்தகைய தோல்வி வரலாற்றினை மறைக்கவே தியாக தீபத்தின் சிலை அகற்றப்பட்டது. இதுவே பயங்கரவாதம். மாற்றத்திற்கென வந்து ஆட்சி அமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கடந்த கால ஆட்சியாளர்களைப் போல தமிழர்களுக்கு எதிராக பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து நிகழ்த்தும் பயங்கரவாத கொடூரத்தினை வன்மையாக கண்டிப்பதோடு தற்போது தமிழர்கள் அடைந்துள்ள உளவியல் மற்றும் அரசியல் கொதிநிலையை சரி செய்ய அறத்தின் பக்கம் நின்று தியாக தீபம் திலீபனின் சிலையினை உரிய மக்கள் கௌரவத்துடன் மீளவும் அது வைக்கப்பட்டிருந்த நிலை நிறுத்துமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத அரச கட்டமைப்பின் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிராக அகிம்சை வழி போராட்டத்தினை தேர்ந்தெடுத்து உணவு மற்றும் நீர் என்பவற்றைத் தவிர்த்து தம் உடல் வருத்தி பல்லாயிரக்கணக்கானோர் பார்த்திருக்க அவர்களின் கண்ணீர் புலம்பலுக்கு மத்தியிலே உயிர் துறந்தார்.

அவரை பயங்கரவாதியாக்குவதும், அவருக்கு மலர் அஞ்சலி செலுத்தி வணக்கம் செலுத்துவதையும், அரசு பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் எழுச்சி கொள்வதையும் பயங்கரவாதமாக்குவது ஏன்? தேசிய மக்கள் சக்திக்குள் மறைந்திருக்கும் மக்கள் விடுதலை முன்னணி அரச கட்டமைப்பின் பயங்கரவாதத்திற்கு எதிராக இரண்டு சந்தர்ப்பங்களில் ஆயுதம் ஏந்திய வரலாற்றை மறந்து தமிழர்களின் நீதிக்கான அகிம்சை வழி ஒன்றுகூடுதலை பயங்கரவாதமாக்குவது, அவர்களே அவர்களின் மனசாட்சியை கொன்றதையே வெளிப்படுத்துகின்றது.

தமிழர்களின் தாயகத்தில் யுத்த வெற்றி அடையாளமாக உங்களால் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து சின்னங்களும், யுத்த காலத்திலும் அதன் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கின்ற சிங்கள பௌத்த மத அடையாளங்களும், சிங்கள புத்தர் சிலைகளும், விகாரைகளும், தூபிகளும், நடப்பட்டு இருக்கும் அரச மரங்களும் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதத்தின் அடையாளமாகவே நாம் காண்கின்றோம்.

தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமிக்கவும், கபளீகரம் செய்யவும் தர்மத்தின் மதமான பௌத்தத்தையே சிங்கள பௌத்தமாக்கியுள்ளதோடு புத்தரையும் சிங்கள புத்தராக்கி தமிழர்களை அச்சத்திற்குள் தள்ளியதும் பயங்கரவாதமே. இந்நிலையில் அஹிம்சையின் தீபமான திலீபனை பயங்கரவாதியாக்குவதும், தமிழர்களை பயங்கரவாதிகளாகவே தொடர்ந்து வைத்திருக்க நினைப்பதும் யாருடைய அரசியலுக்காக?

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்துவதும், முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுப்பதும், மாவீரர்களை நினைவு கூருவதும், நாம் முகம் கொடுத்த யுத்த கால அனுபவங்களை இலக்கியமாக்கி நூல் வடிவில் ஆவணமாக்குவதும், பாடல்கள் பாடுவதும், அகிம்சை தீபத்தினை நினைவு கூர்ந்து அவ் வழியில் எம் அரசியலை முன்னெடுக்க முனைவதும் எவ்வாறு பயங்கரவாதமாகும்? தொடர்ந்தும் எங்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து ஒடுக்கி அரசியல் செய்வதே பயங்கரமாதமாகும்.

வடக்கு-கிழக்கு தமிழர்கள் தங்கள் தேசிய அடையாளங்களை பாதுகாத்து அரசியலில் கௌரவத்துடன் தலை நிமிர்ந்து வாழக் கூடாது என்பதுவே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அரசியல் சித்தாந்தமாகும். அதற்காகவே அரசியல் கட்டமைப்பும் வரையப்பட்டுள்ளது. அதுவே பயங்கரவாதம்.

இத்தகைய சூழ்நிலையில் அகிம்சை வழியில் ஜனநாயக வழியில் எம்மை கட்டமைத்துக் கொள்ள இடமளிக்காது தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் எம்மை இன அழிப்பு செய்வதை தடுத்திட வேண்டும் எனவும் சர்வதேசத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

வடக்கு-கிழக்கு தமிழர்கள் தங்கள் அரசியல் தலைமைத்துவத்தை தேர்ந்தெடுத்து தசாப்தங்கள் கடந்துவிட்டன. அந்த அரசியல் தலைமைத்துவத்தோடு உயிர் தியாகம் ஆனவர்களுக்கு மக்கள் தங்கள் மனதிலே சிலைகளை எழுப்பி நீண்ட காலமானதன் வெளிப்பாடுதான் தியாகத் தீபம் திலீபனுக்கான சிலை.

அத்தகைய சிலையினை பொலிசார் கொண்டு சென்றதைத் தொடர்ந்து எங்கள் தேசத்தில் பால் குடிக்கும் பிள்ளைகளுடைய உள்ளத்திலும் நீங்களே திலீபனின் சிலையை உருவாக்கி விட்டீர்கள்.

எமது தாயக அரசியல் கட்சிகளுக்கிடையிலும், சிவில் சமூகங்களுக்கிடையிலுமான இடைவெளியை அகற்றி தேசியத்திற்காக ஒன்று சேர வேண்டும் என்ற மக்கள் குரல் நீண்டகாலமாக ஒலித்துக்கொண்டிருகையிலே தியாகி திலீபனின் சிலை அகற்றப் பட்டமை அகிம்சை தீபத்தின் முன்றலில் எம்மை ஒன்று சேர வைத்துள்ளது.

மட்டு மயிலத்தமடு – மாதவனை கால்நடைப் பண்ணையாளர் முறைப்பாடு!

02.10.2026

மட்டக்களப்பு, மயிலத்தமடு மற்றும் மாதவனை பகுதிகளைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர் தங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சனைகள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகரிடம் நேரில் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

மயிலத்தமடு பகுதியில் சட்டவிரோதமாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொலிஸ் பிரிவினர் அங்கு வந்து பண்ணையாளரை அச்சுறுத்துவதோடு, அவர்களின் வாடிகளைப் பிரித்துச் செல்லுமாறு வற்புறுத்துவதாகப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், அப்பகுதியில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும், யானை போன்ற வனவிலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தங்களின் மாடுகள் சுடப்பட்டு கொல்லப்படும் சம்பவங்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பண்ணையாளர்களுடன் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், மகாவலி மற்றும் வனப்பரிபாலனத் துறை அதிகாரிகளுடன் இணைந்து நாளை நேரில் வந்து கள நிலவரத்தை ஆராய்ந்து உரிய தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

எனினும், தங்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை இதனைத் தற்காலிக ஆறுதலாக மட்டுமே ஏற்றுக்கொள்வதாகவும், பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நிரந்தரத் தீர்விற்காகக் காத்திருப்பதாகவும் மயிலத்தமடு கால்நடை வளர்ப்பு பண்ணையாளர் சங்கத் தலைவர் சின்னத்தம்பி நிமலன் மற்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மயிலத்தமடு பகுதியில் சட்டவிரோதமாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொலிஸ் பிரிவினர் தங்களை அச்சுறுத்துவதாகவும், அமைக்கப்பட்டிருக்கும் வாடிகளை உடனடியாகப் பிரித்துச் செல்லுமாறு வற்புறுத்துவதாகவும் பண்ணையாளர் கவலை தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் தொடர்ச்சியாக நடைபெறும் காடழிப்பு காரணமாகக் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வனவிலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தங்களின் மாடுகள் சுடப்பட்டுக் கொல்லப்படும் சம்பவங்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

யாழ். நல்லூரில் அணையா விளக்கு போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்!

02.10.2026

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் வணக்கத்துகாக வைக்கப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல திலீபனின் சிலையை சிறீலங்காப் பொலிசார் பெயர்த்து எடுத்து சென்றமையை கண்டித் தும், சிலையை மீள அவ்விடத்தில் நிறுவ வேண்டும் எனவும் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட அணையா விளக்கு போராட்டம் நேற்றைய நாள் வெள்ளிக்கிழமையுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டவுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயம் முன்பாக கடந்த புதன்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெற்று வந்த நிலையில், நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை இறுதிநாள் போராட்டம் மக்கள் எழுச்சி போராட்டமாக இடம்பெறவுள்ளது.

மாலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு, போராட்டம் தற்காலிகமாக நிறுத்தபட்டுள்ளது.

போராட்டத்தின் நிறைவினை அடுத்து , காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வேலன் சுவாமி உள்ளிட்ட மதகுருமார்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

காணிகளை விடுவிக்கக் கோரி யாழ். மயிலிட்டியில் தொடரும் போராட்டம்!

02.10.2026

யாழ். வலிகாமம் (வலி) வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி , காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் ”கொமாண்டோ” பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 24ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப் பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் 24ஆவது வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னடுத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். புங்குடுதீவு பாடசாலை மாணவர் பேரணி!

02.10.2026

சர்வதேச சிறுவர் நாளை முன்னிட்டு யாழ். புங்குடுதீவைச் சேர்ந்த பாடசாலை மாணவரின் கவனயீர்ப்பு பேரணி வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்றது.

மாணவர் பேரணியாக புங்குடுதீவு மாகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகி பெருங்காட்டு சிவன் ஆலயம் வரை நடைபவனியாக சென்று நிறைவடைந்தது.

பேரணியில் கலந்து கொண்ட மாணவர், சிறுவர் பாதுகாப்பை உறுதி செய், கல்விக்கு முன்னுரிமை வழங்கு, தீவக ஆசியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய், புங்குடுதீவின் நடுவே அமைந்த மதுபான சாலையை அகற்று போன்ற விடையங்களை வலியுறுத்தி சிறுவர் நாளில் கவனயீர்ப்பு பேரணி இடம் பெற்றது.

நினைவேந்தும் உரிமையை உறுதிப்படுத்துங்கள்... ஐநா மனித உரிமைகள் ஆணையாளருக்கு 16 பொது அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை!

02.10.2026

தியாகதீபம் நினைவேந்தும் உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி ஐநா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்க்கர் டுர்க்கிடம் 16 பொது அமைப்புக்கள் கையெழுத்திட்ட மஜகர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிராந்தியக் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

குறித்த மஜகரில் தெரிவிக்கப்பட்டதாவது தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானித்துக்கொள்வதற்கான மக்களின் சுயநிர்ணய உரிமை சர்வதேச மனித உரிமைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும்.

சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் (ICCPR) பிரிவு 1, அனைத்து மக்களுக்கும் தமது அரசியல் நிலையைச் சுதந்திரமாகத் தீர்மானித்துக் கொள்வதற்கும், தமது பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுப்பதற்குமான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களும் தமது அரசியல் உரிமைகள் மற்றும் அரசியல் எதிர்காலம் தொடர்பான கோரிக்கைகளை வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வழிமுறைகளில் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அவற்றுள் அகிம்சை வழியிலான அரசியல் போராட்டமும் முக்கியமான ஓர் அங்கமாக அமைந்துள்ளது. அதன் குறிப்பிடத்தக்க வரலாற்று அடையாளங்களில் ஒருவராகவே தியாகதீபம் தமிழ் மக்களின் கூட்டு நினைவில் நிலைத்திருக்கின்றார்.

1987 ஆம் ஆண்டு, இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரம் மற்றும் உணவு எதனையும் உட்கொள்ளாது மேற்கொண்ட உண்ணாநோன்புப் போராட்டம் அவரது உயிரிழப்புடன் முடிவடைந்தது.

தனது அரசியல் கோரிக்கைகளை ஆயுதமின்றி, தனது உடலையே போராட்டத்தின் ஊடகமாக்கி வெளிப்படுத்திய இந்நிகழ்வு தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலும் கூட்டு நினைவிலும் ஆழமான இடத்தைப் பெற்றுள்ளது.

உலகிற்கு அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை எடுத்துக் காட்டிய மகாத்மா காந்தியின் தேசமான இந்தியாவின் அமைதிப் படையிடம் முன்வைக்கப்பட்ட இந்த அகிம்சை வழிப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது.

அதனாலேயே தியாகதீபம் தமிழ் மக்கள் நீண்டகாலமாக நினைவுகூர்ந்து வருகின்றனர். இந்த நினைவேந்தல் என்பது தனிநபர் ஒருவரை நினைவுகூரும் செயற்பாடு மட்டுமல்ல; ஒரு சமூகத்தின் கூட்டு நினைவு, வரலாறு, அரசியல் வெளிப்பாடு மற்றும் பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றுடனும் தொடர்புடையதாகும்.

அமைதியான நினைவேந்தல் செயற்பாடுகள் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தால் பாதுகாக்கப்படும் பல்வேறு உரிமைகளுடன் தொடர்புடையவை.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் (UDHR) பிரிவுகள் 19 மற்றும் 20, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் அமைதியான ஒன்றுகூடல் உரிமையையும் அங்கீகரிக்கின்றன.
அதேபோன்று, இலங்கையும் அரசுத் தரப்பாக உள்ள ICCPR-இன் பிரிவுகள் 19 மற்றும் 21, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் அமைதியான ஒன்றுகூடல் உரிமையையும் பாதுகாக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் General Comment No. 37 அமைதியான ஒன்றுகூடல் உரிமையின் பாதுகாப்பையும், அதன்மீதான கட்டுப்பாடுகள் சட்டபூர்வமானவையாகவும் அவசியமானவையாகவும் அளவானவையாகவும் இருக்க வேண்டியதையும் வலியுறுத்துகின்றது.

மேலும், கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் மோதல்களுக்குப் பிந்தைய சூழல்களில் நினைவுகூரல் (Memorialization) என்பது உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமைக்கான உத்தரவாதங்களுடன் தொடர்புடைய முக்கியமான செயல்முறையாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பொறிமுறைகளால் அணுகப்பட்டுள்ளது.

எனவே, அமைதியான நினைவேந்தலை அரசினால் வழங்கப்படும் ஒரு “அனுமதி” அல்லது “சலுகை” என்ற அடிப்படையில் மட்டும் அணுக முடியாது; அது கருத்து வெளிப்பாடு, அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கூட்டு நினைவு ஆகிய மனித உரிமைகளின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும்.

இந்தப் பின்னணியில், தியாகதீபம் நினைவாலயம் தொடர்பான அரச நிர்வாகப் பின்னணியும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். குறித்த நினைவாலயத்தை அமைப்பதற்காக இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அரச நிதி ஒதுக்கப்பட்டு, உரிய அரச நிர்வாக நடைமுறைகளின் ஊடாக அந்நிதி விடுவிக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தியே குறித்த நினைவாலயம் மீள்நிர்மாணப் பணிகளின் ஆவண ஆதாரங்கள் காணப்படுகின்றன.

எனவே, குறித்த நினைவாலயம் அரச நிர்வாக நடைமுறைகளுக்கு முற்றிலும் புறம்பாக உருவாக்கப்பட்ட ஒன்றாக மட்டும் சித்தரிக்கப்பட முடியாது.

இத்தகைய பின்னணியில், தமிழ் மக்களின் கூட்டு நினைவில் அகிம்சை வழிப் போராட்டத்தின் முக்கிய அடையாளமாக விளங்கும் தியாகதீபம் திலீபனின் திருவுருவச்சிலை குறித்த நினைவாலயத்திலிருந்து அகற்றப்பட்டமை, தமிழ் மக்களின் நினைவு, அரசியல் வெளிப்பாடு மற்றும் அமைதியான நினைவேந்தல் உரிமைகள் தொடர்பில் தீவிரமான கவலையை ஏற்படுத்துகின்றது.

அதேவேளை, தமிழ் மக்கள் கடந்த காலங்களில் தமது நினைவேந்தல்களை எவ்வித தடைகளுமின்றி மேற்கொண்டனர் என்ற தோற்றத்தையும் உருவாக்கக்கூடாது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள், கண்காணிப்புகள், தடைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்த அச்சங்களுக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் நினைவேந்தல்களை முன்னெடுத்து வந்ததாக மனித உரிமை அமைப்புகளும் பாதிக்கப்பட்ட சமூகங்களும் தொடர்ச்சியாகக் கூறிவந்துள்ளன.

எனவே, எமது கோரிக்கை கடந்த காலத்தில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஓர் “அனுமதியை மீண்டும் வழங்குங்கள்” என்பதல்ல. மாறாக, தமிழ் மக்கள் தமது இறந்தவர்களையும், தமது வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவர்களையும், தமது கூட்டு வரலாற்று அனுபவங்களையும் அச்சுறுத்தல், கண்காணிப்பு, தேவையற்ற தலையீடு மற்றும் தடைகள் இன்றி அமைதியாகவும் சுதந்திரமாகவும் நினைவுகூரக்கூடிய மனித உரிமைச் சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ஆகவே, தியாகதீபம் திருவுருவச்சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறும், தமிழ் மக்களின் அமைதியான நினைவேந்தல் உரிமை மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், சம்பந்தப்பட்ட ஐ.நா. விசேட நடைமுறைகள், சர்வதேச நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றை விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பாக, நினைவேந்தல்களின் போது அச்சுறுத்தல், கண்காணிப்பு மற்றும் தேவையற்ற தலையீடுகள் இடம்பெறாத சூழலை உறுதிப்படுத்தவும் அமைதியான நினைவேந்தல்களின் மீதான எந்தவொரு கட்டுப்பாடும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் சட்டபூர்வத்தன்மை, அவசியம் மற்றும் அளவுத்தன்மை ஆகிய நியமங்களுக்கு உட்பட்டதாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.

அகற்றப்பட்ட தியாகதீபம் திருவுருவச்சிலையை அதன் நினைவாலயத்தில் மீள நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகின்றோம்.

நினைவேந்தல் என்பது அரசினால் வழங்கப்படும் ஒரு சலுகையாக மட்டும் அணுகப்பட வேண்டியதல்ல; அது கருத்து வெளிப்பாடு, அமைதியான ஒன்றுகூடல் மற்றும் ஒரு சமூகத்தின் கூட்டு நினைவு ஆகிய மனித உரிமைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

தமிழ் மக்கள் தமது வரலாற்றையும் நினைவுகளையும் அச்சமின்றி, அமைதியாகவும் சுதந்திரமாகவும் நினைவுகூரக்கூடிய சூழலை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

இவ்விடயத்தில் தங்களது தலையீடும் தொடர்ச்சியான அவதானிப்பும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு முக்கியமான பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும், எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

www.thuyarpakirvu.com

யாழ். தையிட்டியில் சட்டவிரோத விகாரைக்குள் புதிய கட்டுமானம்: தடுத்து நிறுத்துமாறு காணி உரிமையாளர் கோரிக்கை!

03.10.2026

யாழ்.தையிட்டி சட்டவிரோத விகாரைக்குள் சட்டவிரோத கட்டடங்கள் தொடர்ச்சியாக கட்டப்பட்டு வருவதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினரும், தையிட்டி விகாரைக்காக அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களில் ஒருவரான சாருஜன் தெரிவித்துள்ளார்

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதியில் புதிய கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்படுவதாக எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அது தொடர்பில் தெரியப்படுத்தினேன்.

அதனை அடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த எமது சக உறுப்பினர்கள் மூவருமாக நாம் விகாரை அமைந்துள்ள பகுதிக்கு சென்றோம்.

அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் மற்றும் பொலிசார் எம்மை விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

இந்த அரசாங்கம் மக்களின் காணி மக்களுக்கு என கூறி வருகின்றனர். புதிய அரசாங்கம் வந்து இரண்டு வருடங்கள் கடந்தும் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிப்போம் என்றவர்கள் விடுவிக்கவில்லை. ஆனால் தற்போதும் விகாரை அமைந்துள்ள காணிகளுக்குள் தொடர்ச்சியாக சட்டவிரோத கட்டுமானங்கள் இடம்பெற்று வருகின்றன.

காணிகளை விடுவிப்போம் என கூறி வரும் அரசாங்கம் சட்டவிரோத கட்டுமான பணிகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என கோருகிறோம் என தெரிவித்தார்.

மட்டு. திராய்மடுக் கிராமத்தில் மதுபானம், போதைப்பொருள் விற்பனையை ஒழிக்கக் கோரி மக்கள் போராட்டம்!

04.10.2026

மட்டக்களப்பு திராய்மடு கிராமத்தில் (சுவிஸ் கிராமம்) நீண்ட காலமாக சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) மற்றும் போதைப் பொருள் விற்பனை இடம் பெற்று வருகிறது எனவே இதனை இல்லாது ஒழிக்குமாறு கோரி திராய்மடுவில் நேற்று சனிக் கிழமை (03) மாலை ஆர்ப்பாட்ட த்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு ஊழல் மோசடிக்கு எதிரான அமைப்பின் ஏற்பாட்டையடுத்து நேற்றைய நாள் மாலை 5.00 மணிக்கு திராய் மடுவில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டனர்.

இதனை அடுத்து இந்த சட்டவிரோத மதுபான விற்பனையால் சிறுவர்களின் கல்வி பாதிப்பு இந்த வியாபாரத்தை முற்றாக பொலிசார் ஒழிக்க வேண்டும். இந்த சட்டவிரோத வியாபாரிகளுடன் சில பொலிசாருக்கும் தாடர்பு உள்ளது. எனவே இதற்கு எதிராக சிறீலங்கா ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும், இந்த சட்டவி ரோத கசிப்பு வியாபாரத்தால் கிராமமே அழியும் எனவே சர்வ தேச மது ஒழிப்பு நாளான இன்று (நேற்று) சட்ட விரோத மதுபான விற்பனையில் இருந்து கிராமத்தை பாது காத்து தரவும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் இரவில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பெண்கள் கைகளை பிடித்து இழுத்து ஒரு இலட்சம் தருவதாக அட்காசம் புரிந்து வருகின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடு தொடர்பாக கொக்குவில் பொலிசாருக்கு முறைப்பாடு தெரிவித்தும் பொலிசார் கசிப்பு வியாபாரி மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை.

எனவே சட்டவிரோத மதுபான வியாபாரிகள் மற்றும் அதற்கு உடந்தையாக இருக்கும் பொலிசாரிடம் இருந்து இந்த கிராமத்தை ஜனாதிபதி பாதுகாத்து தருமாறு கோஷங்கள் எழுப்பி

சுலோகங்கள் ஏந்தியவாறு ஒரு மணித்தியாலம் மாலை 6.00 மணி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து விட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இராணுவத்தின் பிடியிலுள்ள உப்புமால் வீதியை விடுவிக்கவேண்டும்!

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

04.10.2026

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு அருகில், தற்போது இராணுவத்தின் பிடியிலுள்ள உப்புமால் வீதியை மக்கள் பாவனைக்காக விடுவிக்கவேண்டுமென வலியுறுத்திய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த வீதி விடுவிப்பின் முன்னேற்ற நிலைகுறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் குறித்த உப்புமால் வீதியை விடுவிப்பது தொடர்பில் தாம் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுவருவதாக தெரிவித்த இராணுவ அதிகாரி, விரைவில் தமது நிலைப்பாடு அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தற்போது மூடப்பட்டு பயன்பாடின்றிக் காணப்படும் முல்லைத் தீவு மாவட்டசெயலகத்திற்கு அருகிலுள்ள உப்புமால் வீதியை திறப்பது தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்தது.

குறிப்பாக கடற்கரைப் பகுதிகளில் ஆழிப்பேரலை போன்ற பேரனர்த்தங்கள் ஏதேனும் ஏற்பட்டால் செல்வபுரம், கோயில் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான ஒரு போக்குவரத்து மார்க்கமே உப்புமால் வீதி எனச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பர் ரவிகரன், அவ்வீதியை விடுவிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் அந்தப்பகுதியில் 591ஆவது படைப்பிரிவுத் தளபதியின் வதிவிடம் இருப்பதால், அந்த வீதி தடைசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், அவ்வீதியை விடுவிப்பதற்கு இராணுவத்திடம் கோரிக்கை முன்வைக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய சூழலில் கடந்த 01.10.2026அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் குறித்த உப்புமால் வீதியை விடுவிக்க வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அவ்வீதியை விடுவிப்பதன் முன்னேற்ற நிலைதொடர்பிலும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போதே குறித்த உப்புமால் வீதியை விடுவிப்பதுதொடர்பான கலந்துரையாடல்களில் தாம் ஈடுபட்டுவருவதாக தெரிவித்த இராணுவ அதிகாரி, தமது நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார்.

கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை நீதிமன்றில் ஒப்படைத்த சிறீலங்காப் பொலிசார்!

05.10.2026

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவ சிலையை பொலிசார் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் பரப்படுத்தியுள்ளனர்.

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் காணப்பட்ட ஈகைச்சுடர் லெப். கேணல் தீலீபனின் திருவுருவ சிலையை கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் எடுத்து சென்று இருந்தனர்.

இந்நிலையில் குறித்த சிலையை யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிசார் பரப்படுத்தியுள்ளனர்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை தொடர்பாக பார்த்தீபன் மற்றும் மயூரனிடம் 03 மணி நேரம் சிறீலங்கா பொலிசார் விசாரணை!

05.10.2026

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை வைத்தமை தொடர்பிலான விசா ரணைகளில், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட இரு வரிடம் பொலிசார் 3 மணி நேரம் விசாரணைகளை மேற் கொண்டு, வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் இருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலையை கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் பொறுப் பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் எடுத்து சென்று இருந்தனர்.

அதனை தொடர்ந்து சிலை வைத்த சம்பவம் தொடர்பில் பொலிசார் விரைவான விசாரணைகளை ஆரம்பித்து, யாழ்ப் பாணத்தில் உள்ள பிளாஸ்ரிக் தொழிற்சாலைகளில் கடுமை யான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதேவேளை சிலை வைப்பு தொடர்பில், யாழ். மாநகர சபை உறுப்பினர் உள்ளிட்ட 06 பேரிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ள பொலிசார் இன்றைய நாள் திங்கட்கிழமை நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆவண காப்பக செயற்பாட்டளர் வரதராஜா பார்த்தீபன் ஆகியோரிடம் வாக்கு மூலம் பெற யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் அழைத்திருந்தனர்.

அந்நிலையில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் பத்மநாதன் மயூரன், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஆவண காப்பக செயற்பாட்டளர் வரதராஜா பார்த்தீபன் ஆகியோரிடம் காலை 09.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலான மூன்று மணி நேரம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து பொலிசார் வாக்கு மூலங்களை பெற்றனர்.

2026.10.04

மட்டு. மயிலத்தமடு – மாதவனை பண்ணையாளரின் போராட்டம் 1500 நாட்களைக் கடந்துள்ள போதிலும் நிரந்தரத் தீர்வில்லை!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ்

05.10.2026

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மயிலத்தமடு – மாத வனை மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்கள் தமது நியாய மான கோரிக்கைகளுக்காக 1,500 நாட்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும், இதுவரை அவர்களுக்கு எவ்வித நிரந்தரத் தீர்வும் வழங்கப்படாமல் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகப் பிரி விலும் 'திபுலபொத்தானை' என்ற பெயரில் கிராமம் எதுவும் கிடையாது. எனினும், தற்போது பெரியமாதவனைப் பகுதி யானது 'திபுலபொத்தானை' என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பண்ணையாளர்களால் பாரம் பரிய மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மயிலத்த மடு – மாதவனைப் பகுதிகள், தற்போது சேனைப் பயிர்ச்செய்கை என்ற போர்வையில் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு வரு கின்றன.

அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதோடு, பண்ணையாளர்களை அப்பகுதியிலிருந்து அச்சுறுத்தி வெளியேற்றும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நல்லிணக்கம் என்ற பெயரில் இரு தரப்பினரையும் ஒரே மேய்ச்சல் நிலத்தைப் பயன்படுத்த அனுமதிப்பது, பண் ணையாளர்களை அப்பகுதியிலிருந்து படிப்படியாக நிரந்தரமாக வெளியேற்றுவதற்கான ஒரு மறைமுக நடவடிக்கையாகவே அமையும் என தர்மலிங்கம் சுரேஷ் எச்சரித்துள்ளார்.

இந்தநிலை தொடருமானால், அப்பகுதியின் பாரம்பரியக் கால் நடை வளம் பெருமளவில் அழிவடையும் அபாயம் காணப் படுகிறது.

அத்துடன், பண்ணையாளர்களின் இந்த நியாயமான உரிமைப் போராட்டத்தை பல்வேறு தரப்பினரும் தமது சுயநல அரசியல் மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண் டதால், பண்ணையாளர்களின் கோரிக்கைகள் மலினப்படுத்தப் பட்டு அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட் டுள்ளது.

எனவே, மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தையும், அப்பகுதியின் கால்நடை வளத்தையும் பாதுகாக்கும் வகையில், அரச தரப்பு உடனடியாக தலையிட்டு நிரந்தரமானதும் நியாயமானதுமான தீர்வை வழங்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன் னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் வலியுறுத் தியுள்ளார்.

www.sangathamil.com

லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரர்களின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல்

05.10.2026

லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரண்டு மாவீரரின் 39ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றைய நாள் திங்கட்கிழமை நினைவுகூரப்பட்டது.

வல்வெட்டித்துறை தீருவில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில், பொது சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து உயிர்நீத்த 12 மாவீரரின் நினைவாக சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்திய அமைதி படையினர் நிலை கொண்டிருந்த கால பகுதியில் பருத்தித்துறை கடல் பகுதியில் படகில் பயணித்துக்கொண்டிருந்த லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உள்ளிட்ட 12 பேரையும் சிறீலங்கா சிங்களக் கடற்படையினர் கைது செய்து, காங்கேசன்துறை சிறீலங்காக் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து பலாலி சிறீலங்கா இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து கொழும்புக்கு அழைத்து செல்லப்படவிருந்த நிலையில் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி 12 பேரும் "சயனைட்"உட்கொண்டு வீரச்சாவடைந்தனர்.



நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கானபெரும் புரட்சிக்குத் தயாரகவேண்டும்.

–ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்கள்–

www.sangathamil.com

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியின் கருத்தை வடக்கு கடல் தொழில் சமூகம் வரவேற்கிறது!

வடமாகாணக் கடற்தொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதி அன்னலிங்கம் அன்னராசா

08.10.2026

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கில் நாங்கள் பாதிக்கப்பட்டோம். அந்த பாதிப்பிலிருந்த எங்களுக்கு ஒரு நிவாரணியாக இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியின் கருத்தை பார்க்கிறோம் என வடமாகாண கடற்தொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதிகளான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழில் இன்றைய நாள் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை - இந்திய கடல் எல்லை தொடர்பாகவும், இந்தியாவில் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளோடு இலங்கைக்கு உரித்தான கச்சத்தீவைத் தாண்டி இந்திய மீனவர்கள் வர கூடாது என்றும், கச்சத்தீவு வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு சொந்தமான தீவு என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அந்த வலியுறுத்தலின் அடிப்படையிலே இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியும் கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தம், என்பதனை கூறியுள்ளார்.

இதை தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நீதிபதியின் கருத்துக்கு பிற்பாடாவது தமிழ்நாட்டிலே இருக்கின்ற 2,500 இலிருந்து 4,000 வரையான இழுவைமடி தொழிலாளர்கள் இலங்கை கடல் பகுதிக்கு தயவுசெய்து வராதீர்கள்.

நீதிபதியின் கருத்தை வடக்கு கடல் தொழில் சமூகம் வரவேற்கிறது.

நாங்கள் ஒரு தீர்வை நோக்கி நகரும் போது தற்போது நம்பிக்கை எழுந்திருக்கின்றது. அந்த நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கை கடற்படைக்கும் இருக்கின்றது. அதை அவர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்திய மத்திய அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் கரிசனை எடுத்து தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடல் பகுதிக்குள் வராமல் தடுக்க வேண்டிய பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

அது தொடர்பில் பாரத பிரதமர் நரேந்திர மோடி கவனம் செலுத்த வேண்டும் என கோருகிறோம்

அதேவேளை இதைவிட மிக முக்கியமான பொறுப்பு தமிழ்நாட்டு முதலமைச்சர் கையில் தான் உண்டு. தமிழ்நாட்டு முதலமைச்சர் தான் தமிழ்நாட்டிலே இந்த மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவே மாண்புமிகு முதலமைச்சர் ஜோசப் விஜய், மீன்வளத்துறை அமைச்சர், மீன்வளத்துறை அதிகாரிகளுக்கும் இது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீண்டகாலமாக தமிழக மீனவர்களால் வடக்கிலே நாங்கள் பாதிக்கப்பட்டோம். அந்த பாதிப்பிலிருந்த எங்களுக்கு ஒரு நிவாரணியாக இந்த உச்ச நீதிமன்ற நீதிபதியின் கருத்தை பார்க்கிறோம்.

அத்துடன் இனிமேல் இந்த கச்சத்தீவு பிரச்சனையை வைத்து மீனவர் முரண்பாட்டையோ, மீனவர்களுக்கு இடையிலான

விரிசலையோ ஏற்படுத்தாது தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களும் இந்த கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்.

அதேபோன்று தமிழ்நாட்டிலே இருக்கிற ஊடகங்களும் கடந்த காலங்களிலே தமிழக மீனவர்கள் முல்லைத்தீவில் கைது செய்யப்பட்டாலும், காங்கேசன்துறையில் கைது செய்யப்பட்டாலும், மன்னாரில் கைது செய்யப்பட்டாலும் "கச்சத்தீவுக்கு அண்மித்த பகுதியிலே மீன்பிடித்த போதுதான் கைது செய்யப்பட்டார்கள்" என செய்தியை வெளியிட்டீர்கள்.

இனியாவது இந்த நீதிமன்றத்தின் கருத்துரைக்கு அமைவாக கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது, கச்சத்தீவுக்கு அண்மையில் கைது செய்யப்பட்டால் அது இலங்கை கடல் பகுதி என்ற உண்மையான செய்தியை நீங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என தமிழ்நாட்டிலிருக்கின்ற அத்தனை ஊடகவியலாளரையும் ஊடக நிறுவனங்களையும் நாங்கள் தயவாக கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த சி.அ. யோதிலிங்கம் அவர்கள் காலமானார்!

09.10.2026

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழர்கள், மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த - ஆய்வு கட்டுரைகளை எழுதிய - விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுத்த தமிழ்த் தேசிய மற்றும் குடிமைச் சமூக செயற்பாட்டாளரான சி. அ. யோதிலிங்கம் அவர்கள் காலமானார்.

நேற்று வியாழக்கிழமை (08) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 8 மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற சத்திர சிகிச்சையை தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் காலமானதாக உறவினர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் தலைவரும், சட்டத்தரணியும், அரசியல் ஆய்வாளரும், ஓய்வுநிலை ஆசிரியருமான சி. அ. யோதிலிங்கம் குரல் அற்றவர்களின் குரலாகவும், சமூக நீதிக்காகவும், அநீதிக்கு எதிராகவும் அரசியல் போராட்டங்கள் பலவற்றில் முன்னின்று செயற்பட்டவர்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலை, மலையகத் தமிழ் மக்களின் உரிமைகள், அரசியலமைப்பு சார்ந்த பெருமளவு நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

மலையகத் தமிழ் மக்களும் இலங்கையின் அரசியலமைப்பில் தனித்துவமான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்களில் சி. அ. ஜோதிலிங்கம் முதன்மையானவர்.

மலையகத் தமிழ் மக்களின் அரசியல் அடையாளம், தேசிய இன உரிமைகள், அரசியலமைப்பு அங்கீகாரம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கருத்துகளை முன்வைத்து வந்துள்ளார்.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்

றடைந்து, அவர்களுக்கான உதவித் திட்டங்களையும் சமூகப் பணிகளையும் அவர் தனது மனைவியுடன் இணைந்து முன்னெடுத்துள்ளார். குறிப்பாக மீரியபெத்த மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் செய்த சேவைகள் அளப்பறியவை.

புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதரவுடன் மலையகத்தில் பல்வேறு உதவித் திட்டங்களை முன்னெடுத்ததுடன், நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் பகுதிகளுக்குச் சென்று பணியாற்றியமையும் அவரது சமூகப் பங்களிப்பின் முக்கிய அம்சமாகும்.

மலையக சமூக ஆய்வு மையத்துடனான அவரது தொடர்பும் செயற்பாடுகளும் மலையக மக்களின் சமூக, அரசியல் மற்றும் தேசிய அடையாளம் தொடர்பான விடயங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன.

மாற்று மே நாள் மற்றும் மலையக தேசிய பொங்கல் விழா உள்ளிட்ட நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளுடன் அவர் இணைந்து செயலாற்றியுள்ளார்.

மலையக மக்களின் உரிமைகள், அடையாளம் மற்றும் சமூக முன்னேற்றம் தொடர்பான விடயங்களில் சுமார் இரண்டு தசாப்தங்களாகத் தொடர்ந்து எழுதியும் கருத்துகளை முன்வைத்தும் வந்துள்ளார்.

மலையகப் பிரதேச இளைஞர்களிடையே அரசியல் அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதிலும் அவர் பங்களித்துள்ளார். அரசியலமைப்பு, அதிகாரப் பகிர்வு, மலையகத் தமிழ் தேசியம் உள்ளிட்ட விடயங்களில் இலவச வகுப்புகளை நடத்தி, இளைஞர்கள் தமது அரசியல் உரிமைகள் மற்றும் சமூகத்தின் எதிர்காலம் குறித்துப் புரிந்துகொள்ள சி. அ. யோதிலிங்கம் உதவியுள்ளார்.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

PSTA சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழில் போராட்டம்!

09.10.2026

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டPSTA சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி, இன்றைய நாள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிவில் அமைப்புகளின் கூடடமைப்பான மெசிடோ (MESIDO) அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், அதனை முழுமையாக இரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கும் நோக்கிலும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் (PTA) பதிலாக அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமே PSTA என அழைக்கப்படுகிறது.

குறித்த சட்ட வரைவு தொடர்பாகச் சிவில் சமூக அமைப்புகள், சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பல்வேறு கரிசனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக, பயங்கரவாதம் தொடர்பான வரையறைகள், கைது மற்றும் தடுப்புக்காவலுக்கான அதிகாரங்கள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், முன்மொழியப்பட்ட சட்டத்திற்கு எதிராக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல்வேறு கலந்துரையாடல்களும் எதிர்ப்புப் பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

யாழ். சங்கானைக்கு மதுபானசாலை வேண்டாம் எனக் கோரி மக்கள் போராட்டம்!

09.10.2026

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் புதிய மதுபான சாலைக்கு வழங்கிய அனுமதியை இரத்து செய்ய கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சங்கானை பேருந்து நிலையம் முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலகத்திற்கு சென்று பிரதேச செயலரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில், சங்கானை, கோப்பாய், தெல்லிப்பழை மற்றும் கரவெட்டி ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் தலா ஒன்று என்ற அடிப்படையில் புதிதாக நான்கு மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட காங்கேசதுறை பகுதியில் கொடுக்கப்பட்ட மதுபான சாலைக்கான அனுமதியை இரத்து செய்ய கோரி தெல்லிப்பழை சந்தியில் நேற்றைய நாள் வியாழக்கிழமை போராட்டம் முன˙னெடுக்கப்பட்டு, தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்று பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்திற்கு எதிராக மட்டக்களப்பில் போராட்டம்!

09.10.2026

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்திற்கு எதிராகவும், மக்களின் ஜனநாயக மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் இன்று (09) மட்டக்களப்பு நகரில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்ற இப்போராட்டமானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக அடிப்படை அமைப்புகள், காணாமலாக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டு ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்ட பேரணிப் பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு அட்டைகளை ஏந்தியவாறு கண்டனக் கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக "பிஎஸ்ரிஏ" சட்டமூலம் வேண்டாம்…!" என்ற பிரதான பதாகையுடன் திரண்ட போராட்டக்காரர்கள், "நாங்கள் கேட்டது

மாற்றம் ஆனால் கிடைத்தது ஏமாற்றம்!" என்ற வாசகம் அடங்கிய அட்டைகளை அதிகளவில் ஏந்தியிருந்தனர்.

அத்துடன் "அடக்குமுறைச் சட்டங்கள் எதுவும் வேண்டாம்!", "சட்டம் பாதுகாக்க வேண்டும் மாறாக பயமுறுத்தக் கூடாது!", "கேட்பது ஜனநாயகம் தருவது அடக்குமுறை" ஆகிய பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் அமைந்துள்ள இத்தகைய அடக்குமுறைச் சட்டமூலங்களை அரசு உடனடியாகக் கைவிட்டு, ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

இப்போராட்டத்தின்போது வெளியிடப்பட்ட அறிக்கையில், "பிஎஸ்ரிஏ" சட்டமூலமானது மக்களின் கூட்டம் கூடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துரிமை போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளை முடக்கும் நோக்கில் அமைந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டது.

பொலிஸ் அதிகாரி, இராணுவம், கடலோரக் காவல்படை ஆகிய





வற்றுக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பொதுமக்கள் கூட்டம் கூடுவதையும் தங்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதையும் தடுக்கவும், கைது செய்யவும் வழிவகை செய்யப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக, இச்சட்டமூலத்தின் சரத்து 19 மற்றும் 20இன் படி, பொலிசாருக்கு இருப்பது போல இராணுவம் மற்றும் கடலோரக் காவல்படைக்கும் சந்தேக நபர்களைக் கைது செய்யும், வீடுகளுக்குச் சென்று சோதனையிடும், பிடியாணை இல்லாமல் கைது செய்யும் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

மேலும், சரத்து 26இன்படி கைது செய்யப்பட்டவரை 48 மணித்தியாலங்களில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த வழிசெய்வது அரசியலமைப்பின் 13.2 உறுப்புரை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு எதிரானதாகும் என்றும், சரத்து 27இன்படி சந்தேக நபரை இரண்டு வருடங்களுக்குத் தடுத்துவைத்து விசாரிக்க அதிகாரம் அளிக்கப்படுவதாகவும், சரத்து 51இன்படி பொலிஸ் அதிகாரி ஆபத்து நிகழும் என கருதினால் பொதுமக்கள் கூட்டம் கூடுவதையோ அல்லது ஊர்வலம் செல்வதையோ தடுக்க முடியும் என்றும் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

கட்டமைப்பு மாற்றம், ஜனநாயகம் மற்றும் சுதந்திரமான வாழ்வு என உறுதியளித்து, 159 ஆசனங்களுடன் மக்கள் அதிபெரும்பான்மை ஆணையைக் கொடுத்துள்ள நிலையில், கொண்டுவரவுள்ள இச்சட்டத்தால் பொதுமக்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கவாதிகள், சிவில் அமைப்புகள் மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைக் குரல்கள் நசுக்கப்பட்ப் போகின்றன எனச் சுட்டிக்காட்டி, குறித்த சட்டமூலத்தை உடனடியாகக் கைவிடுமாறு தேசிய மக்கள் சக்தி அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தின் இறுதியில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம் ஆகியவற்றுக்கும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டு மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதிக் காணிகளை மீட்டுத்தருமாறு கால்நடை பண்ணையாளர்கள் கோரிக்கை!

09.10.2026

மட்டக்களப்பு - மயிலத்தமடு மற்றும் மாதவனை பகுதிகளில் பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றி, அத்துமீறி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இடமளிக்கும் வகையில் பொலிசாரும் மகாவலி அதிகார சபையும் செயற்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே, இந்நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்தி, தங்களது மேய்ச்சல் தரை காணிகளை மீட்டுத் தருவதற்கு சிறீலங்கா ஜனாதிபதியும் மக்கள் பிரதிநிதிகளும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இச்சந்திப்பில் கருத்து தெரிவித்த மயிலத்தமடு கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணையாளர் சங்கத் தலைவர் நிமலன் தெரிவிக்கையில், கடந்த யூன் மாதம் முதல் தாங்கள் இப்பகுதியில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும், இது தொடர்பாக பல தரப்பினரிடம் முறையிட்டும் எது வித பலனும் கிடைக்கவில்லை என்றும் கவலை வெளியிட்டார்.

"பயிர்ச்செய்கையில் ஈடுபட மாட்டோம் எனக் கூறிவிட்டு, இறுதியில் மகாவலி அதிகார சபை மூலம் அந்நிலங்கள் பிறருக்கு வழங்கப்பட்டுள்ளன. எங்களை அடர்ந்த காட்டுப்பகுதிகளில் மாடுகளை மேய்க்குமாறு கூறுகிறார்கள்.

காட்டில் கால்நடைகளுடன் வாழ முடியாத சூழ்நிலையே நிலவுகிறது. அரசாங்க அதிபரைச் சந்தித்து நிலைமையை விளக்கியபோதிலும் தீர்வு கிடைக்கவில்லை.

கடந்த 15 வருடங்களாக பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் எங்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன," என அவர் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ் பண்ணையாளர்கள் சிங்கள சகோதரர்களுடன் எவ்வித முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றும், சில அமைப்புகளும் பொலிசாருமே இந்த முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாகவும் அவர் சாடினார். பொலிசார் தினமும் தங்களை அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு வற்புறுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, தமிழ் பண்ணையாளர்கள் பயிர்களை அழிப்பதாக அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட காணொளிகள் மயிலத்தமடு பகுதியில் எடுக்கப்பட்டவை அல்ல என்றும், அவை அம்பாறை மாவட்டத்தின் திவிலபத்தான பகுதியில் எடுக்கப்பட்டவை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

தவறான காணொளிகளைப் பரப்பி தமிழ் பண்ணையாளர்கள் மீது பிழையான பிம்பத்தைக் கட்டமைக்க சில தரப்பினர் முயற்சிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, ஜனாதிபதி, சிவில் சமூக அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அனைவரும் உடனடியாக தலையிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தங்களது பாரம்பரிய மேய்ச்சல் தரையை மீட்டுத்தர வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார்.

ஊழலுக்குக் காட்டும் அக்கறையை காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் அரசு கட்டுவதில்லை!

மட்டு. வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ. அமலநாயகி

09.10.2026

ஊழல், இலஞ்சங்கள் விடயங்களுக்காக எடுக்கிற கரிசனையை இந்த அரசாங்கம் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, அவர்களுக்கு என்ன நடந்தது என்றொரு பொறுப்புக்கூறல் மற்றும் எந்தவொரு நகர்வும் இதுவரை நகர்த்தப்படவில்லை என மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி குற்றஞ்சாட்டியுள்ளார்.

எங்களுக்கு பிஎஸ்ரியும் வேண்டாம், பிரிஏயும் வேண்டாம் என்றொரு கோரிக்கையை இன்றைய தினத்தில் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் மக்கள் சார்பாக, பாதிக்கப்பட்ட ஒரு சமூகமாக, அனைத்து பொதுமக்கள் சார்பாக விடுக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்திற்கு எதிராகவும், மக்களின் ஜனநாயக மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் இன்று (9) மட்டக்களப்பு நகரில் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்ற இப்போராட்டமானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக அடிப்படை அமைப்புகள், காணாமலாக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் கூட்டு ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்ட பேரணிப் பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு அட்டைகளை ஏந்தியவாறு கண்டனக் கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக 'பிஎஸ்ரிஏ' சட்டமூலம் வேண்டாம்…!" என்ற பிரதான பதாகையுடன் திரண்ட அவர்கள், "நாங்கள் கேட்டது மாற்றம் ஆனால் கிடைத்தது ஏமாற்றம்!" என்ற வாசகம் அடங்கிய அட்டைகளையும் ஏந்தியிருந்தனர். மேலும், "அடக்குமுறைச் சட்டங்கள் எதுவும் வேண்டாம்!", "சட்டம் பாதுகாக்க வேண்டும் மாறாக பயமுறுத்தக் கூடாது!" மற்றும் "கேட்பது ஜனநாயகம் தருவது அடக்குமுறை" போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில்

அமைந்துள்ள இத்தகைய அடக்குமுறைச் சட்டமூலங்களை அரசு உடனடியாகக் கைவிட்டு, ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அ. அமலநாயகி,

போரினால் பாதிக்கப்பட்டு, காணாமலாக்கப்பட்டு, யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களாக இன்றைக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக காந்தி பூங்காவிலே இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை செய்கின்றோம். கடந்த காலங்களில் எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டதும், ஓர் இன அழிப்பு செய்யப்பட்டதும் இந்த PTA சட்டத்தின் ஊடாகத்தான். இன்று வரை எங்களுடைய உறவுகளைத் தேடுபவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இந்தச் சட்டங்களை வைத்துக்கொண்டு கடந்த கால அரசு செய்த குற்றங்கள், கடத்தல்கள், கொலைகள் போன்றவை கடந்த கால அரசுகளால் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தான் இடம்பெற்றன. 17 வருடங்கள் கழிந்தும், ஏன் 30, 35 வருடங்கள் கழிந்தும் இந்தச் சட்டங்களை வைத்துக்கொண்டு அரசு ஒவ்வொரு குடும்பங்களையும் அவல நிலைக்கு இந்த அரசாங்கங்கள் கொண்டுவந்தன.

ஆனால் இப்போது புதிதாக பிஎஸ்ரிஏ என்ற ஒரு சட்டத்தையும் கொண்டுவந்து எங்களுடைய உறவுகளைத் தேடும் உரிமையைக் கூட மழுங்கடிக்கிற நிலைமையாகத்தான் இந்த அரசு இன்னும் மிக மோசமான எங்களுடைய உறவுகளைக் கேட்கக் கூட இயலாத ஒரு பிஎஸ்ரிஏ சட்டத்தைக் கொண்டுவந்து எங்களை அந்த குரல்வளைகளை நெறித்து, எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கூட கேட்க இயலாத ஒரு சட்ட நடைமுறையைத்தான் கொண்டுவருகிறார்கள்.

ஆகவே, நாங்கள் கடந்த காலங்களில் பல போராட்டங்களை நடத்தியிருந்தோம். பல இடங்களில் பதிவு செய்திருந்தோம், எங்களுக்கு பிரிஏயும் வேண்டாம், பிஎஸ்ரிஏயும் வேண்டாம் என்று.

அதேபோன்றுதான் இதுவரை எங்களுடைய உறவுகளைத் தேடும் உரிமை இந்த நாட்டுக்குள் இல்லை. அதை இன்னும் ஒரு முறை சர்வதேச நாடுகளுக்கு எடுத்துரைக்கும் முகமாக இந்த அரசு பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்று சொல்லிக்கொண்டு மக்களை ஒடுக்கி, தங்களுடைய குரல்வளைகளை நெரித்து, தங்களுடைய உரிமைகளைக் கேட்கவிடாது தங்களுடைய நிலங்களை, தங்களுடைய உறவுகளை, தங்களுடைய உரிமைகளை, தங்களுடைய பேச்சுச் சுதந்திரத்தைக் கூட நடத்த முடியாதவாறு இந்த பிஎஸ்ரிஏ சட்டத்தைக் கொண்டுவந்து மக்களை ஒடுக்குவதாக காணப்படுகிறது. தமிழர்களாகிய நாங்கள், பாதிக்கப்பட்ட தரப்பாக இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஆகவே, இந்த அரசு உடனடியாக ஊழல், இலஞ்சங்கள் அந்தந்த விடயங்களுக்காகப் எடுக்கிற கரிசனையை, அரசாங்கம் வந்தும், இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, அவர்களுக்கு என்ன நடந்தது என்றொரு பொறுப்புக்கூறல், எந்தவொரு நகர்வும் இதுவரை நகர்த்தப்படவில்லை. ஆகவே, இந்த அரசிலும் நாங்கள் நம்பிக்கை இழந்துதான் சர்வதேச விசாரணை வேண்டும், சர்வதேசத்தின் ஊடாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறியவேண்டும் என்ற நோக்கோடு நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

அதைத் தடை செய்வதற்காகத்தான் இந்த அரசு PSTA சட்டத்தைக் கொண்டுவருகின்றது என்றொரு சந்தேகம் எங்களுக்குள் எழுகிறது. எமது உறவுகளுடைய நிலையையும் கண்டறிவதற்கான எங்களுக்கான ஒரு சுதந்திரத்தைத் தரவேண்டும். ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களாக நாங்கள் இந்த இடத்திலே கூற விரும்புவது எங்களுக்கு பிஎஸ்ரி யும் வேண்டாம், பிரிஏயும் வேண்டாம் என்ற ஒரு ஒரு கோரிக்கையை இன்றைய நாள் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழ் மக்கள் சார்பாக, இந்த இடத்திலே பாதிக்கப்பட்ட ஒரு சமூகமாக, அனைத்து பொதுமக்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை விடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

யாழ். கோப்பாய் வெளியில் 2ஆம் லெப். மாதியின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல்

10.10.2026

முதல் பெண் மாவீரரான மாலதி என அழைக்கப்படும் சகாயசீலி பேதுருப்பிள்ளையின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய நாள் சனிக்கிழமை யாழ்ப்பாணம், கோப்பாய் - கைதடி வீதியில் அவர் வீரச்சாவடைந்த இடத்தில் இடம்பெற்றது.

மண்ணின் உரிமைக்காகத் தன் இளமைக் காலத்திலேயே தன்னுயிரை ஈகம் செய்த முதல் பெண் ஆளுமை 2ஆம் லெப். மாலதி அவர்களின் 39-ஆவது ஆண்டு நினைவேந்தல் நாள் இன்றாகும்.

இந்நாளை முன்னிட்டு, இன்று 10.10.2026 காலை 9:15 மணி அளவில் யாழ் கோப்பாயில் உள்ள அவரது நினைவிடத்தில்

ஈகைச்சுடர் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தி, அக வணக்கத்துடன் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் செலுத்தப்பட்டது.

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் - 10.10.2026
உடையார்கட்டு, முல்லைத்தீவு

எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அந்நாட்டின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

17ஆவது வாரமாகவும் காணி விடுவிப்புப் போராட்டத்தை முன்னெடுத்த யாழ். பலாலி மக்கள்!

11.10.2026

சிறீலங்கா இராணுவம் கையகப்படுத்திவைத்துள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி பலாலி மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் நிலமீட்பு போராட்டம் இன்று 17 ஆவது வாரமாகவும் முன்னெடுக்கப்பட்டது.

பலாலி பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை மீளவும் தங்களிடம் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தி, மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன வருகின்றனர்.

நீண்டகாலமாக தமது சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ள நிலையில், வாழ்வாதாரத்தையும் பூர்வீக உரிமை களையும் மீட்டெடுப்பதற்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இந்நிலையில் பலாலி பகுதியை சேர்ந்த மக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் , இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை 17ஆவது வாரமாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதன் போது, எமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 36 வருடங்களாக வேறு இடங்களில் வசித்து வரு கிறோம். யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆகியும் எம்மை எமது சொந்த இடங்களில் இன்னமும் மீள் குடியேற்றவில்லை.

எங்கள் இறப்பாவது எங்கள் சொந்த மண்ணில் நிகழ வேண் டும் என்பதே எமது இறுதி ஆசையாகவுள்ளது

என அங்கிருந்த முதிவர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை கடும் வெய்யிலின் மத்தியில் போராட்டத்தில் ஈடு பட்டமையால், பெண்ணொருவர் மயங்கிய நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஏனையோர் உரிய முதலுதவியை செய்து நிழலில் அவரை இருத்தியிருந்த நிலையிலும், போராட்டத்திற்கு ஆதரவாக அவ்விடத்தில் போராட்டம் முடிவையும் வரையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் முதல் பெண் மாவீரர் மாலதியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

10.10.2026

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப். மாலதியின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளான இன்று சனிக் கிழமை (10.10.2026) காலை-09 மணியளவில் கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப் பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை யின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் மாலதியின் உருவப் படத்துக்கு முன்பாக ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு உருவப் படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப் பட்டு அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை, மன்னாரில் 1967 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி பிறந்த 2 ஆம் லெப் மாலதி 1987ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கோப்பாயில் இந்திய அமைதிப் படைக்கு எதிரான படை நடவடிக்கையின் போது மகளிர் படைப் பிரிவினரை வழி நடாத்திக் கொண்டிருந்த வேளையில் அவ ருக்கு இரு கால்களிலும் சூடுபட்டுப் படுகாயமடைந்து மிகுந்த இரத்தப்போக்கு ஏற்பட்டு அசைய முடியாத நிலையில் சயனைட்

அருந்தி வீரச் சாவைத் தழுவிக் கொண்டார். வீரச் சாவைத் தழுவும் போது மாலதிக்கு 20 வயது என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அந்நாட்டின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

யாழ். நெல்லியடியில் மதுபானச் சாலை வேண்டாம் என எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் போராட்டம்!

12.10.2026

யாழ்ப்பாணம், நெல்லியடி பகுதியில், புதிதாக மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி

வித்து கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மண்டான் கலைநேசன் சனசமூக நிலையத்திற்கு அருகில் இன்றைய நாள் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அங்கிருந்து பேரணியாக மண்டானில் அமைந்துள்ள மதுவரித் திணைக்களத்தின் முன்னால் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை

வெளிப்படுத்தினர்.

அதன் போது, நெல்லியடியில் மதுபானசாலை அமைப்பதற்கு எதிராகப் பொதுமக்களிடம் பெறப்பட்ட கையெழுத்துகள் அடங்கிய மகஜர், மண்டானில் அமைந்துள்ள மதுவரித் திணைக்

களத்தின் பொறுப்பு அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த மகஜர், மேலதிக நடவடிக்கைக்காக மதுவரித் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழ். கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல்!

12.10.2026

யாழ். கொக்குவில் பிரம்படி படுகொலையின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய நாள் திங்கட்கிழமை முன்

னெடுக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக பிரம்படி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் திகதி கொக்குவில் பிரம்படி பகுதியில் 50க்கும் மேற்பட்ட பொது மக்களை இந்திய இராணுவம் கொலை செய்திருந்தது. அவர்களின் நினைவாகவே நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். செம்மணியில் என்னை புதைத்து விட்டார்கள்
எனக்கு நீதி கிடைக்குமா?
முன்பள்ளி விளையாட்டு விழாவில் சிறுவனின் கோரிக்கை!

12.10.2026

யாழ் வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு சென் பிலிப் நேரிஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா செம் பியன் பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் மிக சிறப்பாக இடம்பெற்றது.

இவ் நிகழ்வின் இறுதியில் வினோத உடை எனும் நிகழ்வு இடம்பெற்றது குறித்த நிகழ்வில் சிறுவர் புனிதர்களின் வேடம் மற்றும் பலூன் வியாபாரி என வேடம் இற்று வந்த நிலையில் ஒரு சிறுவன் காரணமே இல்லாமல் என்னை பல ஆண்டுக்கு முன்னர் என்னை அம்மாவின் மார்பில் பால் அருந்திய க்கொண்டு இருக்கும் போது என்னை புதைத்து விட்டார்கள் எனக்கு நீதி கிடைக்குமா என வினோத உடை தரித்து வந்த சம்பவம் பார்வையாளர்கள் மற்றும் விருந்தினரிடம் நெகிழ்ட் சியை ஏற்படுத்தி உள்ளது .

தம்முடைய இறப்புக்கு நீதி கேட்ட சிறுவன் விருந்தினர் நீங்கள் யாராக வந்துள்ளீர்கள் என கேள்வி கேட்கும் போது சிறுவன் காரணமே இல்லாமல் செம்மணியில் என்னை புதைத்தார்கள் என பதிலளிக்க விருந்தினரின் கண்களில் கண்ணீர் சிந்த



தொடங்கியது .

பின்னர் ஏன் இப்போது வந்துள்ளீர்கள்..... என கேள்வி கேட்க என் இறப்புக்கும் என்னை போல் புதைக்கப்பட்ட வருக்கும் நீதி கேட்டு வந்துள்ளேன் அதனை தொடர்ந்து எங்கு இருந்து வந் துள்ளீர்கள்... என கேள்வி கேட்க எமக்கான நீதி இந்த அர சாங்கம் தரும் என கூறி எனுடன் புதைக்கப்பட்ட நண்பர்கள் அனுப்பி வைத்தார்கள் என தனது மழலை குரலால் பதில ளித்தார்.

அதனை தொடர்ந்து விருந்தினர் எங்கு இருந்து வந்துள்ளீர்கள். என அடுத்தடுத்து கேள்வியை கேட்கும் போது. எமக்கான நீதி இந்த அரசாங்கம் தரும் என கூறி எனுடன் புதைக்கப்பட்ட நண்பர்கள் அனுப்பி வைத்தார்கள் என செம்மணி மனிதப் புதைகுழிக்கான நீதி இந்த அரசாங்க கால கட்டத்தில் கிடைக் கும் என நம்புகிறேன் என கூறியுள்ளார்.

பின்னர் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என மனம் உடைந்த நிலையில் விருந்தினர் கேட்கும் போது உங்கள் பிள்ளைகள் நாங்கள் ஏன் எதற்கு என்றே தெரியாமல் விளை யாடிக்கொண்டிருந்த போது என்னை புதைத்தார்கள் எமக்கான நீதியை அநுர மாமாவிடம் வாங்கி தாருங்கள் என உணர்வு ரீதியாக கேட்கும் போது பார்வையாளர்கள் மத்தியில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

குறித்த நீதி கேட்ட சிறுவன் தன் உடைகள் முழுவதும் பல பதா கைகளை ஒட்டிய வண்ணம் காட்சி அளித்தார் பதாகைகளில் கூறப்படும் விடயங்கள் பின்வருமாறு.

"என் சின்னஞ்சிறு பாதங்களால் ஓடிப்பிடித்து விளையாட வேண் டிய வயதில், என்னை மண்ணுக்குள் புதைத்துவிட்டார்களே!"

"புதுமையான, அமைதியான யாழ்ப்பாணத்தை என் கண்க ளால் பார்க்க முடியாமல் போய்விட்டதே!"

"தாயின் மார்பில் பால் அருந்தக் காத்திருந்த எனக்கு, அடுத்து என்ன நடந்தது என்றே தெரியவில்லையே!"

"அம்மா அமைத்துத் தந்த வண்ணக் கனவுகளோடு உறங்கச் சென்ற என்னை, இருண்ட மண்ணுக்குள் உறங்க வைத்து விட்டார்களே!"

"நாங்கள் செய்த பாவம் தான் என்ன? ஐந்து வயதுக் குழந் தைக்கு மரண தண்டனை விதித்தது யார்?"

"என்னைப்போல் மண்ணில் புதைக்கப்பட்ட நூற்றுக்கணக் கான பிஞ்சுகளுக்கு இறுதிவரை நீதி கிடைக்காதா?"

"விளையாட்டுப் பொம்மைகளைக் கையில் வைத்திருக்க வேண்டிய வயதில், எங்கள் எலும்புகள் மண்ணுக்குள் கிடக் கின்றனவே!"

"ஒரு தலைமுறையின் கனவுகளையும் சந்ததியையும் ஒரே அடியில் அழித்துவிட்டார்களே, இது நியாயமா?"

"அன்றாடப் பள்ளிக்கூட மணிச்சத்தம் கேட்க வேண்டிய எனக்கு, அமைதியான சுடுகாட்டின் அமைதி மட்டுமே மிஞ்சியதா?"

"தாயின் அரவணைப்பையும் தகப்பனின் நேசத்தையும் அனு பவிக்க விடாமல் எங்களை ஏன் பிரித்தார்கள்?"

"என் சிரிப்புச் சத்தம் கேட்டிருக்க வேண்டிய வீடுகளில், இன்று என் நினைவுகள் மட்டுமே கண்ணீராக வாழ்கின்றன."

"உலகமே அமைதியைப் பற்றிப் பேசும்போது, எங்களைப் போன்ற பிஞ்சுகளின் கதறல் யார் காதிலும் விழவில்லையா?"

"காலங்கள் உருண்டோடினாலும், இந்தச் செம்மணி மண் சுமக்கும் எங்கள் வலிகளுக்கு என்றுதான் விடிவு வரும்?"

"எங்கள் உயிரைப் பறித்தவர்கள் சுதந்திரமாக வாழும்போது, நியாயம் கேட்கும் எங்கள் குரல் மட்டும் ஏன் காற்றில் கரை கிறது?"

"நாங்கள் வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையைத் திரும்பத் தர முடியாது; ஆனால் எமக்கான நீதியையாவது இந்த உலகம் தருமா?"

என கேள்வியாக கேட்க பட்டு இருந்தது.

இச் நெகிழ்ச்சி ஊட்டும் சம்பவம் தற்போது சமூக மட்டத்தில் மட்டு மன்றி அரசியல் தரப்பிலும் பேசு பொருளாக மாறியுள்ளது

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் தலைவரும் அரசியல் ஆய்வாளருமான சட்டத்தரணி சி. அ. யோதிலிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வு!

12.10.2026

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் தலைவரும் அரசியல் ஆய்வாளருமான சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கத்தின் இறுதி கிரியைகள் இன்றைய நாள் (12.10.2026) திங்கட்கிழமை நடைபெற்றது.

பிரபல அரசியல் ஆய்வாளரும், மூத்த சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் தலைவரும், ஓய்வுநிலை ஆசிரியருமான சி.அ. யோதிலிங்கம் அவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை தனது 70ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் கால மானார்.

வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட கட்டியை அகற்றுவதற்காக, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த வியாழக்கிழமை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சுமார் எட்டு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற சத்திர சிகிச்சையை தொடர்ந்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில் மறுநாள் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது புகழுடலுக்கு அரசியல்வாதிகள், சமூக செயற்பாட் டாளர்கள் , பொதுமக்கள் என பலரும் இறுதி வணக்கம் செலுத்தி வந்த நிலையில், இறுதி கிரியைகள் இன்றைய நாள் திங்கட் கிழமை, குப்பிழான் தெற்கு, வீரமனை பகுதியில் அமைந்துள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் இடம்பெற்றது, அவரது புக ழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, குப்பிழான் காடா கடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் குப்பிளான் பகுதியில் பிறந்த சி.அ. யோதிலிங்கம், தொழில் நிமித்தம் நீண்டகாலம் கொழும்பில் வசித்ததுடன், பின்னர் உரும்பிராயிலும் வசித்து வந்தார்.

அரசியல் ஆய்வாளர், எழுத்தாளர், கல்வியியலாளர் எனப் பல்துறை ஆற்றல்களைக் கொண்டிருந்த அவர், அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

1970ஆம் ஆண்டு அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக அனு மதிக்கான தரப்படுத்தல் முறைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினராகப் பங்கெடுத்து தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலிலும், ஈழத்து அரசியல் களத்திலும் ரமணி எனும் பெயரில் தீவிரமாக இயங்கி வந்தார்.

தமிழர் தேசத்தின் அரசியல் விடுதலைக்காக தனது 16ஆவது

வயதிலேயே செயற்படத் தொடங்கிய அவர், வாழ்வின் இறுதி வரை கொள்கை மாறாது உறுதியுடன் பயணித்தார். தமிழ்த் தேசிய அரசியல் வெளியில் தனக்கெனத் தனித்துவமான அடை யாளத்தையும் உருவாக்கினார்.

ஈழத்து அரசியல் மற்றும் தமிழ்த்தேசியம் தொடர்பான பல தசாப் தகால ஆய்வுகளில் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரை களையும், பல முக்கிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். மலையக மக்கள் தொடர்பான கொள்கை விவாதங்களை முன் னெடுத்ததுடன், மலையக மக்களின் உரிமைகளுக்காகவும்

தீபச்செல்வனின் தடுத்துவைக்கப்பட்ட இரு நூல்களையும் உடனடியாக விடுவிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவு!

12.10.2026

கிளிநொச்சியைச் சேர்ந்த எழுத்தாளர் பி. பிரதீபனால் இந்தியா வில் அச்சடிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இரு தமிழ் நூல்களை சிறீலங்கா சுங்கத் திணைக்களத்தினர் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது அவரின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தியாவின் சென்னையில் அச்சிடப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 288 நூல்கள் அடங்கிய தொகுதி, “தேசிய நல்லிணக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்” எனக் கூறி சிறீலங்கா சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

இத்தொகுதியில் ‘இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்’, ‘எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்’, ‘பயங்கரவாதி’ மற்றும் ‘சைனைட்’ ஆகிய நான்கு தலைப்பிலான புத்தகங்கள் அடங் கியிருந்தன.

இவற்றுள் ‘பயங்கரவாதி’ மற்றும் ‘சைனைட்’ ஆகிய நூல்கள் புனைகதைகள் என இலங்கை கலைக் குழுவினால் சான் றளிக்கப்பட்டதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட போதிலும், ‘இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்’ நூலின் 75 பிரதிகளையும் ‘எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்’ நூலின் 147 பிரதிகளையும் சுங்கத் திணைக்களத்தினர் தொடர்ந்து தடுத்து வைத்திருந்தனர்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய தலைமையிலான இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணையின் போது, சுங்கத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் அதிகார வரம்புகள் இன்றி பொறுப்புகளை ஒன்றன் மீது ஒன்று சாட்டி வந்தமை தெரியவந்தது.

அரச நிறுவனங்களுக்குள் தமிழ் மொழிப் புலமை இன்மையும், புத்தக அட்டையில் சித்தரிக்கப்பட்டிருந்த பிரிக்கப்பட்ட இலங்கை வரைபடம் குறித்த பயமுமே இந்த முதற்கட்டக் கைப்பற்றலுக்கு முக்கிய காரணம் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் 14(1)(a) உறுப்புரையின் கீழ் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள் ளதை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், தண் டனைச் சட்டக்கோவையின் 120 ஆம் பிரிவின் கீழ் சட்டப் பூர்வமான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க பிரதிவாதிகள் தவறி விட்டதாகவும், 2002 ஆம் ஆண்டிலேயே குற்றவியல் அவதூறு சட்டம் இலங்கையில் நீக்கப்பட்டுவிட்டதால், அரச அதிகாரி களுக்கு எதிரான அவதூறுகளைக் காரணம் காட்டி புத்தகங் களைக் கைப்பற்ற சுங்கத் திணைக்களத்திற்கு எந்த அதிகார மும் இல்லை என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் எழுத்தாளரின் பேச்சுச் சுதந்திரம் மட்டுமன்றி, சமத்துவத்திற்கான உரிமை (உறுப்புரை 12(1)), மொழி அடிப் படையிலான பாகுபாடற்ற தன்மை (உறுப்புரை 12(2)) மற்றும் சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் கலாசாரத்தைப் பேணுவதற்குமான உரிமை (உறுப்புரை 14(1)(f)) ஆகிய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது.

இதற்கமைய, தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு புத்தகங்களின் அனைத்துப் பிரதிகளையும் உடனடியாக விடுவிக்குமாறும், இது தொடர்பான இணக்கப்பாட்டு அறிக்கையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 02 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இவ் விசாரணையில் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத் தரணிகளான நடராஜா காண்டீபன், கலாநிதி விராஞ்சன் ஹேரத் மற்றும் எச். தமிழவள் காண்டீபன் ஆகியோர் ஆஜராகி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தை மீள் குடியமர்த்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை!

12.10.2026

வவுனியாவடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில், பட்டிக்குடியிருப்பு கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட தமிழ்மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் ஒன்றான விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடம் உருக்கமாக வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்துள்ளனர்.

அப்பகுதி மக்களின் முறையீட்டிற்கு அமைவாக கடந்த 11.10.2026 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த விண்ணாங்கம்பிட்டி பகுதிக்கு நேரில்சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். இதன்போதே அப்குதிமக்கள் தமது கிராமத்தை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு தமது மீள்குடியேற்றத்திற்குத் தடையாக வனவளத் திணைக்களம் செயற்பட்டுவருவதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் குறித்த விண்ணாங்கம்பிட்டி கிராமத்தினை மீள் குடியேற்றுவதுதொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியாவடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில், பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட விண்ணாங்கப்பிட்டி கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்ததாக விண்ணாங்கம்பிட்டி கிராமமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்தனர்.

குறிப்பாக 1984ஆம் ஆண்டில் அயற் கிராமமான ஒதியமலையில் 32 தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்பட்டமை மற்றும் பட்டிக்குடியிருப்பில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைச் சம்பவங்களையடுத்தே விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததாகவும் அப்பகுதி மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு, வவுனியா வடக்கு பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட கிராமங்கள் பலவும் மீள்குடியேற்றப்பட்டபோதும், விண்ணாங்கம்பிட்டிக் கிராமம் மாத்திரம் இதுவரை மீளக்குடியேற்றம் செய்யப்படாமல் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் சுட்டிக்காட்டினர்.

இத்தகையசூழலில் சில குடும்பங்கள் விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தில் அமைந்துள்ள தமது பூர்வீக காணிகளில் குடியேறி வசித்தபோது, அவ்வாறு மீளக்குடியேறிய மக்களை வனவளத் திணைக்தளத்தினர் அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றியதாகவும் அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையீடுசெய்தனர்.

அதேவேளை தமது பூர்வீக வாழ்விடமான விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தில் தம்மை மீள்குடியமர்த்துமாறு தாம் கிராம அலுவலர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேசசெயலரிடமும் பலதடவைகள் முறையிட்டபோதும் இதுவரை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் குறித்த விண்ணாங்கம்பிட்டி கிராமம் மீளக் குடியமர்த்தப்படாததால், அப்பகுதிக்குரிய மக்கள் தற்போது அயற்கிராமங்களில் உறவினர்களது வீடுகளிலும், வாடகைக்கும் தங்கி வாழ்வதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டது.

எனவே தமது பூர்வீக வாழ்விடமான விண்ணாங்கம்பிட்டிக் கிராமத்தினை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கையொன்றையும் முன்வைத்தனர்.

அந்தவகையில் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளையும், குறைபாடுகளையும் கேட்டறிந்துகொண்டதுடன், அந்தமக்களின் பூர்வீக வாழ்விடக்காணிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது பார்வையிட்டார்.

அத்தோடு வனவளத்திணைக்களம் விண்ணாங்கம்பிட்டி கிராம மக்களுடைய பூர்வீக வாழ்விடக் காணிகளை அபகரித்துவைத்துக்கொண்டு, அவர்களை அங்கு மீள்குடியேறவிடாமல் தடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

மேலும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாத விண்ணாங்கம்பிட்டி கிராமத்தின் மீள்குடியேற்றம் தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர்என உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன், பாராளுமன்றிலும் இதுதொடர்பில் வலியுறுத்தப்படுமெனவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், விண்ணாங்கம்பிட்டி கிராமத்தை மீள்குடியமர்த்துவது தொடர்பில் தம்மால் தொடர்ச்சியாக கவனஞ்செலுத்தப்படுமெனவுந் தெரிவித்தார்.

யாழ். செம்மணிக்கு நீதி கேட்ட பாலகனின் பெற்றோர் மற்றும் முன்பள்ளி ஆசிரியையிடமும் சிறீலங்காப் பொலிசார் விசாரணை!

13.10.2026

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முன்பள்ளி விளையாட்டு போட்டியில் வினோத போட்டியில் பாலகன் ஒருவர் செம்மணி புதைகுழிக்கு நீதி கோரிய நிலையில், பாலகனின் பெற்றோர் மற்றும் முன்பள்ளி ஆசிரியையிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்கு சென் பிலிப் நேரிஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்றைய நாள் திங்கட்கிழமை புனித பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

விளையாட்டு போட்டியின் இறுதியில் வினோத உடை போட்டியில், முன்பள்ளி பாலகர், பல்வேறு வேடங்கள் தரித்து போட்டியில் கலந்து கொண்டனர்.

அதில் ஒரு பாலகன் "பல ஆண்டுக்கு முன்னர் அம்மாவின் மார்பில் பால் அருந்திக்கொண்டு இருக்கும் போது என்னை புதைத்து விட்டார்கள் எனக்கு நீதி கிடைக்குமா?" என கோரி போட்டியில் கலந்து கொண்டான்.

இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில், மருதங்கேணியில் சிறீலங்காப் பொலிசார் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை பாலகனின் பெற்றோர் மற்றும் முன்பள்ளி ஆசிரியை ஆகியோரை மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

www.thuyarpakirvu.com

கனடியச் செய்திகள்

ஒன்ராரியோவின் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சிக்கு 30 மில்லியன் டொலர் முதலீடு!

01.10.2026

ஒன்ராரியோவின் தொழில்துறைகளில் செயற்கை நுண்ணறிவின் பொறுப்பான பயன்பாட்டை விரிவுபடுத்தவும், எதிர்கால வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வெக்டர் நிறுவனத்திற்கு 30 மில்லியன் டொலர் முதலீட்டை மாநில அரசு அறிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டுக்கான இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களும், ஒன்ராரியோ அமைச்சரவையின் தலைவரும் பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வர்த்தக அமைச்சருமான விக் ஃபெடெலி அவர்களும் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இந்த முதலீட்டின் மூலம், ஒன்ராரியோ நிறுவனங்கள் உலகத் தரமிக்க செயற்கை நுண்ணறிவுப் பொறியியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து செயற்பட முடியும். இதனால் புதிய தொழில்நுட்பங்களைப் பொறுப்புடன் நடைமுறைப்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், உலகச் சந்தையில் போட்டியிடவும் வாய்ப்பு உருவாகும்.

ஒன்ராரியோவில் தற்போது 1,600க்கும் மேற்பட்ட செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களும் சுமார் 30,000 வேலைவாய்ப்புகளும் உள்ளன. இத்தொழில்நுட்பத்தின் பயன்பாடு 2035 ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தில் 122 பில்லியன் டொலர் வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன், ஆண்டுதோறும் சராசரியாக 17,600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை நடைமுறை வணிகப் பயன்

பாடுகளாக மாற்றி, உள்ளூர் திறமையாளர்களையும் நிறுவனங்களையும் வளர்ப்பதே இந்த முதலீட்டின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் வேலைவாய்ப்புகளும் பொருளாதாரப் பயன்களும் ஒன்ராரியோவிலேயே நிலைத்திருப்பதுடன், உலகளாவிய தொழில்நுட்பத் துறையில் மாநிலத்தின் முன்னணி நிலையும் மேலும் வலுப்பெறும்.

கனடாவில் டீசல் விலை உயர்வு: தொழில்துறைகள் பாதிப்பு!

02.10.2026

கனடா முழுவதும் டீசல் விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்து வருவதால், விநியோகச் சங்கிலி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வியாபாரங்கள் கட்டுக்கடங்காத செலவினங்களைச் சமாளிக்கப் போராடி வரும் நிலையில், ஆல்பர்ட்டா மாகாணத்தில் இடம்பெற்று வரும் விசித்திரமான எரிபொருள் திருட்டுகள் குறித்து காவல்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது.

காஸ்படி அமைப்பின் பெட்ரோலிய பகுப்பாய்வுப் பிரிவுத் தலைவர் பேட்ரிக் டி ஹான் கூறுகையில், “கடந்த ஜூன் மாதத்தில் ஒரு லிட்டர் டீசல் 1.86 டொலராக இருந்த நிலையில், அண்மைய வாரங்களில் 2.65 டொலர் வரை உயர்ந்துள்ளது.

தற்போது 2.60 டொலருக்கு சற்று கீழே குறைந்திருந்தாலும், கனடா முழுவதும் இது இன்னும் வரலாற்றுச் சாதனை அளவிலேயே உள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் நிலையங்களோடு நிற்காமல், நாட்டின் அனைத்து வணிகத் துறைகளிலும் டீசல் விலை உயர்வு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. கல்கரியை தளமாகக் கொண்ட “எல்லி பியான்கா” தோல் பராமரிப்பு நிறுவனத்தின் நிறுவனரான எவெலின் நியாய்ரோ, இந்த விலை உயர்வு தங்கள் நிறுவனத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் பாதிப்பதாகத் தெரிவித்துள்ளார்:

பொருட்கள் வருகை, பேக்கேஜிங் மற்றும் லேபிள்கள் உள்ளிட்ட அனைத்து மூலப்பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைக்கும் கூரியர் மற்றும் போக்குவரத்துச் செலவுகளும் இரட்டிப்பாகியுள்ளன.

வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களின் விலையை உயர்த்த விரும்பாததால், செலவுகளைக் கட்டுப்படுத்தப் பணியாளர்களின் வேலை நேரத்தைக் குறைத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயம், சரக்கு லாரிகள் மற்றும் இரயில்கள் அனைத்தும் டீசலையே நம்பியுள்ளதால், நேரடியாக டீசல் வாங்காத சராசரி நுகர்வோரும் மளிகைக் கடைகள், உணவகங்கள் மற்றும் ஆன்லைன் வர்த்தகம் வழியாக இந்த விலை உயர்வின் தாக்கத்தைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்படுகிறது.

விலை உயர்வு ஒருபுறம் இருக்க, ஆல்பர்ட்டாவில் நிலத்தடி தொட்டிகளிலிருந்தே நேரடியாக டீசல் திருடப்படும் விசித்திர

மான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

எரிபொருள் நிலையங்களின் தளத்திற்குக் கீழே உள்ள நிலத்தடி சேமிப்புத் தொட்டிகளிலிருந்து நேரடியாக டீசலை உறிஞ்சி திருடுவது மிகவும் அரிதான ஒரு சம்பவம் என கல்கரி காவல்துறை தெரிவித்துள்ளது. .

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION

www.sangathamil.com

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை அகற்றியமைக்கு ஒன்ராரியோ சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி கண்டனம்!

02.10.2026

யாழ்ப்பாணத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ள ஒன்ராரியோ மாகாண சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இலங்கை மற்றும் இந்திய அரசுகள் திலீபனின் தியாகத்தைப் புரிந்துகொள்ளாமல் புறக்கணிப்பது கவலைக்கும், கண்டனத்துக்கும் உரியதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூரில் வைக்கப்பட்டிருந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் சிலை கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை பொலிசாரால் பலவந்தமாக அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கனடாவின் ஒன்ராரியோ மாகாண சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:



LOGAN KANAPATHI,
Member of Provincial Parliament
Markham–Thornhill
Ontario, Canada

Constituency office
7380 McCowan Rd, Unit 3
Markham, ON L3S 3H8
Phone: 905-305-1935
Email: logan.kanapathico@pc.ola.org

Legislative office
Room 171
Main Legislative Building, Queen's Park
Toronto, ON M7A 1A5
Phone: 416-326-7648

ஒன்டாரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் (MPP) கனபதியின் அறிக்கை

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதங்களை ஒப்படைத்தது. ஆனால், ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் (இராசையா பார்த்தீபன்) அவற்றை நிறைவேறுவதற்காக அகிம்சை வழியில் போராடத் தீர்மானித்தார்.

1987 செப்டம்பர் 13 அன்று, இந்திய அரசுக்கு திலீபன் பின்வரும் ஐந்து அம்சக் கோரிக்கைகள் ஜனநாயகமுறையில் முன்வைத்தார்:

1.பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்ச் சிறைக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

2.புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3.தற்காலிக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படும் வரை, அங்கு புதிய பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

4.இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், தமிழ் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள ஊர்க்காவல் படைகளுக்கான ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

5.தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில், இந்திய அமைதிப்படை புதிய முகாம்களை அமைப்பது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை சாத்வீக வழியில் பெறுவதற்காக உண்ணாவிரதப் போராட்டம்1987 செப்டம்பர் 15 அன்று காலை யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் தனது நீராகாரமும் அருந்தாத சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.



LOGAN KANAPATHI,
Member of Provincial Parliament
Markham–Thornhill
Ontario, Canada

Constituency office
7380 McCowan Rd, Unit 3
Markham, ON L3S 3H8
Phone: 905-305-1935
Email: logan.kanapathico@pc.ola.org

Legislative office
Room 171
Main Legislative Building, Queen's Park
Toronto, ON M7A 1A5
Phone: 416-326-7648

இப்போராட்டம் ஈழத் தமிழ் மக்களிடையே மிகப் பெரிய எழுச்சியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி திரண்டு அவருக்கு ஆதரவளித்தனர்.

இந்திய அரசால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில், 12 நாட்கள் (சுமார் 265 மணி நேரம்) உணவு மற்றும் தண்ணீர் இன்றிப் போராடி, 1987 செப்டம்பர் 26 அன்று திலீபன் வீரமரணமடைந்தார்.

தனது மக்களின் விடிவுக்காக தன இன்னுயிரை ஈய்ந்த அந்த மாபெரும் தியாகி திலீபனின் நினைவுத்தூபி அகற்றப்பட்ட செய்தி பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் அளிக்கிறது.

இத்தகைய நடவடிக்கை வெந்த புண்ணில் வேல் பாய்வதுபோன்ற நிகழ்வாகும்.

நினைவேந்தும் உரிமையையும் வரலாற்றுச் சின்னங்களையும் மதிப்பதுதான் ஓர் நாகரிக சமூகத்திற்கும் ஜனநாயகச் ஆட்சிமுறைக்கும் அடையாளமாகும். இதற்கு NPP அரசே முழு பொறுப்பும் எடுத்து உடனடியாக இதை தீவிர விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும், மீண்டும் தியாகதீபம் திலீபனின் நினைவு தூபியை அதே இடத்தில் நிறுவ வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மரியாதையுடன்,

MPP லோகன் கனபதி
ஒண்டாரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் - மார்க்கம்-தொர்ன்ஹில்
ஒன்ராரியோ மாகாணம், கனடா

கனடா கியூபெக் பிரிவினைவாதிகள் வாக்கெடுப்பில் வெற்றி: பொது வாக்கெடுப்புக்கு வாக்குறுதி!

06.10.2026

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் திங்களன்று நடைபெற்ற தேர்தலில், கனடாவிலிருந்து கியூபெக் சுதந்திரம் பெறுவது குறித்து புதிய பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என உறுதியளித்துள்ள பிரிவினைவாத பார்ட்டி கியூபெக்வா (PQ) அதிக இடங்களைப் பெற்றுள்ளது. இருப்பினும், ஆட்சியமைக்கத் தேவையான முழுமையான பெரும்பான்மையை அந்தக் கட்சி பெறவில்லை.

49 வயதான பால் செயிண்ட்-பியர் பிளமண்டன் தலைமையிலான PQ, மொத்தம் 127 இடங்களைக் கொண்ட தேசிய சட்டமன்றத்தில் சுமார் 60 இடங்களைப் பெறும் நிலையில் உள்ளது. பெரும்பான்மைக்கு 64 இடங்கள் தேவைப்படும் நிலையில், PQ சிறுபான்மை அரசாங்கமாக ஆட்சி அமைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் சட்டங்களை நிறைவேற்றவும், நம்பிக்கை வாக்கெடுப்புகளில் வெற்றி பெறவும் எதிர்க்கட்சிகளின் ஆதரவு PQ அரசாங்கத்துக்குத் தேவைப்படும்.

“மற்ற கட்சிகளுடன் இணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொண்டுதான் கியூபெக் மக்கள் பார்ட்டி கியூபெக்வாவைத் தேர்ந் தெடுத்துள்ளனர். அந்தச் செய்தியை நான் கேட்டேன்,” என்று PQ தலைவர் பால் செயிண்ட்-பியர் பிளமண்டன் தெரிவித்தார்.

ஒரு தசாப்தத்துக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு PQ மீண்டும் ஆட்சிக்கு வருவது, கியூபெக்கின் பிரெஞ்சு மொழி பேசும் மக்களின் அடையாளம் மற்றும் மாகாணத்தின் எதிர்காலம் குறித்த விவாதத்தை மீண்டும் முன்னிலைப்படுத்தியுள்ளது. கியூபெக்கின் மக்கள் தொகையில் சுமார் 80 சதவீதம் பேர் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள்.

கியூபெக்கை ஒரு தனி நாடாக உருவாக்க வேண்டும் என்ற தனது நோக்கத்தை வலியுறுத்திய செயிண்ட்-பியர் பிளமண்டன், பொது வாக்கெடுப்பு மூலம் கியூபெக் மக்கள் தங்களது எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்க முடியும் என்று கூறினார்.

நான் தொடர்ந்து அந்த நாட்டைப் பற்றிக் கனவு காண்கிறேன், அதைக் கற்பனை செய்து பார்க்கிறேன். அந்தக் கனவு ஒரு நாள் நனவாகும் என்று அவர் தனது வெற்றி உரையில் தெரிவித்தார்.

எனினும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பதவியில் இருக்கும் காலத்தில் கியூபெக் சுதந்திரம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படாது என அவர் தெளிவுபடுத்தினார். இந்த விவகாரம் “விவேகமான மற்றும் அமைதியான விவாதம் மூலம் அணுகப்பட வேண்டும் என்றும், “கணிக்க முடியாத ஒரு அதிபரின் நாடகங்களால் அது திசைதிருப்பப்படக் கூடாது” என்றும் அவர் கூறினார்.

PQ-வின் தேர்தல் வெற்றி, கியூபெக் சுதந்திரத்துக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதை நேரடியாகக் குறிக்கவில்லை.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற கடைசி சுதந்திர வாக்கெடுப்பில், 50. 58 சதவீத வாக்காளர்கள் மட்டுமே கனடாவுடன் இணைந்திருக்க ஆதரவாக வாக்களித்தனர். அதேவேளை, சமீபத்திய கருத்துக்கணிப்புகள் கியூபெக் இறையாண்மைக்கான ஆதரவு சுமார் 30 சதவீதமாக இருப்பதாகக் காட்டுகின்றன.

19 வயதான அலெக்ஸியா கோமஸ், கியூபெக் சுதந்திரம் பெற்றால் அது அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியாக மாகாணத்தை பாதிப்புக்குள்ளாக்கக்கூடும் என்று ஏஎஃப்பி செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

லிபரல் மற்றும் கன்சர்வேடிவ் கட்சிகளும் சுதந்திரத்துக்கான பொது வாக்கெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில், PQ-வின் அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுகளால் சவால்களை எதிர்கொள்ளக்கூடும்.

இதனிடையே, கியூபெக் மக்களிடையே வரவேற்பைப் பெறக்கூடிய மற்றொரு நடவடிக்கையாக, பிரிட்டிஷ் முடியாட்சியுடனான கியூபெக்கின் உறவுகளை குறைக்கவும் PQ உறுதியளித்துள்ளது.

கனடாவிலிருந்து பிரிவது குறித்த பொது வாக்கெடுப்புக்கான செயல்முறையைத் தொடங்குவதை ஆதரிப்பதா என்பதை ஆல்பர்ட்டா வாக்காளர்கள் தீர்மானிக்க உள்ள நிலையில், அதற்கு சரியாக இரண்டு வாரங்களுக்கு முன்பு கியூபெக் தேர்தல் முடிவு வெளியாகியுள்ளது.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

தமிழ் நாட்டுச் செய்திகள்

பழ. நெடுமாறனின் மகன் மாணிக்கம் நெடுமாறன் (57) அவுஸ்திரேலியாவில் காலமானார்!

03.10.2026

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறனின் மகன் மாணிக்கம் நெடுமாறன் (57) அவுஸ்திரேலியாவில் காலமானார்.

இளம் வயதிலேயே உலக வாழ்க்கையைத் துறந்து பௌத்த மதத்தைத் தழுவிய மாணிக்கம் நெடுமாறன், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் பௌத்த துறவியாக வாழ்ந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில காலமாக கடுமையான புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், மெல்பேர்ணில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை காலை இலங்கை நேரப்படி 8.45 மணியளவில் அவர் உயிரிழந்ததாக உலகத் தமிழர் பேரமைப்பு தெரிவித்துள்ளது.

மாணிக்கம் நெடுமாறனின் இறுதிச்சடங்குகள் பௌத்த மத வழக்கப்படி மெல்பேர்ணிலேயே நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகனின் இறுதிச்சடங்கில் பங்கேற்பதற்காக பழ.நெடுமாறனும் அவரது மனைவியும் அவுஸ்திரேலியா செல்ல தீர்மானித்திருந்ததாகவும், எனினும் பழ.நெடுமாறனின் கடவுச்சீட்டு முடக்கப்பட்டுள்ளதால் இருவராலும் இறுதிச்சடங்கில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உலகத் தமிழர் பேரமைப்பு தெரிவித்துள்ளது.

மகனின் இறுதிச்சடங்கில் கூட நேரில் பங்கேற்க முடியாத நிலை குடும்பத்தினருக்கு பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மாணிக்கம் நெடுமாறனின் மறைவு செய்தியைத் தொடர்ந்து

தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

கச்சதீவு ஒப்பந்தத்தை மீண்டும் பரிசீலிக்கும் எண்ணம் இல்லை!

இந்திய மத்திய அரசு

07.10.2026

கச்சத்தீவு மற்றும் கடற்தொழில் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களை மீண்டும் பரிசீலிக்கும் அல்லது திறக்கும் எண்ணம் எதுவும் தங்களுக்கு இல்லை என்றும், இலங்கையுடன் இந்தியா நல்ல இராஜதந்திர உறவுகளைப் பேணி வருவதாகவும் இந்திய மத்திய அரசு இன்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தங்களை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நீதிமன்றம் விசாரித்து வரும் நிலையிலேயே மத்திய அரசு தனது நிலைப்பாட்டை இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளது.

நீதியரசர்களான சஞ்சய் குமார் மற்றும் சஞ்சீவ் சச்தேவா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன் ஆஜரான இந்திய சட்டமா அதிபர் ஆர். வெங்கடரமணி, இந்திய மீனவர்கள் தொடர்பான கவலைகளை இந்திய அரசு இராஜதந்திர வழிகள் மூலமாகக் கையாண்டு வருவதாகத் தெரிவித்தார்.

இருப்பினும், இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுமாறோ அல்லது அதற்கேற்பச் செயல்படுமாறு இலங்கையைக் கட்டாயப்படுத்தவோ நிர்பந்திக்கவோ முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

1974 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்குக் கச்சத்தீவு விட்டுக் கொடுக்கப்பட்டதையும், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் மீன்பிடி உரிமைகளைக் கட்டுப்படுத்திய 1976 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தையும் எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின்போதே அவர் இந்த வாதங்களை முன்வைத்தார்.

இந்திய மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டும் தொடர் பிரச்சினை குறித்தும் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும் என இந்திய அரசு கேட்டுக்கொண்டது.

இந்தியப் பகுதியில் மீன்வளம் கணிசமாகக் குறைந்தமையே, தமிழ்நாட்டைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் இலங்கைக் கடற் பரப்புக்குள் நுழைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டினார்.

மேலும், சர்வதேசக் கடல் எல்லையைக் கடக்கக் கூடாது என்பது குறித்து கடற்தொழிலாளர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும், இந்த விவகாரத்தில் தமிழக அரசும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடயே, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பி. வில்சன் வாதிடுகையில், 1974 ஆம் ஆண்டின் ஒப்பந்தமானது இந்திய நிலப்பரப்பை வேறு ஒரு நாட்டிற்கு மாற்றியமைப்பதை உள்ளடக்கியது என்பதால், அதற்கு இந்திய அரசியலமைப்பின் முதலாவது அட்டவணையில் திருத்தம் மேற்கொள்ளப்பட் டிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மேலும், இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதையும் அவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

விசாரணையின் போது கருத்துத் தெரிவித்த நீதியரசர் சஞ்சய் குமார், இலங்கையில் பின்பற்றப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் காரணமாக மீன்கள் இலங்கைக் கடற்பரப்பை நோக்கி நகர்வது ஒரு காரணியாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டார்.

2008 ஆம் ஆண்டு முதல் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த மனுக்கள், கச்சத்தீவு இலங்கைக்குக் கையளிக்கப்பட்டதையும் 1976 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட மீன்பிடித் தடைகளையும் சவாலுக்கு உட்படுத்தியுள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் கடுமையாகப் பாதித்துள்ளதாக மனுதாரர்கள் வாதிட்டுள்ளனர்.

இந்த வழக்கின் மேலதிக விசாரணை தற்போது 2027ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டின் ஒப்பந்தங்களின் அரசியலமைப்பு மற்றும் சட்டப்பூர்வச் செல்லுபடித் தன்மையை இந்திய உச்ச நீதிமன்றம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

RECOGNISE LIBERATION TIGERS OF

THAMIL EELAM

AS A LIBERATION ORGANISATION

www.sangathamil.com

போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவமனைப் பணியாளர்கள் கைது!

13.10.2026

சென்னையில் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக போராட்டத்தில் ஈடுபட்ட பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றும் 3,400-க்கும் மேற்பட்ட பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி தொடர்ந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பணிநிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட முயன்றனர்.

பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் மேம்பாட்டு சங்கத்தின் சார்பில், உரிமை இயக்கத்தின் மாநில தலைவர் கு.பாரதி தலைமையில் நடந்த போராட்டத்தில் மாநில முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பங்கேற்றனர்.

போராட்டத்துக்கு அனுமதி இல்லாததால், போராட்டத்தில் பங்கேற்க வந்தவர்களை பொலிசார் கைது செய்ய தொடங்கினர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து, பணியாளர்கள் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அனைத்து பணியாளர்களையும் பொலிசார் குண்டுகட்டாக தூக்கி கைது செய்து வாகனங்களில் ஏற்றி சென்று சமூக நலக்கூடங்களில் அடைத்தனர்.

இதனால், அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. முன்னதாக, சில பெண் பணியாளர்கள் மயக்கமடைந்ததால், அவர்கள் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் மேம்பாட்டு சங்கத்தின் மாநில தலைவர் கே.தமிழ்ச்செல்வன் கூறுகையில், "உண்ணாவிரத போராட்டம் நடத்திய எங்களை பொலிசார் கைது செய்துள்ளனர். எங்களுக்கு போராட்டம் நடத்த உரிமை இல்லையா? கழிப்பறைக்கு சென்ற பெண் பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போராட்டத்தில் பங்கேற்க பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து கொண்டிருந்தவர்களை வழியிலேயே தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர். பல இடங்களில் பணியாளர்கள் வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுகாதாரத்துறை அமைச்சர், செயலர் எங்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி அடுத்த மாதம் 10ஆம் தேதி வரை அவகாசம் கேட்டுள்ளார். அப்போது கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்துவதாக தெரிவித்துள்ளனர்" என்றார்.



Sangathamil.com

www.sangathamil.com

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

பிரான்ஸில் மாணவர் போராட்டங்கள் தீவிரம்: 400 மேற்பட்ட பள்ளிகள் மூடல்!

02.10.2026

பிரான்ஸ் கல்வித்துறையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, சிதிலமடைந்த பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களின் பற்றாக்குறை உள்ளிட்ட குறைகளை வலியுறுத்தி பிரான்ஸ் முழுவதும் மாணவர் நடத்தி வரும் போராட் டங்கள் தீவிரமடைந்துள்ளன. இதன் காரணமாக 400-க்கும் மேற்பட்ட பள்ளிகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் வெள்ளிக் கிழமை மூடப்பட்டதாக பிரெஞ்சு கல்வி அமைச்சர் எட்வார்ட் ஜெஃப்ரே தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் பாரிஸ் பிராந்தியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கிய போராட்டங்கள் தற்போது நாடு முழுவதும் பரவியுள்ளன. போராட்டங்களின் போது சில இடங்களில் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பிரெஞ்சு கல்வி அமைச்சரின் தகவலின்படி, இதுவரை சுமார் 2,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 40 உயர்நிலைப் பள்ளி முதல்வர்கள் உள்ளிட்ட பலர் காயமடைந்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை குறைந்தது இரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் தீ விபத்துகள் ஏற்பட்டன. மார்செயில் உள்ள மற்றொரு பள்ளியில் ஆசிரியர்கள் மீது தவறுதலாக பெட்ரோல் தெளிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஸ்ட்ராஸ்பர்க்கில் கார் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதுடன், துலூஸ் நகரில் போராட்டக்காரர்களுக்கும் கலவரத் தடுப்புப் பொலீசாருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

ஆவர்ன்-ரோன்-ஆல்ப்ஸ் பிராந்தியத்தில் மட்டும் குறைந்தது 25 மில்லியன் யூரோ பெறுமதியான சேதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, காவல்துறையின் நடவடிக்கை அளவுக்கு அதிகமாக இருப்பதாக மாணவர் குற்றம்சாட்டியுள்ளனர். போராட்டத்தில் பங்கேற்ற மாணவர், தங்களது குறைகளை அரசாங்கம் செவிமடுக்காமல் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்துவதாகவும் விமர்சித்துள்ளனர்.

வன்முறையில் ஈடுபடுவோர் மாணவர் இயக்கத்துக்குள் ஊடுருவி அதனை பாதிப்பதாக கல்வி அமைச்சர் எட்வார்ட் ஜெஃப்ரே தெரிவித்துள்ளார். மாணவர்கள் போராட்டங்களில் பங்கேற்பதை பெற்றோர் தவிர்க்கச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, மாணவர் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. போராட்டங்களுக்கான காரணங்கள் குறித்து கலந்துரையாடல் நடத்தப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரெஞ்சு உளவு அமைப்புகள் இந்த இயக்கத்தின் பின்னணியில் இடதுசாரி கட்சியான La France Insoumise (LFI) அரசியல்வாதிகள் இருப்பதாக தெரிவித்ததாக பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு கூறியுள்ளார். எனினும், LFI இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

LFI-யின் மூத்த தலைவரான ஜீன்-லுக் மெலென்சோன் மாணவர் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன், போராட்டங்கள் வன்முறையற்ற முறையில் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஆறு சிறுமிகளை பாலியல் குற்றம் செய்த சிறீலங்காவைச் சேர்ந்த தேரருக்கு அவுஸ்லேியாவில் 13 ஆண்டுகள் சிறை!!

09.10.2026

இலங்கையைச் சேர்ந்த பௌத்த தேரர் ஒருவர், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ணில் உள்ள வழிபாட்டுத்தலமொன்றில் ஆறு சிறுமிகளை பாலியல் குற்றம் செய்த குற்றச்சாட்டில் 13 ஆண்டுகள் மற்றும் 2 மாதங்கள் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நவோதுன்னே விஜித என்ற 71 வயதான தேரர், மெல்பேர்ணின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த தம்ம சரண என்ற பௌத்த வழிபாட்டுத் தலத்தின் பிரதம தேரராக பணியாற்றியவர் என அவுஸ்திரேலியாவின் ஏ.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா கவுண்டி நீதிமன்றம் வியாழக்கிழமை (8) அவருக்கு இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

நீதிபதி, குறித்த குற்றங்கள் நம்பிக்கைக்கு எதிரான மிகக் கடுமையான துரோகமாகும் எனக் குறிப்பிட்டதுடன், சிறீலங்கா பௌத்த சமூகத்தில் பிக்கு பெற்றிருந்த மதிப்புமிக்க நிலையை அவர் தவறாகப் பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற விசாரணையில் குறித்த தேரர் 17 குற்றங்களில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டார். அவற்றில் சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்தல் புரிந்த 9 குற்றச்சாட்டுகளும், சிறுமியுடன் அநாகரிகமான செயலில் ஈடுபட்ட 8 குற்றச்சாட்டுகளும் அடங்குகின்றன.

1994 முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மெல்பேர்னின் Springvale மற்றும் Keysborough பகுதிகளில் இயங்கி வந்த பௌத்த வழிபாட்டுத்தலங்களில் இந்தக் குற்றங்கள் இடம்பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

வழிபாட்டுத்தலத்திற்கு மத நடவடிக்கைகளில் பங்கேற்பதற்காக பெற்றோருடன் சென்ற சிறுமிகளை, குறித்த தேரர் தனது தங்குமிடத்துக்கு பலமுறை அழைத்துச் சென்று பாலியல் குற்றங்கள் செய்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் சிறுமிகளின் பெற்றோர் அருகிலுள்ள அறைகளில் இருந்தபோதும் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாக கூறப்பட்டது.

பெற்றோர் தமது பிள்ளைகள் வழிபாட்டுத் தலத்தில் பாதுகாப்பாக இருப்பார்கள் என நம்பியிருந்த நிலையில், அந்த நம்பிக்கையை குறித்த தேரர் தூர் நடத்தை செய்ததாக நீதிபதி தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்டகால உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவர்களில் சிலர் இன்றும் பௌத்த மத நடைமுறைகளுடன் தொடர்புடைய மன உளைச்சலை எதிர்கொள்வதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட பெண்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டு குறித்த தேரர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

விசாரணையின்போது தேரர் குற்றச்சாட்டுகளை மறுத்ததுடன், சம்பவங்கள் இடம்பெறவில்லை என அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர். சில முறைப்பாட்டாளர்களை நினைவில் வைத்திருக்க முடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேரர் குறைந்தபட்சம் 9 ஆண்டுகள் மற்றும் 4 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்த பின்னரே பிணையில் விடுதலை பெறுவதற்கான பரிசீலனைக்கு தகுதி பெறுவார்.

தண்டனை அறிவிக்கப்பட்ட பின்னர், தேரர் நீதிமன்றத்தில் தனது ஆதரவாளர்களை நோக்கி புன்னகைத்து கையசைத்தமை சில பாதிக்கப்பட்டவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியதாகவும் ஏ.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த தேரர் சிறீலங்காவில் பிறந்தவர் என்பதுடன், தனது 15 ஆவது வயதில் பௌத்த துறவறத்தில் இணைந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சுவீடனுக்குச் சென்று அந்நாட்டு குடியுரிமையைப் பெற்ற அவர், 1994 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குச் சென்று தம்ம சரண என்ற பௌத்த வழிபாட்டுத்தலத்தின் பிரதம தேரராக பொறுப்பேற்றுள்ளார்.

சிறைத்தண்டனை நிறைவடைந்த பின்னர் அவர் நாடுகடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அவர் சுவீடனுக்குத் திரும்பிச் செல்லத் தயாராக இருப்பதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, தேரரின் உடல்நிலை, குறிப்பாக அவருக்கு டிமென்ஷியா பாதிப்பு இருப்பதாக முன்வைக்கப்பட்டிருந்த வாதங்களும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான காலத்திற்கு முன்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது தண்டனை விதிக்கப்பட்டதன் மூலம் நிறைவடைந்துள்ளன.

www.thuyarpakirvu.com

அனோஜனுக்கான மரண தண்டனையை இரத்து செய்ய சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்!

08.10.2026

சவுதி அரேபியாவினால் இலங்கையைச் சேர்ந்த இளைஞரான சிவராசா அனோஜனுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) அமைப்பு தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு, குறித்த குற்றச்சாட்டானது முற்றாக கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது என்பதால், அவரை உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுதலை செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளது.

முகமது நபியை இழிவுபடுத்தும் வகையில் அமைந்த கருத்து ஒன்றை தனது சமூக ஊடகக் கணக்கில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சிவராசா அனோஜனுக்கு, சவுதி அரேபிய மேன்முறையீட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

வெறுமனே தமது கருத்துக்களை வெளிப்படுத்தியதற்காக எவரையும் சிறையிலடைக்கவோ அல்லது மரண தண்டனை போன்ற தண்டனைகளுக்கு உட்படுத்தவோ கூடாது என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜன் குறித்து கண்டறிவதற்காக சவுதி அரேபியாவுக்கான சிறீலங்காத் தூதுவர் இன்று (08) அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்குச் செல்லவுள்ளார்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது!

09.10.2026

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) எதிராக அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ வெள்ளிக்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதுவரை நீதிமன்றத்தின் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் அதற்கு ஆதரவளிக்கும் சில அமைப்புகள் மீது தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது, நீதிமன்றத்தையே நேரடியாகக் குறிவைத்து அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கும் அதன் குடிமக்களுக்கும் எதிராகச் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, நீதிமன்றத்துடனான சில நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் சேவைகளைத் தடை செய்வதாக ரூபியோ தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடத்தும் விசாரணைகளையும், காசா தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் ஆகியோருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள கைது உத்தரவுகளையும் அமெரிக்கா தனது நடவடிக்கைக்கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், உலகின் மிகக் கடுமையான குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வழக்குத் தொடரும் அமைப்பாகும். இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பது அதன் முக்கிய பணியாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் சட்டத்தில் உறுப்பினர்களாக இல்லை. இருப்பினும், நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சில குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் பிரஜைகளுக்கு எதிராகவும் விசாரணை நடத்த முடியும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய தடைகளைக் கண்டித்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், தனது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது. நீதிமன்றத்தின் சுதந்திரமான செயல்பாடுகளைப் பாதுகாக்குமாறு உறுப்பு நாடுகளிடமும் அது கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தத் தடைகள் சர்வதேசச் சட்டத்தையும் சுதந்திரமான நீதித்துறையையும் பாதிக்கக்கூடும் என மனித உரிமை அமைப்புகளும் சட்ட நிபுணர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், அமெரிக்கக் குடிமக்கள் நீதிமன்றத்துடன் தொடர்புகொள்வதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அவர்களின் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதிப்பதாகக் கூறி, சில உரிமை அமைப்புகள் அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்துள்ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு முக்கியமானதாக இருக்கும் என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணையை கோரும் பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்!

14.10.2026

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணையை பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் செம்மணி மனிதப் புதைகுழி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாகவும் சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்ய பின்லாந்து அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்களான இன்கா ஹொப்சு (Inka Hopsu) மற்றும் ஏவா பியோடெ (Eva Biaudet) ஆகியோர் எழுத்துமூலக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது கேள்விகளில், ஓகஸ்ட் மாத நடுப்பகுதி வரை செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 580 இற்கும் மேற்பட்ட உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் தகவல்களை மேற்கோள்காட்டி, கண்டெடுக்கப்பட்ட எச்சங்களில் குழந்தைகளின் உடல்களும் உள்ளடங்குவதாகவும், பாடசாலைப் பைகள், பால் போத்தல்கள் உள்ளிட்ட தனிப்பட்ட பொருட்களும் கண்டெடுக்கப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணி கருதப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டதுடன், பரவலான போர்க்குற்றங்கள், சித்திரவதைகள் மற்றும் பொதுமக்கள் படுகொலைகள் இடம் பெற்றதாக வெளியான அறிக்கைகளையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கலாச்சாரம்காண்

மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் மிகவும் மெதுவாக முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், மழை மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து ஏழு மாதங்கள் இடைநிறுத்தப்பட்ட அகழ்வுப் பணிகள், ஏப்ரல் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அப்போது சர்வதேச கண்காணிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தடயவியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் செப்டெம்பர் மாத வரைவு அறிக்கை இலங்கையை வலியுறுத்தியுள்ளதையும் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத் துணைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலேயே வயதான பெற்றோர்களும் உறவினர்களும் உயிரிழந்து வருவது குறித்து பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்களான இன்கா ஹொப்சு (Inka Hopsu) மற்றும் ஏவா பியோடெ (Eva Biaudet) ஆகியோர் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை அடையாளம் காண்பதற்கான டி.என்.ஏ. மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுசெய்ய சுயாதீனமான பொறிமுறைகள் அவசரமாகத் தேவைப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ளதையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நிதியுதவிகள் விலக்கிக்கொள்ளப்பட்டதால் உள்ளூர் ஆவணப்படுத்தல் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தகவல் வழங்கிய பாதிக்கப்பட்ட குடும்பங்கள், உண்மையை அறிந்துகொள்வதுடன் நீதியையும் கோருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாண்டு பெப்ரவரியில் பின்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் நிறுவப்பட்ட அரசியல் ஆலோசனைப் பொறிமுறை, மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கையை முன்னெடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்குவதற்கும் முக்கிய வாய்ப்பாக அமைவதாக பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சவூதி அரேபியாவின் உயர் நீதிமன்றம் அனோஜன் சிவராசாவி மரண தண்டனையில் இருந்து விடுவிப்பு!

14.10.2026

சவூதி உயர் நீதிமன்றம் 2026 அக்டோபர் 13 அன்று மரண தண்டனை விதித்து பிறப்பித்த தீர்ப்பில் இருந்து அனோாஜனை விடுவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு அனோஜன் சிவராசாவின் சட்ட வழக்கில் ஒரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது, இருப்பினும் அவரது தற்போதைய சட்ட நிலைமை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தான மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப் படவில்லை

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புத மான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீரகாவியங்களைப் படைத் திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை யெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சி கரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி பாரத நாட்டை தலைகுனிய வைத்த நிகழ்ச்சி உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்கா இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரை யுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சி யாக அமைந்தது.

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக் காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக் காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த – உன்னத – தியாகத் தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப் பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண் டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன் அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித் துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை காலத் தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண் டிருக்கின்றான்.

(தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் “எனது மக்களின் விடுதலைக்காக“ என்னும் நூலிலிருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6

13TH
GLOBAL
BUSINESS MEET
13வது
குளோபல்
வர்த்தக மாநாடு
3 - 4, DEC 2026
ஒசாகா - ஜப்பான்
உலகத் தமிழர்களுடன் ஒன்றிணையும்
ஜப்பானிய தொழில் முனைவோர்
தொடர்புக்கு + 91 72999 92999 | + 60 166167708
presidentwtcc@gmail.com
www.wtcc.co.in | www.worldtamilchamberofcommerce.com
Supported by
O.B.D.A.
OSAKA BUSINESS DEVELOPMENT AGENCY
FaMe TN
Organiser
WTCC
GOTO

K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
Kurinchi
Beauty Creations
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

வேட்டைக்காரரர் வந்தபோதும்... வந்த பின்பும்... இனிப் போகும் வரையும்...!

பூ சிலிர்த்து வனத்தில்
பனி தடவிய காலையிருந்தது.
இருள் புணர்ந்த காடெங்கும்
சௌந்தர்யத்தின் ஜொலிப்பு.
நாசி துளைத்தேசியது வாசம் சுமந்த காற்று.
வனப் பறவைகளின் வாயிலிருந்து
பாடலாய் வழிந்தது அமர்ததாரை.
சலசலத்து நடந்து போயிற்று
நிறைமாதத் தாயாய் ஒரு குளவாய்க்கால்.

நாணற்புல், சடைத்த கரைமருங்கெங்கும்
மோனத் தவமிருந்த
அடிமண்ணை நீரரித்துப் போக
தாடி முளைத்த மரவேர்கள்.
இராமுழுவதும் இன்பம் துய்த்தோய்ந்த மான்கள்
கரையிறங்கி மறுகரையேறிப் புழுதி கிளப்பிப் போயின.
பகலுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்தி
நதிக்கரையில் சுவடுவிட்டு
நகர்ந்திருந்தன யானைகள்.
வேட்டைக்காரரர் வராத காலை
இப்படிக் காடுறைந்து கிடந்தது
அந்த நொடிவரை.
அவரவர் அவரவர் கூட்டிலும் வீட்டிலுமாக
தத்தம் சுயத்தையும் இருப்பையும் எழுதியபடி
இருந்தது அவரவருக்கான வாழ்வு.

1505 இல் முதல் வேட்டைக்காரன்
படகேறி வந்திறங்கினான் பீரங்கிகளோடு
கரையெங்கும் சாதாளை நெடி...
மணலெங்கும் பிணமெரிக்கும் வாடை
காடு கலங்கி முதன்முதல் கண்ணீர் விட்டது.
பிறகு இன்னொருவன்
அதன் பிறகு வேறொருவன்
வேட்டைக்காரரரின் வருகை தொடர்ந்த போது
காடு கன்னிமைகிழிந்து கதறியது.
வேட்டைக்காரின் நிறங்கள் மாறின
மொழிகள் மாறின
ஆயினும் காடு அழிவுறலானது இன்று வரை.

ஒரு நாள் தென்திசைக் காட்டுக்கு தீமூட்டி விட்டனர்
அகதியாயின மான்களும் மயில்களும்
இன்னும் பேசாதிருந்தால் காடே எரிந்துபோம்
போராடப் போயின புலிகள்
புள்ளி மான்களும் புலியாகிப் போயின
இப்போ வனமெங்கும்
வேட்டைக்காரரர்களுக்கும் மூத்த குடிமக்களுக்குமான
போர்.
இந்த முதிர்காடு பறவைகளுக்கான தொட்டில்;
மிருகங்களுக்கான மரபுவழி முற்றம்;
யாருக்கும் குத்தகைக்கு கொடுக்காத கொடிக்கால்;
விட்டுக்கொடுப்புகளுக்கு இடமற்ற உரிமம்
காடு புகுந்த வேட்டைக்காரரர்கள்
ஆதிக்குடிகளை பேச்சுக்கு அழைக்கும் அவலம்
காடு மீளும் வரை
வேட்டைக்காரருடன் போர் தொடரும்
புலிகள் உறுதியுரைத்துள்ளன
புள்ளிமான்களும் வரித்தோல் போர்த்துள்ளன.

மான்களின் கண்களில் இப்போ மையில்லை
கால்கள் வலுக் கொண்டுள்ளன
பூச்சிகளின் வாயிற் கூடப் போர்ப்பாட்டு
காடு கிளர்ந்தெழுந்து விட்டது.
வேட்டைக் காரரெல்லாம் காடுவிட்டேடும் வரை
பாட்டின் சுரதி பிசகாது.

– புதுவை இரத்தினதுரை

முல்லைப் போரின் கடற்சமரும் திரிவிட பஹரவும்

[முன்முனைத்தாக்குதல்]

"சண்டை தொடங்கி ஒரு மணித்தியாலத்தில் வந்து சேர்ந் திடுவான்! கவனம்! செல்லும் திட்டம் வகுத்து, வெல்லும் உபாயம் வரைந்து, தாக்கும் அணிகளைத் தயார்படுத்தி, வழிபடுத்தும் தளபதிகளை நியமித்து, 'வோக்கிக்கு' பற்றரியிலிருந்து 120 'மில்லி மீற்றர்' ஏவுகுண்டுகள் 'பூஸ்ற்ரர்' வரை ஆயத்தப்படுத்தி, சிற்றூண்டிப் பையிலிருந்து சத்திர சிகிச்சைக் கூடம் வரை ஒழுங்குபடுத்தி, மண் மூட்டைக்கு சணல் கயிற்றிலிருந்து 'சப்ளை' வாகனத்துக்கு உடனடித் திருத்துமிடங்கள் வரை ஏற்பாடு செய்து, எல்லாவற்றையும் பூர்த்தியாக்கிய தலைவர் அவர்கள், நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து முழுமையான தாக்குதற் சமரை நெறிப்படுத்தத் தயாராகி நின்ற வேளையில்,

முகாமுக்கு உதவி கிடைத்தால், முற்றிலுமே கெடும் என் ஏற்கனவே விரிசலாக எடுத்துரைத்து, தான் விளங்கப்படுத்தியதைத் தாக்குதலுக்கு முந்திய கடைசிச் சந்திப்பின்போதும் மீண்டும் ஒரு தரம் வலியுறுத்தி அவர் எச்சரித்தனுப்பியதைப் போலவே,

சண்டை தொடங்கிய ஒரு மணி நேரத்தில், உதவிக்கு விரைந்து 'டோறா'க்களை முல்லைக் கரையிலிருந்து 5 'கிலோமீற்றர்' தூரத்தில் வைத்து இடை மறிந்தனர் புலிகள்!

ஆனால், முல்லைச்சமரின் கடல்வழித் தாக்குதல்களின் ஆரம்பம் அதுவல்ல.

அதற்கு முன்னதாகவே – திட்டவரைவின்படி படைத்தளத்தின் உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் பல முனைகளில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட அதே சம தருணத்தில், கரையோக் காவலரண் வரிசையை உடைத்தெறிந்து, ஊடறுத்து, வழி

யெடுத்து, தரைத்தாக்குதல் அணியொன்றைக் கடல் வழியாக உள்ளே தரையிறக்கும் மயிர்க்கூச்செறியும் அதிரடி ஒன்றை கடற்புலிகள் நிகழ்த்தி முடித்திருந்தனர்.

முடிவில், இராணுவ வரலாற்றில் ஓர் அற்புதச் சாதனையைப் படைத்ததற்காக அவர்கட்டு மகுடத்தைச் சூட்டிவிட்டபோது, விடுதலைப் புலிகளின் தரைப் போர்ப் படை வீரர்கள் சந்தித் மிகப் பெரிய பொருதுகளம் முல்லைத்தீவு அல்ல; துல்லியமான வேவு, நுட்பமான திட்டமிடல், கடுமையான பயிற்சி, நேர்த்தியா வழி நடத்தல் என்பன சமரை அவர்கட்குச் சுலபமானதாக ஆக்கி விட்டன. ஆனால், விடுதலைப் புலிகளின் கடற்போர் வீரர்களுக்கு, தம் வரலாற்றில் அவர்கள் சந்தித்த நீண்ட – ஓய்வற்ற – கீர்த்திமிகு பெரும் போரரங்கு முல்லைத்தீவேதான்.

ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைத்தீவு சமரின் முடிவிற்கும் நேர் எதிர் வேறுபாடு.

கடலில் புலிகள் இல்லாததால், அன்று அப்படி நடந்தது; கடல் எங்கும் புலிகள் நிறைந்ததால் இன்று இப்படி நடந்தது. காலத்தின் விளைவுகளாக, தமிழீழப் போரில் புதிய சுடுகலங்கள் அறிமுகமாகி, புலிகளின் சண்டைத் திறன் இன்னொரு கட்டத்திற்குப் பரிணமிக்கும் மாற்றங்களின் கருவிகளாக இயங்கிய அந்தப் பெரும் பணியில் மட்டுமின்றி, கடற்புலிகளைக் கடல் அரங்கில் பொருது களங்களைத் திறக்கச் செய்யும் ஒரு போராளியாகவும் மாற்ற வேண்டிய வரலாற்றுத் தேவை உணரப்பட்ட 5 ஆண்டுகளின் பின் இப்போது கதை இவ்விதமாக மாறிவிட்டது. 'பராக்கிரம' என்ற தலைமைக் கப்பலோடு 15ற்கு மேற்பட்ட கடற்கலங்களை எதிரி களத்தில் இறக்கி இருந்தான். 4 சங்காய் கலங்கள், அதிவேகத் தாக்குதற் படகுகளான 7 'டோறா'க்கள், 2 தரையிறங்கும் கலங்கள் என்பனவோடு 'பேபி டோறா' வகைச் சண்டைப்படகுகள் சிலவும் அந்தக் கப்பற் தொகுதியில் களமாடின. திருக்கோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து சிங்களக் கடற்படையின் பிரதம தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகர கண்காணிக்க, முல்லைத்தீவுக்கு மிக அருகே இருந்த புல்மோட்டைக் கடற்படைத் தளம், கடல் நடவடிக்கைகளைத் தற் காலிகமாக வழிநடாத்தியது.

உந்துவிசை விமானங்களான இஸ்ரேலிய 'கிபீர்' போரூர்தி களினதும், சோவியத்தின் 'எம். ஐ. 24' போர் உலங்கு வானூர்திகளினதும், ஆர்ஜன்ரீனாவின் 'புக்காரா' தரைத்தாக் குதல் விண்ணூர்திகளினதும் உச்சப் பயன்பாட்டை எதிரி முல் லைக் களத்தில் பிரயோகித்தான். மீட்புக்குப் படைகள் தரையிறங்குவதற்குத் துணையாக தரையிறங்கும் கடலிலும் சண் டையிட்ட புலிகளின் இலக்குகளை, அவை குறிவைத்து தாக் கின. தரைச் சண்டைக் கலங்களைப் போல காப்புத் தடுப் புகளும், கவச அரண்களும், பதுங்கு அகழிகளும் கிடையாத – வெளித்து விரிந்த நீர்ப்பரப்பில் அரங்கேறும் கடற் சண்டைக் களத்தில் வான் படையின் துணையின்றி எதிரியை எதிர் கொள்வதென்பது, ஒரு கடற்படைக்கு மிக மிகக் கடினமான தாகும். விமானப் படையின் துணைவலு இணையவேண் டியது கடற்

விடுதலைப் புலிகளின் கடற்போர் வீரர்களுக்கு, தம் வரலாற்றில் அவர்கள் சந்தித்த நீண்ட – ஓய்வற்ற – கீர்த்திமிகு பெரும் போரரங்கு முல்லைத்தீவேதான்.

ஆனையிறவுச் சமரின் முடிவிற்கும், முல்லைத்தீவுச் சமரின் முடிவிற்கும் நேர் எதிர் வேறுபாடு.

கடலில் புலிகள் இல்லாததால், அன்று அப்படி நடந்தது; கடல் எங்கும் புலிகள் நிறைந்ததால் இன்று இப்படி நடத்தது.

சமர்களின் வெற்றிக்கு இன்றியமையாதது. இந்தப் போரினது யதார்த்தம், உலகப் போர் வரலாறுகள் பகரும் நடை முறை உண்மை. சிங்களக் கடற்படைக்கு அந்தப் பக்கபல வாய்ப்பு

இருந்தது. ஆனால், எம் கடற்புலிகளோ –

சண்டைகளுக்காகவும், சண்டைப் பயன்பாடுகளுக்காவும் என்றே வடிவமைக்கப்பட்ட கடற்போர்க் கலங்களில், தரம் மிக்க போராயுதங்கள் பொருத்தி – போர் விமானங்கள் புடைசூழப் பொருது களத்தைத் திறந்திருந்த பகைவனுடன் தனித்து நின்று வெறும் படகுகளில் எதிர்கொண்டனர்.

களத்தில் போரணிகளை வழிநடாத்திக் கொண்டிருந்த ஆற்றல் மிகு தளபதிகளுக்கு உடனுக்குடன் ஆலொசனைகளை வழங்கி, கள நிலைமைகளின் மாற்றங்களுக்கேற்ற விதமாக அறிவுறுத்தல்களைக் கொடுத்து, சமரரங்கைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்திச் சென்ற தலைவர் பிரகாபரனின் போருபாய வியூகங்களுக்குள் சிக்குப்பட்ட தால், இறுதியில், மீட்க அனுப்பிய படைகளையே மீடடெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெனரல் அனுருத்த.

'ஓயாத அலைகளி'ன் ஓய்வற்ற போர்க் களம் இடையறாது நீடித்து 2000 மீற்றருக்கு விரிந்திருந்த முகாமின் கடற்கரைப் பகுதியிலோ அல்லது முகாமின் வட எல்லைக்கு அப்பாலும் தென் எல்லைக்கு அப்பாலும் ஏறக் குறைய 5 'கிலோ மீற்றர்' தூரத் துக்குள் ஏதொ ஒரு பகுதியிலோ, மீற்புப் படைகள் தரை யிறக்கப்படலாம் என திட்டமிடலின் போது எதிர்பார்க்கப்பட்டது.

கடல்வழித் தரையிறக்கத்திற்கு எதிரி பல தடவைகள் எத்தனித் தான். 15 மணித்தியாலங்களாக பல வழிகளில் முயற்சித்தான்.

சண்டையரங்கை அகட்டி, தன் கலங்களைத் தூரத்து கொன் றாய்ப் பிரித்து, எம் படகுகளை தனித்தனியாகச் சண்டைக்கு இழுத்து, நீள இடைவெளிகளை ஏற்படுத்தி, அவற்றிற்கூடாகக் கரையை நெருங்க பகைவன் கையாண்ட கெட்டிக்காரத்தன மான தந்திரோபாயங்கள் எதுவும் அவனுக்குக் கைகொடுக்க வில்லை.

அவனெடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் எல்லாம் தோல்வி யையே தழுவின. கரையிலிருந்து ஏறக்குறை 4 கிலோ மீற்றர் களுக்கு அப்பால் எதிரியைத்தடுத்தது புலிகளின் வியூகம். கடந்து வருவது அவனுக்குச் சாத்தியமற்ற காரியமாகவே இருந்தது. தரையிறக்கல் முயற்சி தடைப்பட்டத் தடைப்பட, தன்னை நெருக் கடி சூழவதை எதிரித் தலைமை உணர்ந்தது.

தளத்தின் தொடர்புகள் அறுந்து, களத்தின் நிலைமைகள் புரி யாமல், முகாமில் இருந்த தன்னுடைய 1407 ஆட்களின் உயிர்கள் மீதான 'கேள்விக்குறி' கைமாறினால் நிகழக்கூடிய விளைவுகளின் நினைவு பயங்கரமாகி, செய்வதறியாது குழம் பிய சூழ்நிலையிலும், ஏதாவது செய்தே ஆகவேணடிய நிர்ப்பந் தத்துக்குள் தள்ளப்பட்ட வேளையில்தான் சிங்களப் படைத் தலைமை அந்த முடிவை எடுத்தது.

அவசியமானதும் ஆனால் அபாயகரமானதும் – எனவே துணி கரமானதும் – அதனால் ஆச்சரியமானதுமான ஒரு வான் வழிக் 'கொமாண்டோ'த் தரையிறக்கத்துகு எதிரி முடிவெடுத்தான்.

18.07.1996, ஆம் திகதியின் மதியம் கழிந்துவிட்ட மணித் துளிகள், காற்று மண்டலத்தில் ஏற்கெனவே பேரிரைச்சல் நிறைந்திருந்தது. ஏவகணை எதிர்ப்புக் கருவிகளின் குண்டு களை வெளிவிட்ட வண்ணம் 'கிபீர்' கள் விண்ணைக் கிழித் தன. அதே பாதுகாப்புக்கு மேலால் 'புக்காரா'க்களும் களத்தில் ஏறியிருந்தன. மணலாற்றின் 'பராக்கிரமபுர' முகாமிலிருந்த நடுத்தூர 'ஆட்டிலறி'களை 130 'மில்லி மீற்றர்' ஏவகணைக ளோடு இணைந்து, புலிகளின் கரையோரக் காப்பரண் களையும் சண்டைப் படகுகளையும் அவை ஒரே வேளையில் குறிவைத்தன. குண்டுகள் இலக்குகளைத் தொடத் தொடங்கிய அதே சம நேரத்தில் –

கரையிலிருந்து 4000 மீற்றர் தொலைவிலிருந்து, தளத்தின் தென் எல்லைக்கு ஏறக்குறை 1500 மீற்றர் தூரத்திலுள்ள சிலா வத்தையின் கரையோரப் பகுதியை நோக்கி, மீட்புப் படைகள் புறப்பட்டன. கிடை வரிசையாக நான்கு ' டோறா'க்கள். அவற்றி லிருந்து சில 'மீற்றர்' உயரத்தில் மூன்று 'எம்.ஐ. 24' போர் உலங்கு வானூர்த்திகள். இவற்றின் காப்புக்குப் பின்னால், தரையிறங்க வந்த உதவிப் படையினரைச் சுமந்து ஆறு 'எம்.ஐ. 17' துருப்புக்காவி உலங்கு வானூர்திகள்.

குழல் வாய்கள் சிவக்க, சுடுகலன்கள் தீ உமிழ, குறிப்பிட்ட கரைப் பகுதியைக் குறிவைத்து மாரி மழையெனக் குண்ட மழை பொழிந்து – விரைந்து நெருங்கிய எதிரி, புலிகளின் காப்பு வியூகத்தை ஊடறுத்து நுழைந்தான். கடற்கரை மணற்பரப்பில் 250 'மீற்றர்' விட்டம் கொண்ட வட்ட வடிவில் 15 அடி உயரத்தில், 'எம். ஜ.17'கள் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருக்க, அவற்றி லிருந்து குதித்து குதித்து நிலையெடுத்த சிறப்புக் 'கொமாண் டோ'ப் படையினரைத் தரையிறக்கித் தம் பணியை வெற்றிகர மாக நிறைவு செய்த வான்படை, மிக வேகமாகத் திரும்பிச் சென்றது.

நடவடிக்கைக்கு எதிரி 'திரிவிட பஹர' என்று பெயர் சூட்டினான். 'மும்முனைத்தாக்குதல்' என்பது தமிழ் அர்த்தம். வானோடு, கட லோடு, தரையிலும் சண்டை ஆரம்பிக்கப்பட்டதால் பொருத்த மான பெயர். உதவிப் படையினர் தரையிறக்கப்பட்டுவிட்டனர் என்ற செய்தி, சிங்கள தேசத்தின் செவிகளில் தேனெனெப் பாய்ந் தது! பெரிய எதிர்பார்ப்பு! 'யாப்பாட்டுன'வை வென்ற ஜெனரல்-களே களத்தில் இறக்கப்பட்டனர்! அனுருத்தவின் கண்காணிப் பின் கீழ் றொகான் தளுவத்த நெறிப்படுத்த, ஜானக பெரேராவின் துணையோடு சிறிலால் வீரசூரிய வழிநடாத்தினார் என்று சொல் லப்படுகின்றது. ஆதலால், 'ரிவிரச'வைப் போல, 'திரிவிட பஹர' வும் புலிகளைப் பின்னுக்குத் தள்ளும் என்பதில் எவருக்குமே சந்தேகம் இருக்கவில்லை! ரத்வத்தவுக்கு அசையாத நம் பிக்கை. 'முழுப் புலிகளும் முல்லைத்தீவில் குவிந்திருப்பதால், அங்கு வைத்தே அவர்களின் கதையை முழுமையாக முடித்து விடலாம்' என்று ஒரு ஆலோசனையையும் அவர் சொன் னாராம். சொல்லியவர். 'முல்லைப் பட்டுன'விலும் சிங்கக் கொடி நாட்டும் ஆசையோடுயிருக்க, உலகம் அதிசயத்து காத்திருக்க, சிறீலங்கா ஆவலோடு நம்பியிருக்க, தமிழீழம் ஏக்கத்தோடு பார்த்திருக்க – தொடர்ந்த கதையிலோ – களத்தில் போரணி-களை வழிநடாத்திக் கொண்டிருந்த ஆற்றல் மிகு தளபதிக ளுக்கு உடனுக்குடன் ஆலோசனைகளை வழங்கி, கள நிலை மைகளின் மாற்றங்களுக்கேற்ற விதமாக அறிவுறுத்தல்களைக் கொடுத்து, சமரரங்கைத் தொடர்ச்சியாக நெறிப்படுத்திச் சென்ற



கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட "ரணவிரு" அதிவேக பீரங்கி போர்க் கப்பல்

ஒரு வார காலமாய் ஓய்வற்று அதிர்ந்த "ஓயாத அலை"க்களம், "திரிவிட பஹர" துருப்புக்களைத் துரத்திக் கலைத்தபின், அமைதி அடைந்தது.

தலைவர் பிரபாகரனின் போருபாய வியூகங்களுக்குள் சிக்குப் பட்டதால், இறுதியில் மீட்க அனுப்பிய படைகளையே மீட்டெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டார் ஜெனரல் அனுருத்த.

குறுகிய ஒரு தொகைப் படையினரை அதிரடிப் பாணியில் தரை யிறக்கிவிட்டால், தொடர்ந்து அதே வழி மூலம், தேவையான மேலதிக துருப்புக்களையும் தளபாடங்களையும் கடலூடாக அனுப்பி, மீட்பு அணியை வலுப்படுத்தி, முன்னேறுவதற்கு ஏற்றவாறு பலப்படுத்திவிட்டு முகாமை நோக்கி நகர வைப்பதே சிங்களத் தலைமையின் மூலோபாயம். திட்டத்தை 'திட் வடிவிலேயே' முடங்கச் செய்தனர் புலிகள்! உக்கிர சண்டை! தரையிறக்கப்பட்ட படைக்கு தலைநிமிர முடியாத அடி! கடற்கரை மணலைக் கிளறியெறிந்து பதுங்கிக் கொண்டனர் சிங்கள வீரர்கள்! முல்லை முகாமின் தொடர்ச்சியாக – எதிரிக்கு இழப் புக்களின் உறைவிடமாகியது சிலாவத்தை! கண்ணெதிரில் வீழும் சகாக்களின் சடலங்களும், காயப்பட்டுச் சுருண்டோரின் மரண ஓலங்களும் 'சிறப்புப் படை'யினரின் மனவுறுதியைச் சிதைத்தெறிந்தன! உதவிக்குப் போன படைக்கு உதவி தேவைப்பட்டது! ஆனால், அனுப்ப முடியவில்லை. அது முடியு மானால், மேலதிக படைகளை இறக்கித் திட்டத்தை நடை முறைப்படுத்திப் பார்க்கலாமே? எதுவுமே இயலவில்லை. முனைந்தபோதெல்லாம் மூர்க்கமான எதிர்ப்பைத்தான் சந்திக்க வேண்டியிருந்தது.

கப்பல்கள் கரையை நெருங்க முடியவில்லை. வெடி சுமந்த படகுகள் பொடியாக்க அலைந்தன. மீறிச் சென்றாலும் கரையில் நிமிடங்களுக்கும் தரிக்க முடியாது. 120 மில்லி மீற்றர் மோட்டார் குழல் வாய்கள் பொறி கக்கக் காத்திருந்தன.

உதவிக்குப் போன படை உபத்திரவமானதாய் மாறியதால், 'திரிவிட பஹர'வைத் தொடங்கிய சிங்களம் 'திரிசங்கு' நிலை யில் திகைத்து நின்றது.

'ரணவிரு' – சீனாக்காரன் கொடுத்த பீரங்கிக் கப்பல், 'சங்காய் –3' வகையைச் சேர்ந்தது. சிங்களக் கடற்படையில் அதன் தொடர் இலக்கம் 'பி-321' 'ரணசுறு'வுக்கும் 'சூரையா'வுக்கும் அது சகோ தர முறை. 5.4 மீற்றர் அகலத்தில் 41 மீற்றர் நீண்டிருந்த ஒரு போராயுத மேடை அது.

12.7 மில்லி மீற்றர் 'ஃவிவ்ரி கலிபர்' துப்பாக்கிகள் 2, 14.5 மீற்றர் இரட்டைக் குழல் கனரகத் துப்பாக்கிகள் 2, 37 மில்லி மீற்றர் இரட்டை குழல் கனரகச் சுடுகலன்கள் 2, 40 மில்லி மீற்றர் தொடர் தன்னியக்க எறிகணை செலுத்தி 1 என்பனவோடு, குறைந்தது 30 படை வீரர்கள் வைத்திருந்த ஏனைய வகைச் சுடுகருவிகளும் அந்தப் பீரங்கிக் கப்பலின் ஆயுத வலிமை.

19.07.1996ஆம் திகதி மாலை 4:30 மணி. கடற்கரையி லிருந்து 2 கடல் மைல் தூரம். 'ரணவிரு' குறிவைக்கப் படுகின்றது.

போராயுதங்களின் சுடுதிறனால் கப்பலைச் சுற்றி எதிரி போட்டிருந்த தடுப்புச் சுவரை உடைத்து நுழைந்தனர் கடற்புலிகள். பாதுகாப்புக்குச் சுற்றிக் கொண்டிருந்த - 'றொக்கற் மோட்டார்'கள் பொருத்தப்பட்ட - உலங்கு வானூர்திகள் விண்ணுக்குயர்ந்தன. சூழ்ந்து நெருங்கிய எம் சண்டைக் கலங்களது ஆவேசத் தாக்குதலில், எதிரியின் சைனியங்கள் தோற்றன.

உச்ச விசையில் அண்மித்தது வெடிகுண்டுப் படகு! அதில் கண்ணபிரானும், பார்த்தீபனும். சுடுகலன்களை நீட்டிக் குறி வைத்து தாக்கினான் பகைவன். கப்பலில் மோத ஐந்து மீற்றர்களே இடைவெளி இருக்கும்போது, இதோ இடித்துவிட்டது என எல்லாரும் எதிர்பார்த்தவேளை, குண்டு மழையில் தோய்ந்து வெடித்துச் சிதறியது படகு! துயரம்! ஆனாலும், சண்டையில் இது தவிர்க்க முடியாததுதான். வெடியதிர்வில் ஆடிப் போனான் பகைவன்.

எதிரி திகைத்து நின்ற வேளையில், மிதுபாலனதும், இன்னிசையினதும் படகு கப்பலுக்கு மறுகரையால் நெருங்கி நொருங்கி இடித்தது! ஆனால், அடுத்த துரதிஸ்டம்... குண்டு வெடிக்கவில்லை! எம் படகுதான் முன்பக்கத்தால் உடைந்து போனது. நீர் உட்புக ஆரம்பித்தது. இன்னிசையும் சன்னம் பாய்ந்து காயப்பட்டுவிட்டாள். குண்டு வெடிக்காததன் காரணம் புரியவில்லை! மிதுபாலன் தளரவில்லை - நிதானம் இழக்கவில்லை. படகைப் பின்னுக்குச் செலுத்தி, கணிசமான தூரத்தில் வைத்து, மீண்டும் முன்னோக்கி முயற்சித்து, விசைகூட்டி மூர்க்கமாய் மோதினான். உடைந்துவிட்ட அணியம் மேலும் உடைந்து போனதேயன்றி, குண்டு வெடிக்கவேயில்லை. தயாரிப்பின்போது ஏற்பட்டிருக்கக்கூடிய தொழில்நுட்பக் கோளாறினால் பிசகிவிட்டது. நீர் புகுந்து கொண்டிருந்த படகை, வெகு சிரமத்தோடு பாதுகாப்பாகப் பின்னுக்கு எடுத்தான் அந்த வீரன். அதே சம தருணத்தில், கப்பலின் பின்பக்கமாக வளைந்து, கப்பலின் இயந்திரப் பகுதியை இலக்கு வைத்தது அடுத்த குண்டுப் படகு! அதில் செல்லப்பிள்ளையோடு சுடரொளி. அதிர்ஸ்டம் இம்முறை மாற்றானைக் கைவிட்டுவிட்டது! வழுவாத அடி இயந்தரப் பகுதி நொருங்கி, சுய கட்டுப்பாட்டை இழந்து, நடுக்கடலில் சுழன்று கொண்டிருந்த 'ரணவிரு' வை நேரெதிராய்ச் சந்தித்து முகத்திலே இடித்தான் பதுமன்! அந்தோ பரிதாபம்...!

ஏவணை தாக்குமென்று அஞ்சிய விமானங்கள் எட்டாத தொலைவில் செய்வதறியாது அந்தரித்து நிற்க, உதவிக்கு வருகிறது கப்பல் என அவாவோடு காத்திருந்த 'சிறப்புப் படை'யினர் ஏக்க விழிகளால் பார்த்திருக்க, மூழ்கிக் கொண்டிருந்த கப்பலைச் சுற்றி வலம் வந்து முழங்கிய கடற்புலி வீரர்களின் துப்பாக்கிகள், சிங்களச் சிப்பாய்களின் தலைகளைக் குறிவைத்தன! 'பண்டார வன்னியனின் கடல்' சிலிர்த்தது!

'ஓயாத அலை'களின் ஆக்ரோசத்திற்குள் சிக்கத் திணறியது சிங்களம். முகாம் கையிலில்லை. முகாமுக்குப் போனவர்களும் கைபிரியும் நிலை! இருந்தவர்களை அழித்தது ஒரு கதை. வந்தவர்களுக்கு அடித்தது இன்னொரு கதை! முல்லைத் தளத்தில் கிரீடத்தைச் சூடினர் புலிகள். இராணுவ வல்லுநர்கள் அதிசயித்தனர். அரசியல் நோக்கர்கள் ஆச்சரியப்பட்டனர். 'புலிக்கு எப்படி அடிப்பதென்று எனக்குத் தெரியும்' என அன்றொரு நாள் திமிர்க் கதை பேசிய ரத்வத்த, 'புலி எப்படி அடித்ததென்று' புரியாத கையறு நிலையில் கலங்கினார். நடக்காதவைகளை நடந்தவையாகவும் நடந்தவைகளை நடக்காதவையாகவும், பிரமாதமாகப் பிரச்சாரப்படுத்தத் தொடங்கியது சிங்களம். பொய்களையே உண்மையின் வடிவமாய்ப் புனைந்து சிங்களம் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், களம் அவர்களது கைகளிலில்லை.

தரையிறக்கப்பட்ட படை, முகாமை நோக்கி அணுவும் அசைய முடியாமல் அந்தரித்து நின்றது. தம் தளபதி லெப். கேணல் ஹொஸ்னி லாபீரையும் நூற்றுக்கு மேலான வீரர்களையும் இழந்து நின்றது. காயப்பட்டு வீழ்ந்த கேணல் லோறன்ஸ் பெர்னாண்டோவையும் ஏனைய சகாக்களையும் என்ன செய்வதெனத் தெரியாது தவித்து நின்றது. மேலதிக துருப்புக்களைத் தரையிறக்க முயற்சித்த ஒரு "எம்.ஐ.17" உலங்கு வானூர்தியும் தரையிறக்கக் கடற்கலம் ஒன்றும் மோட்டார் குண்டுகளால் முழுச் சேதப்பட்டு, களத்திலிருந்து அகற்றப் பட்டுவிட்டன. முன்பு 'ரணவிரு'வைத் தாக்க முடியாமல் திரும்பிய மிதுபாலன், சயந்தனோடு இணைந்து மீண்டும் குண்டுப் படகெடுத்து மூழ்கடிக்க நெருங்கும்போது, தற்காப்புத் தாக்குதல் நடாத்தி 40 மீற்றர் தூரத்தில் படகை வெடிக்கச் செய்துவிட்டதால் மயிரிழையில் தப்பிய இன்னொரு தரையிறக்கும் கலம் திருப்பி எடுக்கப் பட்டுவிட்டது. பேரிழப்புக்களுக்கு மத்தியில் நிர்க்கதி நிலையிலிருந்த 'சிறப்புக் கொமாண்டோ'ப் படை, உடனடியாகத் தன்னை மீட்டெடுத்துச் செல்லுமாறு வானொலித் தொடர்புச் சாதனத்தில் அவலமாய் கத்திக் கொண்டிருந்தது!

"ஓயாத அலைகள்" ஒரு முடிந்த கதையல்ல, புதிய கதையின் தொடக்கமே.

ஆனால் - சிங்களத் தலைமையோ - செய்தித் தொடர்ப் சாதனங்களில் வேறு விதமாகவே சொல்லிக் கொண்டிருந்தது. முதலில், "முல்லைத்தீவிலிருந்து 10 'கிலோ மீற்றர்' தூரத்தில் தரையிறக்கப்பட்ட படையினர், புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் முன்னேறுகின்றனர்" எனத் தொடங்கி - இடையில், "புலிகளின் தடுப்புக்களை முறியடித்தபடி வெற்றிகரமாக முன்னேறிய படையினர் முகாமினுள் தேடுதல் நடத்துகின்றனர்" எனத் தொடர்ந்து - முடிவில், "முகாமில் தேடுதல் மேற் கொண்டு அங்கு எவருமேயில்லையென்பதைக் கண்டறிந்த பின், மீட்புப் படையினர் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்" என முடித்தது!

ஒரு வார காலமாய் ஓய்வற்று அதிர்ந்த "ஓயாத அலை"க்களம், "திரிவிட பஹர" துருப்புக்களைத் துரத்திக் கலைத்தபின், அமைதி அடைந்தது.

"துருப்புக்கள் திரும்பிவிட்டனர்" என்பது சிங்களம் சொல்லிய செய்தி. ஆனால், "யாப்பபட்டுன" படையெடுப்பில் பிரதான பங்கேற்ற சிங்களத்தின் புகழ் பூத்த 'சிறப்புப்படை'யினர் எப்படிப் பின்வாங்கினர் என்பது, சொல்லாத செய்தி. அது, சொல்லப்பட வேண்டிய செய்தி.

திரும்பிச் செல்லல் அல்ல. அதன் பெயர் தப்பியோட்டம்! நம்மூர்த் தமிழில் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற அவல ஓட்டம்! மோட்டார் பீரங்கிகளின் குறி பிசகாத அடிகளில் குலை நடுங்கிய பீதி ஓட்டம்! 100 வரையான தம் ஆயுதங்களைத் தூக்கி யெறிந்து விட்டு ஓடிய கேவல ஓட்டம்! படுகாயப்பட்டுக் குற்றுயிராய் மரணத்தின் வாசலில் துடித்துக் கொண்டிருந்த தம் தோழர்கள் பலரை, உயிரோடேயே - கடலில் தரையிறக்கும் கலம் கரையை அடையும் முன்னரே, கடலில் பாய்ந்து சென்று - தாவிப் பிடித்து ஏறிய அவதி ஓட்டம்! மூழ்கவிட்டுவிட்டுச் சென்ற அவமான ஓட்டம்!

"ஓயாத அலைகள்" ஒரு முடிந்த கதையல்ல, புதிய கதையின் தொடக்கமே.

களத்தில் 23.10.1996

தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வ

இந்திய இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22.10.1987

யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்திய சாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டு மன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970 களிலிருந்து இயங்கி வருகிறது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின் மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத் தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டை யில் நிலை கொண்டிருந்த இந்திய இராணு வத்தினர் யாழ் நகரப்பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக் குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்திய சாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெறவந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப் பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாது காப்பு தேடினார்கள். பிற்பகல் 3:00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4:30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய். வாங்குகளிற் படுத் திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படு கொலை செய்தது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் கூறுகையில்

“1987 ஒக்ரோபர் இருபத்திதோராம் திகதி மாலை 4:30 மணியளவில் வைத்தியசாலை யினுள் வந்த இந்திய இராணுவத்தினர் மறுநாள் காலை 10:00 மணி வரை வைத் தியசாலையில் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண் டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட் டார்கள். மறுநாள் காலை 6:00 - 7:00 மணிக்கிடையில் வைத்திய சாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப்பக்க மிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் திரு. சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொதுமக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இராணு வத்தினர் ஓடிச் சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர் களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10:00 மணியள வில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சி யினால் சம்பவத்தில் காயமடைந்து உயி ருடனிருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சம் பவத்தில் உயிரிழ்நத மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உப்பட இருபத்தொரு மருத்துவ மனை பணியாளர்களும், நோயளார் விடு திகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத் தேழு நோயாளர்களுமாக மொத்தம் அறுபத் தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்த அனை வரது உடல்களையும் வைத்தியசாலை பின் வாசற்பக்கமுள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப்படையினர் எரியூட்டினர்.” எனத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத் தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமை யின்பால் உயிர் நீத்த வைத்தியா்கள் உட்பட இருபத்தொரு ஊழியர்களையும் அவர்க ளுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத் தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ் வொரு வருடமும் நினைவுகூர்ந்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

21,22.10.1987 அன்று யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:-

1. சூடாமணி அவுடையம்மா (55)
2. இராஜதுரை மகேஸ்வரி (46)
3. இராயப்பு சூசைப்பிள்ளை (74)
4. இராமநாதன் மங்கையற்கரசி (31)

5. இராமசாமி இலங்கேஸ்வரன் (25)
6. இராமலிங்கம் சுகுமார் (24)
7. இராசு சுப்பிரமணியம் (46)
8. இராசரத்தினம் இரத்தினராஜா (28)
9. நடராஜா ஜெயசீலன் (21)
10. கந்தையா செல்வராஜா (50)
11. கந்தையா செல்வராஜா (56)
12. கந்தையா வேதாரணியம் (27)
13. கந்தையா சிவராஜா (25)
14. கந்தன் மார்க்கண்டு (39)
15. கதிர்காமு பரிமேலழகர் (40)
16. கிருபாகரன் இந்திராணி (32)
17. குருசுமத்து ஜோன்பீற்றர் (24)
18. கணபதி கிருஸ்ணராஜா (50)
19. கணபதி சிவலோகநாதன் (23)
20. பஸ்தியாம்பிள்ளை யோன் அரிய மலர் (60)
21. பஸ்ரியாம்பிள்ளை நொய்லா விஜ யந்தி (20)
22. வைத்திலிங்கம் சண்முகலிங்கம் (49)
23. துரைச்சாமி இராஜேந்திரா (70)
24. துரைச்சாமி மகேந்திரா (73)
25. துரைச்சாமி ஆறுமுகம் (72)
26. தம்பிப்பிள்ளை கனகலிங்கம் (64)
27. தம்பிப்பிள்ளை கிருபாகரன் (33)
28. தியாகராசா மதியரசன் (17)
29. திருமதி வடிவேலு (48)
30. தங்கவேலு சவுந்தரராஜா (06)
31. மார்க்கண்ட தியாகராசா (48)
32. முத்தையா லீலாவதி (28)
33. முத்துக்குமாரு துரைராஜா (26)
34. அந்தோனிமுத்து அந்தோனி விக்ரர் (35)
35. அப்பையா மாணிக்கம் (76)
36. அரியகுட்டி இராசரத்தினம் (53)
37. அரியரட்ணம் லில்லிநேசம் (75)
38. அருணாசலம் சிவபாதசுந்தரம் (-)
39. அல்பிரட் அந்தோனிப்பிள்ளை (65)
40. அல்பிரட் மேரியோ செப்பின் (37)
41. ஜெபமணி கீதபொன்கலன் (43)
42. ஜோன் சின்னையா (65)
43. யோன் சிமியோன் (67)
44. கோபாலப்பிள்ளை உருத்திரன் (24)
45. பொன்னம்பலம் வரத ராஜன் (28)
46. பெலிசியன் சதீஸ்யோகேந்திரன் (15)
47. தோம்ஸ் பேரின்பநாயம் பஸ்தியாம் பிள்ளை (66)
48. செபஸ்தியன் தம்பிராஜா (55)
49. சேதுசிகாமணி கணேசரட்ணம் (29)
50. செல்லையா தங்கமணி (58)
51. செல்லர் சிவபுரம் (-)
52. வேலுப்பிள்ளை சரவணமுத்து (60)
53. ஞானப்பிரகாசம் செந்தூர் முருகன் (40)
54. சுப்பிரமணியம் ஜெணமோகன் (32)
55. சத்தியசீலன் ஜெயசீலன் (17)
56. சின்னப்பு ஜெயநாதன் (36)
57. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (75)
58. சின்னவி சின்னத்துரை (57)
59. சிவலை குணரட்ணம் (49)

காயமடைந்தவர்களின் விபரம்

1. யூலியஸ் பிரதீபன் (06)
2. ந. அன்னம் (90)
3. நா. நவரத்தினம் (54)
4. நா. செல்லையா (21)
5. நடராசா தனபாலசிங்கம் (20)
6. நவரத்தினம் சந்திரகுமார் (18)
7. பூ. விஸ்ணுதாசன் (34)
8. பத்மநாதன் தனபாக்கியலட்சுமி (43)
9. பற்குணராஜா கமலா (25)
10. தா. இராசேந்திரன் (44)
11. மா. அன்னலட்சுமி (75)
12. அ. சண்முகராசா (36)
13. அ. கந்தசாமி (36)
14. கே. பாலையா (44)
15. செ. பத்மநாதன் (46)
16. செ. தவராஜன் (22)
17. சின்னப்பொடி தெய்வானை (65)
18. வா. மதிஜீவன் (23)
19. ராஜரட்ணம் ஜனார்த்தனன் (20)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.

அராலித்துறைப் படுகொலை 22.10.1987

அராலித்துறை யாழ் மாவட்டத்தின் வலிகாம் மேற்கு சங்கானைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள் ளது. இலங்கை இராணுவம் யாழ் கோட்டைப்பகுதியில் நிலை கொண் டிருந்ததால், யாழ் கோட்டைப் பகுதி யின் அருகாமையிலுள்ள பண்ணைப் பாலம் ஊடான போக்கு வரத்துத் தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையாக அராலித்துறை விளங்கியது.

அக்காலப்பகுதியில் தீவுப்பகுதி மக் கள் அராலித்துறைப் பாதையினூ டாகப் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் இருபத்திரண்டாம் நாள் தீவுப்பகுதி யிலிருந்து யாழ் நகரம் நோக்கி பதினைந்து வரையான இயந்திரப் படகுகளில் முந்நூறிற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்தனர். அன்று மதியம் அராலித்துறைக் கரையில் தரையிறங்கிய பொதுமாக்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்தி மூலம் தாக்குதல் நடத் தியதால் அச்சமடைந்த மக்கள் அராலித்துறை மட்தில் தஞ்சம் புகந் தனர். பாதுகாப்புத்தேடி ஓடிய, தஞ்ச மடைந்த மக்களை இலக்கு வைத்து ஏழிற்கும் மேற்பட்ட றொக்கட் குண் டுகள் வீசப்பட்டது. இதனால் அரா லித்துறை மடத்தடியில் தஞ்சம் புகுந்த பயணிகள் முப்பத்தைந்து பேர் உயிரிழந்தனர். முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார் கள். ஏழிற்கும் மேற்பட்ட படகுகள் முழுமையாக சேதமடைந்தன. சில படகுகள் பகுதியளவில் சேதமடைந் தன. இறந்தவர்களின் சடலங்கள், காயப்பட்டவர்கள் மீள மறுகரைக்கு செல்லப்பட்டன. இறந்தவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தி யோகத்தார்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் அடங் குவார்.

22.10.1987 அன்று அராலித் துறைப் பாடுகொலையில் கொல் லப்பட்டோர் விபரம்

1. யேசுதாசன் ஜீவகுமார் (06)
2. ஆரோக்கியம் (40)
3. யேசுதாசன் குமுதினி (09)
4. செ. சேவியர் (70)
5. கிறிஸ்ரிராஜா நீற்றம்மா (31)
6. கிறிஸ் ரிராஜா சகாய நாயகி (06)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை

பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமை போல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொணடிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற் தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.

இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத்தாக்கினர். பின்னர் இராச நாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பிவிட்டனர். இராசநாயகத்தின் படுகோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழுந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சான் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
2. ஜோசப் பிரான்சிஸ் (72)

15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.



கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடுகொலை 24.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள் ளது. யாழ். நகரிலிருந்து காங் கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வழியில் ஏறக்குறைய யாழ் நகரிலி ருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள கொக்குவிற் சந்திக்குக் கிழக்குப் புறமாக கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.

1987 ஒக்டோபர் பத்தாம் நாள் இந்திய இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடை யில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏறி கணைத்தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக் கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக்கல்லூரியில் தஞ்சமடைந் தார்கள். அத்துடன் தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் முக் கிய இடங்களில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டனர்.

1987 ஒக்டோபர் இருபத்துநான்காம் நாள் காங்கேசன்துறை வீதி வழி யாக யாழ் நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகி தம் முன்னேறிய இந்தியப் படை யினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவச வாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொது மக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்களின் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறை யில் தங்கியிருந்த இருபத்தாறு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

படுகாயமடைந்தவர்களில் பதின் நான்கு பேர் மருத்துவ வசதிகளற்று உள்ளூர் மருத்துவமனைக்கு எடுத் துச் செல்லும் வழியிலும், மருத்துவ மனைகளிலும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் யாழ் பல்கலைக் கழக கல்வியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட மொத்தம் நாற்பது பேர் உயிரிழந் ததுடன், எண்பது பேர் படுகாய மடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய் வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரே குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

24.10 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடு கொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசையா பஞ்சலிங்கம் (43)
2. இராசையா செல்வராணி (37)
3. இராமு இராசு (60)
4. நாகரத்தினம் விஜயரத் தினம் (46)
5. நடராசா இராசகுமாரன் (44)
6. நடராசா இராசராசேஸ்வரி (24)
7. நடராசா குணராணி (35)
8. நடராசா தமிழ்ச்செல்வி (10)
9. நடராசா சபேஸ்குமார் (06)
10. நடராசா ரமதி (13)
11. நடேசு பரமேஸ்வரி (51)
12. நல்லையா பாக்கியம் (50)
13. கந்தையா சங்கரப் பிள்ளை (65)
14. கந்தவனம் மகேஸ்வரி (52)
15. குணபாலசிங்கம் பத்ம சிறி (08)
16. பரமு தங்மணி (24)
17. பரமேஸ்வரன் மனோன் மணி (35)
18. பரமேஸ்வரன் மாலினி (01)
19. தர்மலிங்கம் நிசாந்தன் (02)
20. துரைச்சாமி குமாராசாமி (72)
21. தம்பிராசா நடராசா (61)
22. வேணுகோபால் மகா தேவன் (41)
23. மகாதேவன் இராசம்மா (28)
24. மகாதேவன் பால முருகன் (09)
25. மகாதேவன் வேணு கிருஸ்ணா (07)
26. மகாதேவன் விக்கினேஸ் வரன் (10)
27. அன்னசிங்கம் கமலா தேவி (33)
28. பெரியதம்பி இராசையா (30)
29. பேராசிரியர் சோ. சந்திர சேகரம் (-)
30. செல்வநாயகம் மாணிக்க ரத்தினம் (69)
31. செல்லர் திரவியம் (53)
32. சுப்பிரால் கோவிந்தசாமி (73)
33. சிவகுரு செல்லத்துரை (85)
34. விஸ்வநாதி விஜய ரத்தினம் (40)

குறிப்பு: - இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26.10.1987

அளவெட்டிக் கிராமம் யாழ் மாவட் டத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள் ளது. அளவெட்டி அம்பனைப் பகுதி யில் அளவெட்டி - மல்லாகம் ப. நோ.கூ.சங்கம் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பா அளவெட்டி இந்து ஆச்சிரமம் அமைந்துள்ளது.

அளவெட்டிப் பிரதேசத்திலுள்ள இந்த இந்து ஆச்சிரமம் இந்து மக்களின் வயோதிபர் மடமாகவும், கடந்த கால வன்செயல்களால் கடும் பாதிப்புற்ற இளஞ்சிறார்கள் கல்வி கற்கும் இடமாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்தாறாம் நாள் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் அளவெட் டியில் அமைந்துள்ள இந்து ஆச்சி ரமத்தின் மீது இந்திய இராணுவத் தினரின் “முதலை” என்னும் எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியால் நடத்திய றொக்கட் தாக்குதலில் ஆச்சிரமத்திலுள்ள வயோதிபர்கள், சிறார்கள் உட்பட பதினைந்து பேர் உயிரிழந்தனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

26.10.1987 அன்று அள வெட்டி ஆச்சிரமப் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசரத்தினம் கோமதி (15)
2. இராசரத்தினம் ஞான கணேசன் (21)
3. குணசீலன் கோணேஸ் வரி (38)
4. பத்மநாதன் செல்வச் சந்திரன் (12)
5. தர்மலிங்கம் சிறிஸ் கந்த ராசா (25)
6. துரைசிங்கம் மதி (01)
7. தம்பிராசா சிறீபவன் (12)
8. அமிர்தநாதர் நேசம்மா (50)
9. சின்னத்துரை தங்க லிங்கம் (47)
10. சின்னத்தம்பி தம்பிராசா (56)
11. சின்னத்தம்பி இரத்தினம் (47)
12. சின்னையா இராசரத் தினம் (62)
13. சிவகுருநாதன் சிவபாக் கியநாதன் (41)
14. விஜயரத்தினம் பத்ம ராணி (33)
15. வினாசித்தம்பி ஜயாத் துரை (80)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

சாவகச்சேரிசந்தைப் படுகொலை 27.10.1987

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப் பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேச மாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ் சாலையில் யாழ். நகரத்திலிருந்து ஏறக் குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான நகரமாகும். 1987 ஒக்டோபர் இருபத்தேழாம் திகதியன்று கந்த சட்டி சூரன் போர் ஆகையால், நகரத்திலிருந்த ஆலயத்திலிருந்து சூரன் வீதியால் வீதியுலா சென்று கொண்டிருந்த நேரம் மதியம் 12 மணியளவில் வானில் வந்த இந்திய இராணுவத்துக்குச் சொந்தமான இரண்டு எம்.ஜ 24 ரக உலங்குவானூர்திகள் மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டன. பீதியடைந்த மக்கள் என்ன செய்வதென்று தெரியாது அங்குமிங்குமாகச்சிதறி ஓடினர். தொடர்ச்சியாக மக்கள் மீது உலங்குவானூர்தி ஏவிய றொக்கட் குண்டகளால் சந்தைக்கு வந்த அறுபத்தொட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நூற்றி எழுபத்தைந்து பேர் காயமடைந்தார்கள். இந்து ஆலயத்தில் வீதியுலா சென்ற சூரன் சிலையும் சேதமடைந்தது.

27.10.1987 அன்று சாவகச்சேரி சந்தைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இளையதம்பி நாகராசா (50)
2. இராசையா திரவியம் மரியாம் பிள்ளை (32)
3. இராசநாயகம் நந்தினி (20)
4. இராசநாயகம் அருந்தவ ராசா (13)
5. இராசா சிறிதரன் (26)
6. இராசதுரை இராசேந்திர போஸ் (18)
7. இராசசிங்கம் மனோகரன் (38)
8. இராசசிங்கம் கௌரிதாஸ் (20)
9. நாகமுத்து தங்கம்மா (66)
10. நாகமுத்து தவராசா (27)
11. நாகராசா புஸ்பராசா (13)
12. நாகராசா தனலட்சுமி (21)
13. நாகராசா மகேஸ்வரி (41)
14. நாகராசா சண்முகராசா (10)
15. நல்லதம்பி இராசையா (56)
16. கனகுபொன்னு (57)
17. கந்தையா மனோன்மணி (58)
18. கந்தன் தங்கம் (51)
19. கந்தசாமி வைத்தீஸ்வர சர்மா (26)
20. வைத்திஸ்வர சர்மா கலைச் செல்வன் (02)
21. கந்தசாமி கெந்தீஸ்வரன் (20)
22. கார்த்திகேசு பெனடிக்ற் மத்தியூஸ் (32)
23. கணபதி மயில்வாகனம் (40)
24. பழனியாண்டி கனகரத்தினம் (34)
25. பிள்ளையாங்குட்டி துரைச்சாமி (49)
26. பிலிப்பு இராசேந்திரம் (42)
27. வைத்திலிங்கம் மயில்வாகனம் (45)
28. தம்பு ஜெயரத்தினம் (22)
29. தம்பிராசா சந்திரமோகன் (21)
30. மார்க்கண்டு துரைராசா (55)
31. முருகேசு நடராசா (50)
32. முருகேசு சிவசுப்பிரமணியம் (41)
33. ஆனந்தசாமி அருந்தவசிவனேசன் (25)
34. ஆறுமுகம் விஸ்வநாதன் (31)
35. அல்பிரட் நொபேட் லூயிஸ் ஸ்ரிப்ன (29)
36. ஜெயரத்தினம் வீரஜெயபரஞ்சோதி (23)
37. கோவிந்தசாமி மகேந்திரன் (27)
38. பொன்னுத்துரை கமமேஸ்வரி (10)
39. பொன்னுத்துரை தங்கரத்தினம் (56)
40. பொன்னுத்துரை மகேஸ்வரி (49)
41. பொன்னுத்துரை மஞ்சுளாதேவி (28)
42. பொன்னம்பலம் கனகசிங்கம் (41)
43. பொலோறஞ் அரியமலர் இராசசிங்கம் (65)
44. தேசிங்கன் செல்லையா (14)
45. டொனால்ட் நவீன் குண்டேக்ஸ் (20
46. சோமசுந்தரம் சின்னாச்சி (38)
47. செல்லத்துரை தயாபரன் (16)
48. செல்லத்துரை ரெங்கநாதன் (32)
49. வெற்றிவேலு சிவசிறி (18)
50. வேலுப்பிள்ளை குணபாலசிங்கம் (30)
51. வேலுப்பிள்ளை தங்கம்மா (72)
52. வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் (19)
53. ஞானமுத்து இரஞ்சிதமலர் (63)
54. சுப்பிரமணியம் பரந்தாமன் (12)
55. சுப்பையா பொன்னம்மா (60)
56. சின்னவன் நாகமுத்து (76)
57. சின்னவன் செல்லையன் (45)
58. சின்னராசா அருமைராசா (33)
59. சின்னையா அம்பிகைபாலன் (27)
60. சிதம்பரப்பிள்ளை குமாரசாமி (52)
61. சிவக்கொழுந்து மகேஸ்வரன் (55)
62. சண்முகம் பரராசசிங்கம் (34)
63. வன்னியசிங்கம் பாஸ்கரன் (19)
64. விசுவநாதன் கந்தையா (59)
65. எலியாஸ் சிறாயுதீன் (27)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

முல்லை. புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை 16.10.2006

முல்லைத்தீவு மாவட்டம் புதக் குடியிருப்பு பிரதேசெயலர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் நாள் மாலை 5:15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஒரு மாதக் குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான்காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் சாவடைந்தார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்

1. யூட்கிறிஸ்ரின் டன்சிபா (01)
2. சிவகுமார் தனுசிகா (14)
3. தவராஜா துசாந்தினி (14)
4. தவராசா இந்திரா (42)

இச்சம்பவத்தின் போது காயமடைந்தவர்களது பெயர் விபரம்

1. முருகானந்தன் தியாக ராஜா (22)
2. கந்தசாமி நாகேந்திரம் (34)
3. வீரசிங்கம் நிதர்சன் (12)
4. நாகராசா நிரோஜினி (13)
5. புவனச்சந்திரன் புஸ்பலதா (38)
6. பிறேமசிங் சிவாஜினி (32)
7. நாகேந்திரம் சுகந்தினி (29)
8. சர்மிலா (09)
9. மேலும் ஒருவர்

பெரியமடுப் படுகொலை 25.10.2007

மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரியமடு கிராமமும் ஒன்றாகும். இடம்பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12:00 மணியளவில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித் தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டும் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவிலிருந்து 2007 ஒகஸ்ட் 25 ஆம் நாள் தொடக்கம் சிங்கள இராணுவத்தின் செல்வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25 ஆம் நாள் நண்பகல் 12:00 மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணியான செல்வநாதன் பரிமளா (வயது 19), அவரின் சகோதி தங்கவேல் கௌசல்யா (வயது 09), இவல்களின் தந்தை சோமசுந்தரம் ஜெயபாலசிங்கம் (வயது 61) ஆகியோர் உடல்சிதறிப் பலியானதுடன் பலிமளா, கௌசல்யா ஆகியோரின் தாயாள் ஜெயபாலசிங்கம் திரவியம் (வயது 55) இவரது பேரப்பிள்ளை செல்வநாதன் கோகிலன் (வயது 03), பிரான்சிஸ் சுதர்சன் (வயது 45), இவர்களின் மகள் உமாதேவி (வயது 13), வசந்தன் றெபேக்கா (வயது05), சுப்பையா மோகன்ராஜ் (வயது 29), பா. சுப்பிரமணியம் (வயது 28) ஆகியோல் படு காயமடைந்து, முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவந்தனர். இதில் செல்வநாதன் கோகுலன் என்ற மூன்று வயதுக் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணியான பரிமாளவின் வயிற்றுப்பகுதியை செல்துண்டுகள் வெட்டி சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந் தது குறிப்பிடத்தக்கதாகும்.

தொல்லியல் சுவடுகள்...

தமிழர் தோற்றம் பற்றிய சில கோட்பாடுகளின் நம்பகத்தன்மையும், நிலவியல் சமுத்திரவியல் சான்றுகளும் பகுதி – 2

திராவிட மக்களின் மரபணு மூலங்களும் தமிழ் மொழியின் படிமுறைத் தோற்றமும்

நிலஅமைப்பியல் ஆய்வுகள்
(Geological Surveys)

இந்து சமுத்திரத்தில், இந்தியாவிற்குத் தெற்கே, சமுத்திரத்தின் பெரும் பகுதியை நிறைத்துக்கொண்டு லெமூரியா என்றொரு நிலப்பரப்பு இருந்திருப்பது சாத்தியமா?

சில தீவுகள் கடலினுள் அமிழ்ந்து போவது பற்றி பத்திரிகைகளில் படிக்கிறோம். அதுபோன்று ஒரு பெரிய கண்டம் கடலினுள் மூழ்கிப் போகுமா? இதற்குரிய விடைகளை அறிந்து கொள்வதற்கு நில அமைப்பியல் பற்றிய ஓர் அடிப்படை அறிவு அவசியமாகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை நமது பூமியைச் சூழ்ந்திருக்கும் நிலக் கண்டங்களும் சமுத்திரங்களும் பூமி உருவான காலத்திலிருந்து அப்படியே இருந்து வந்திருக்கின்றன என்ற கோட்பாடே நிலவியல் ஆய்வாளர்கள் மத்தியில் நிலவி வந்தது.



ரெதிஸ் மாகடல்



இற்றைக்கு 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்திய நிலப்பகுதி. இன்றையகால நிலவரை அதனுள் காட்டப்பட்டிருக்கின்றது. குமரிமுனையின் கீழ் நீண்டுகொண்டிருப்பது அன்றைய குமரிநாடு

Image Source - டர்ஹாம் பல்கலைக்கழக புவியியல் துறை

1915ஆம் ஆண்டில் அல்ஃப்ரெட் வெஜினர் (Alfred Wegener) என்ற ஜேர்மனிய நில அமைப்பியல் அறிவியலாளர் 'கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம்' (The Origin of Continents and Oceans) என்ற பூகோளவியல் பற்றிய ஆழமான ஆய்வுநூலை எழுதி வெளியிட்டார். அடுத்து இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்தது. இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கொண்டிருந்த இந்த நூல் அன்றைய அறிவியலாளர்கள் மத்தியிலும், அறிஞர்கள் மத்தியிலும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

இப்பூமியானது ஒரு தனியான திடப்பொருள் அல்ல. அதன் மத்தியில் உள்ள எரிகுழம்பின் (Magma) மேல் 2900 கிலோ மீட்டர் கனதியான 'மான்ரில்' (Mantle) எனப்படும் 'நிலஉறை' காணப்படுகிறது. இதன் மேல் 60 முதல் 140 கி.மீ. கனதியான பாறைப் பொருளினால் ஆன 16 பெரிய 'கண்டத்தகடுகள்' (Tectonic Plates) பூமிப்பந்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன. உலகம் முழுவதிலுமுள்ள கண்டங்களும், சமுத்திரங்களும் இந்த கண்டத்தகடுகளின் மேலே அமைந்திருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார் வெஜினர் (Alfred Wegener, 1966). இதைத் தொடர்ந்து மேலும் பல பூகோளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்கால ஆய்வுகள், மேலும் நூற்றுக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தரமான கண்டத்தகடுகள் 16 பெரும் தகடுகளோடு இணைந்திருப்பதை எடுத்துக் காட்டுகின்றன.



பூமியின் ஆரம்பகாலத்தில் இருந்த முக்கியமான நிலப்பகுதிகளே இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. இதில் லெமூரியா என்றொரு கண்டத்திற்கான நிலப்பகுதி இருந்ததே இல்லை.

பூமியின் நடுப்பகுதியிலிருக்கும் எரிகுழம்பிலிருந்து வெளிவரும் வெப்பச் சலனம் மேலிருக்கும் நிலஉறையான 'மான்ரிலையும்' அதன்மேலுள்ள கண்டத்தகடுகளையும் அசைய வைக்கிறது. இக்கண்டத்தகடுகள் ஒன்றைவிட்டொன்று விலகும்போது அவற்றினூடே பீறிட்டு வெளிவரும் எரிகுழம்பே எரிமலையாக வெடித்து வெளிவருகிறது. இக் கண்டத்தகடுகள் ஒன்றோடொன்று உராயும்போது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

இற்றைக்கு 300 மில்லியன் (3000 கோடி) ஆண்டுகளுக்கு முன்னர், இப்பூமியின் நிலப்பரப்பு அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டு இருந்தன. இதற்குப் பஞ்ஜியா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பூமியின் வடகோளம் முதல் தென்கோளம் வரை பஞ்ஜியா பரந்திருந்தது. பஞ்ஜியாவின் வடகோளத்திலிருந்த பெருங் கண்டம் 'லொறேசியா' (Laurasia) என்றும், தென்கோளத்திலிருந்த மிகப் பெருங் கண்டம் 'கொண்ட்வானா' நிலம் (Gondwanaland) என்றும் அழைக்கப்பட்டது. பஞ்ஜியாவுக்குக் கிழக்கே இருந்த நெடுங்கடலுக்கு ரெதிஸ் மாகடல் எனப் பெயரிடப்பட்டது.

லொறேசியா என்ற பெருங்கண்டத்திலிருந்து பின்னர் வட அமெரிக்கா பிரிந்துபோக, மிகுதிப் பகுதியிலிருந்து ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்கள் உருவாகின (Dietz, 1970). தென்பெருங் கண்டமான 'கொண்ட்வானா'விலிருந்து இந்தியா–இலங்கை, அவுஸ்திரேலியா, அந்தாட்டிக்கா, ஆபிரிக்கா ஆகிய தேசங்கள் உருவாகின (Trompette, R. 1994).

இற்றைக்கு 200 மில்லியன் (2000 கோடி) ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் நடுவிலிருக்கும் எரிகுழம்பிலிருந்து வெளிக்கிளம்பிய வெப்பம் ஏற்படுத்திய சலனத்தினால் கொண்ட்வானா பெருங்கண்டம் கொஞ்சம் கொஞ்சமாகப் பிளவுபட ஆரம்பித்தது. கொண்ட்வானா பல கண்டத்தகடுகள் ஒன்றோடொன்று இணைந்ததனால் ஏற்பட்ட பெருங்கண்டமாதலால், இத்தகடுகள் பிரிந்து போக ஆரம்பித்தன. இந்தியா ஆபிரிக்காவை விட்டுப் பிரிந்தபோது அதனோடு ஒட்டிக்கொண்டு மடகஸ்கார் தீவும் பிரிந்தது. இலங்கை, இந்தியக் கண்டத்தகட்டிலே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. மடகஸ்கார் தனியான ஒரு கண்டத்தகட்டிலே இந்தியத் தகட்டோடு ஒட்டிக்கொண்டிருந்தது. பின்னர் மடகஸ்கார் தீவு இந்தியாவிலிருந்து பிரிந்துபோக, இந்தியத் தகடு வடக்கு நோக்கி ஆண்டுக்கு 20 செ.மீ. (ஒரு மில்லியன் ஆண்டுகளில் 200 கிலோமீட்டர்) வீதம் ரெதிஸ் மாகடலில் நகர்ந்தது.



கடந்த 250 மில்லியன் ஆண்டுகளாக பூமியில் ஏற்பட்ட புவி அமைப்பியல் மாற்றங்கள்

வடக்கு நோக்கி ரெதிஸ் சமுத்திரத்தில் நகர்ந்துகொண்டிருந்த இந்தியக் கண்டத்தகடு 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிய (லொறேசிய) கண்டத்தகட்டுடன் பயங்கரமாக மோதியது. ஆசியக் கண்டத்தகட்டின் கீழே புகுந்த இந்தியத்தகடு ஆசியக் கண்டத்தகட்டை மேலே மேலே உயர்த்தித்தள்ள, அதன்



நிலஅமைப்பியல் ஆய்வுகள்



சர்வதேச சமுத்திர ஆய்வு நிர்வாகக் குழு (Scientific Committee on Oceanic Research: SCOR) வெளியிட்ட இந்து சமுத்திர அடிநிலப்படம். இதில் குமரிக்கண்டம் என்றொரு கண்டம் இருந்ததற்கான கடல்மேடு காணப்படவில்லை. அதே சமயம் சுண்டாமாநில கடல் மேடு காணப்படுகிறது

Image Source - American Association for the Advancement of Science (AAAS)

மேலிருந்த பாறை மேலே எழுந்து இமயமலை உருவாயிற்று (Van Andel, 1985). இதனால்தான் இன்றும் இமயமலையில் கடற்பிராணிகளின் படிவ எச்சங்கள் காணப்படுகின்றன.

பூமியின் ஆரம்பகாலத்தில் இருந்த முக்கியமான நிலப் பகுதிகளே இன்றுவரை நிலைத்து நிற்கின்றன. இதில் லெமூரியா என்றொரு கண்டத்திற்கான நிலப்பகுதி இருந்ததே இல்லை.

இந்தியக் கண்டத்தகடு இன்றும் ஆசியக் கண்டத்தகட்டினுள் ஆண்டுக்கு 5 செ.மீ. வீதம் செருகிக்கொண்டுதான் இருக்கிறது. இதன் காரணமாகத்தான் இமயத்தின் அடிவார நாடுகளில் நில நடுக்கம் ஏற்படுகிறது. அடிக்கடி நேபாளத்தில் இடம்பெறும் நில நடுக்கங்களுக்கும் இக்கண்டத்தகடுகள் ஒன்றின் கீழ் ஒன்று செருகித் தள்ளுவதே காரணமாகும்.

250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பரந்திருந்த பஞ்ஜியா என்ற பெருநிலத்திலிருந்தே இன்றிருக்கும் கண்டங்களும் நிலங்களும் உருவாகியுள்ளன. பஞ்ஜியாவில் லெமூரியாவுக்கு என்றோ, குமரிக் கண்டத்திற்கு என்றோ, ஒரு கண்டத்திற்குரிய நிலம் இருக்கவே இல்லை. ஆனால், பஞ்ஜியாவிலிருந்து பிரிந்து போன இந்தியாவின் கரையோர நிலங்கள் - சில சமயம் 200 கிலோமீட்டர் அகலம் வரையான நிலங்கள் - பனியுக இறுதியில் கடலினுள் அமிழ்ந்து போயின. அவற்றில் ஒன்று குமரிநாடாக இருந்திருக்க வேண்டும். பலப்பல தலைமுறைகளுக்கு முன் னர் இடம்பெற்று, மக்களின் மரபு ஞாபகங்களிலிருந்த (Race Memories) இச்சம்பவத்தை சங்க இலக்கியங்கள் குறிப்பிட் டிருக்கலாம்.



1. தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, மடகஸ்கார், இந்தியா, அன்டாட்டிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களும் நாடுகளும் இணைந்த பெருங்கண்டம் கொண்டவானா. இந் நிலப்பகுதிகளின் இன்றைய கரைகள் கூட ஒன்றோடொன்று சரியாக இணைகின்றதும்

2. முற்காலத்தில் வாழ்ந்த சில உயிரினங்களின் பாறைப் படிவங்கள் இணைந்திருந்த இந் நாடுகளில் காணப்படுவதும் (படம் பார்க்க) – வெஜினரின் 'கொண்டவானா' கோட்பாட்டுக்கு வலு சேர்கிறது.

ஒரு காலத்தில் இந்தியா மடகஸ்கார் தீவோடு ஒட்டிக்கொண் டிருந்து பின்னர் பிரிந்து போனதை வெஜினர் வெகு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார். எனவே மடகஸ்காரிலும் இந்தியா விலும் ஒரே வகையைச் சேர்ந்த புராதன விலங்குகளும், தாவரங்களும் இருப்பது சாத்தியமாகிறது. வெஜினரைத் தொடர்ந்து வந்த பல பூகோள ஆய்வாளர்கள் அவரது கோட் பாடுகள் அசைக்கமுடியாத உறுதியான ஆதாரங்களின் மேல் அமைக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

வெஜினர் முன்வைத்த ஆதாரங்களையும், கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய அறிஞர்களும், விஞ்ஞானிகளும் லெமூரியா என்றொரு கண்டம் இருந்திருக்கச் சாத்தியமில்லை என்பதை உணர்ந்து ஸ்கிளேட்டரின் கருத்தை நிராகரித் தார்கள். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மேல்நாடுகளில் லெமூரியா கருத்து வலுவிழந்து போய் மக்கள் நினைவினின்றும் மறைந்து போயிற்று. ஆனால் தமிழகத்தில் பல அறிஞர்கள் இவ்விஞ்ஞான முடிவுகளைப் பற்றி அறிந்திருந்தும் அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருந்தார்கள்.

இவர்களில் அரசியல் சார்புடையோர் செய்த தவறான பிரசாரங் களாலும், எழுதிய தவறான நூல்களாலும், தவறான பாடப்புத் தகங்களாலும் மாணவர்களுக்குத் தவறான தமிழர் வரலாறு போதிக்கப் பட்டது. நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய நூலில் "லெமூரியா அல்லது குமரிக்கண்டத் தில் ஆரம்பமான திராவிட நாகரிகமே தென்னிந்திய நாகரிகம். அது இங்கிருந்து மொகஞ்ச தாரோவுக்கும் ஹரப்பாவுக்கும் பரவி அங்கிருந்து சென்று சுமேரிய நாகரிகமானது. அங்கிருந்தே அரேபியா, எகிப்து, கிரேக்கம், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு நாகரிகம் பரவியது. ஒவ்வொரு திராவிடனும் இதை நினைக் கும்போது பெருமையால் பூரிப்படையாமல் இருக்க முடியாது." எனக் குறிப் பிடுகிறார்.

தேவநேயப் பாவாணரின் சீடரான மதிவாணன் 1970 -80களிலும் லெமூரியா பற்றியே பேசிக்கொண்டிருந்தார். அவர் 1981இல் தமிழக அரசு வெளியிட்ட தமிழரின் தோற்றம் பற்றிய மெய்விளக்கப் படத்திற்கு (Documentary Film) வசனம் எழுதி யிருந்தார். இன்றைய ஆய்வுகள் காட்டும் பூகோள, நிலவியல், அறிவியல் ஆதாரங்களை விடுத்து பாவாணர், அப்பாத்துரை



இந்தியாவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தின் அடியிலுள்ள கடல் மேடுகள். அமெரிக்க நாசா நிறுவனம் வெளியிட்ட செய்மதி ஆய்வுகள் காட்டும் இந்து சமுத்திர அடிநிலப்படம். OCEAN FLOOR RIDGES OF THE INDIAN OCEAN NEAR PENINSULAR INDIA - NASA

1. மாலைதீவு-லட்சதீவு-சாகோஸ் மலைமுகடு 2. குமரிக்கடல் மலை 3. தொண்ணூறு பாகை-கிழக்கு கடல்மலைத் தொடர் 4. வலது பக்கம்: சுண்டா தீவுகளைக் கொண்ட கடலடிமேடை.

Image Source - National Aeronautics and Space Administration (NASA)

போன்றோரின் அதீத மொழிப்பற்றினால் உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட்ட நூல்கள் சான்றுகளாக முன்வைக்கப்பட்டன. இவை தமிழர் வரலாறாக பாடநூல்களில் இடம்பெற்றன. இம் மாதிரியான எழுத்துகளால் உண்மையான தமிழர் வரலாறு திரிபடைந்து புராண, இதிகாச, கற்பனைக் கதைகளாக இன்று கூறப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சியடையாத ஒரு காலத்தில் பூமி தட்டை யானது என்றும், அதற்கு மேலும் கீழும் விண்ணுலகும்,

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போராில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com



பனிப்படிவு யுகங்கள் (Ice Ages)

பாதாள உலகும் இருப்பதாகவும் அக்கால அறிஞர்கள் எழுதி வைத்தார்கள். அறிவியல் வளர்ச்சியடைந்த போது எவ்வாறு பூமி உருண்டையானது என்பதை அறிந்து புராதன கருத்துகள் நிராகரிக்கப்பட்டனவோ, அதுபோன்று நவீன விஞ்ஞான ஆய்வுகள் காட்டும் ஆதாரபூர்வமான உண்மைகளை ஏற்றுக்கொள்வதே அறிவுடமை ஆகும்.

இந்து சமுத்திர அடிநில ஆய்வுகள் (Survey of the Indian Ocean Floor)

அகில உலக நிறுவனமான சர்வதேச விஞ்ஞான ஆலொசனைச் சபையின் (International Council for Science) ஓர் அங்கமான சர்வதேச சமுத்திர ஆய்வு நிர்வாகக் குழு (Scientific Committee on Oceanic Research: SCOR) அமெரிக்க தேசிய விஞ்ஞான நிறுவனத்தின் (National Science Foundation) பொருளுதவியோடு 1960ஆம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதிலுமுள்ள முக்கியமான பெருங்கடல்களை ஆய்வு (Survey) செய்து வந்திருக்கிறது. இக்குழு 1962ஆம் ஆண்டிலிருந்து இந்து சமுத்திர கடலடி ஆய்வை மேற்கொண்டது. இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் பெறுபேறுகள் ‘International Indian Ocean Expedition: SCOR Report 1964’ என்ற அவர்களது அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் அமெரிக்க செய்மதி ஆய்வுகள் (Satellite Surveys) 1990களில் இந்து சமுத்திரத்தின் பல பகுதிகளை விண் வெளியிலிருந்து படம்பிடித்து வெளியிட்டிருக்கின்றன. சமீப காலங்களில் ‘இந்து சமுத்திர ஆய்வுக் குழு’ (Indian Ocean Research Group: IORG) மற்றும் ‘Catlin Seaview Survey’ ஆகிய நிறுவனங்களும் இந்து மாகடல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. இவர்களில் எந்த நிறுவனத்தினரும் இந்து மாகடலின் அடியில் இந்தியாவுக்குத் தெற்கே ஒரு நிலப்பரப்பு அமிழ்ந்திருப்பதைக் காணவில்லை. அதே சமயம் தென்கிழக்கு ஆசியாவில் - இந்து மாகடலின் அடியில் - அமிழ்ந்துபோன தென்கிழக்கு ஆசியாவின் சுண்டா பெருநிலப்பரப்பு இனங்காணப்பட்டிருக்கிறது.

இந்து சமுத்திர ஆய்வுகளில், நிலக் கண்டங்களில் மலைத் தொடர்கள் இருப்பது போல சமுத்திரத்தினுள்ளும் மலைத் தொடர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1. மாலைதீவு-லட்சத்தீவு-சாகோஸ் மலைமுகடு 2. குமரிக்கடல் மலை 3. தொண்ணூறு-பாகை-கிழக்கு கடல் மலைமேட்டுத் தொடர் (1. The Chagos-Laccadive Ridge 2. Comorin Seamounts and 3. The Ninety-East Ridge) என்பன இந்தியாவிற்குச் சமீபமாக இந்து சமுத்திரத்திலுள்ள கடல் மலைகளும், கடல் மேடுகளுமாகும். இந்தியாவுக்குத் தொலைவிலிருக்கும் முக்கியமான இந்து சமுத்திர கடலடி பூகோள அமைப்புகள்: மத்திய மேடு (Central Ridge), தென்-கிழக்கு இந்து சமுத்திர மேடு (Southeast Indian Ridge), கேர்குலன் மலைப்பீடம் (Kerguelen Plateau) என்பன. இந்து சமுத்திரத்தின் தென் துருவப் பகுதியில் அவுஸ்திரேலியாவிலிருந்து தென்மேற்காக 3,000 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு கடலடி எரிமலையின் உச்சியே இந்த கேர்குலன் மலைப்பீடம் (SCOR Report, 1964; James R. Heirtzler, 1977; Verzbitsky, E.V. 2003).

கடைசியாக நடைபெற்ற பனியுகத்தின் முடிவில் சமுத்திர மட்டம் மேலெழுந்தபோது தென்-கிழக்கு ஆசியாவில் இந்து சமுத்திரம் மூடிக்கொண்ட ‘சுண்டா பெருநிலம்’ (படம்). மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், ஜாவா, சுமாத்ரா, போர்ணியோ ஆகிய தீவுகள் இப்பெருநிலத்தின் மூழ்கிப் போகாது விட்ட, நீரின் மேலே தெரியும் நிலப்பகுதிகள். இவை அமிழ்ந்த காலத்தில் இந்தியக் கரையோர நிலங்களும் நீரில் மூழ்கி, இலங்கை இந்தியாவிலிருந்து தனிநாடாகப் பிரிந்தது.

நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்



www.sangathamil.com

உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி பதவி விலக வேண்டும்!

அமெரிக்க அதிபர் டிரம்ப் விடுத்த அதிரடி சாவல்!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

11.10.2026

உக்ரைனுக்குப் புதிய அதிபர் வர வேண்டிய நேரம் வந்துவிட்டது என டிரம்ப் தெரிவித்துள்ளார். ரஷ்ய டீசல் ஒப்பந்தத்தால் வெடித்த டிரம்ப்–ஜெலென்ஸ்கி மோதல் ஐரோப்பிய நாடுகளில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இரு தலைவர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடு, இப்போது போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்ற கேள்வியைக் கடந்து, உக்ரைனின் எதிர்கால அரசியல் தலைமைத்துவம் யாரால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியாகவும் மாறியுள்ளது.

உலக அரசியலில் நட்பு நாடுகளுக்கிடையிலான உறவுகள் நிரந்தரமானவை அல்ல. அவை தேசிய நலன்கள், பொருளாதாரத் தேவைகள், இராணுவ உத்திகள் மற்றும் அரசியல் கணக்கீடுகளால் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கு அண்மைய உதாரணமாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கி இடையே உருவாகியுள்ள புதிய மோதலைக் குறிப்பிடலாம்.

2026 ஒக்டோபர் 9ஆம் திகதி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் டீசல் எரிபொருள் விநியோகம் தொடர்பான உடன்பாட்டை அறிவித்த டிரம்ப், அதற்கு மறுநாள் ஜெலென்ஸ்கியின் தலைமைத்துவத்தையே கேள்விக்குள்ளாக்கினார். ஒரு உடனபாட்டைச் செய்து கொள்ளக்கூடிய புதிய தலைவரை உக்ரைன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அவரது கருத்து, வெறும் அரசியல் விமர்சனமாக மட்டுமல்லாமல், உக்ரைன் போர், அமெரிக்காவின் பொருளாதார முன்னுரிமைகள், ரஷ்யாவுடனான உறவுகள் மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஒற்றுமை ஆகியவற்றைச் சுற்றியுள்ள ஆழமான முரண்பாடுகளின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகிறது.

டிரம்ப்–ஜெலென்ஸ்கி சர்ச்சை

உக்ரைனுக்கு ஆயுதங்கள், உளவுத் தகவல்கள், நிதியுதவிகள் மற்றும் இராஜதந்திர ஆதரவை வழங்கிய அமெரிக்கா, இந்தப் போரின் முக்கியமான வெளிநாட்டுப் பங்காளியாக இருந்து வந்தது. ஆனால் டிரம்ப் நிர்வாகத்தின் அணுகுமுறை, போரில் உக்ரைன் வெற்றி பெறுவதற்கான உதவிகளை வழங்குவது என்பதிலிருந்து, போருக்குப் பேச்சுவார்த்தை மூலம் முடிவுகாண்பதை முன்னிலைப்படுத்தும் திசையில் நகர்ந்துள்ளது.

டிரம்ப், ஜெலென்ஸ்கி போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று குற்றஞ்சாட்டுகிறார். அதேவேளை, உக்ரைனின் நிலப்பரப்புகளை இழந்துவிட்டு ரஷ்யாவின் நிபந்தனைகளுக்கு இணங்குவது உண்மையான அமைதியை உருவாக்குமா என்ற கேள்வி ஜெலென்ஸ்கியின் அணுகுமுறையில் முக்கிய இடம் பெறுகிறது.

இரு தலைவர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடு, இப்போது போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்ற கேள்வியைக் கடந்து, உக்ரைனின் எதிர்கால அரசியல் தலைமைத்துவம் யாரால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியாகவும் மாறியுள்ளது.

ரஷ்யாவுடன் டீசல் ஒப்பந்தம்

ஒக்டோபர் 9ஆம் திகதி புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், ரஷ்யாவிலிருந்து அமெரிக்காவுக்கும் சர்வதேசச் சந்தைக்கும் டீசல் எரிபொருள் விநியோகத்தை அதிகரிப்பதற்கான ஒப்பந்தத்தை டிரம்ப் அறிவித்தார்.

அவரது அறிவிப்பின்படி, உடனடியாக 300,000 தொன்னுக்கும் அதிகமான டீசல் விநியோகம், நவம்பரில் மேலும் 500, 000 தொன், அதன் பின்னர் ஒரு மில்லியன் தொன், பின்னர் மூன்று மில்லியன் தொன் வரையிலான விநியோகம் எனப் பல கட்டங்களைக் கொண்ட திட்டம் முன்வைக்கப்பட்டது. ரஷ்ய எரிபொருள் ஏற்றுமதிக்கான சில தடைகளைத் தளர்த்தும் நடவடிக்கையும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் டீசல் விலை உயர்ந்திருப்பது விவசாயிகள், சரக்குப் போக்குவரத்துத் துறை, தொழில் துறையினர் மற்றும் பொதுமக்கள் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. டிரம்பின் அரசியல் கணக்கில், எரிபொருள் விலையைக் குறைப்பது உள்நாட்டுப் பொருளாதாரத்துக்கும் குடியரசுக் கட்சியின் தேர்தல் நலன்களுக்கும் முக்கியமானதாக இருக்கிறது. குறிப்பாக, 2026 நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க இடைக்காலத் தேர்தல்களுக்கு முன்னதாக எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்துவது அவருக்கு அரசியல் ரீதியாக முக்கியமான சவாலாக உள்ளது.

ஜெலென்ஸ்கியின் எதிர்ப்பு

இந்த திட்டம் புட்டினுக்கு வழங்கப்படும் பரிசா என ஜெலென்ஸ்கி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். டிரம்பின் அறிவிப்பால் அதிருப்தியடைந்த ஜெலென்ஸ்கி, இந்த ஒப்பந்தம் நியாயமற்றது என்றும் நேர்மையான அணுகுமுறை அல்ல என்றும் விமர்சித்தார். ரஷ்யாவுக்கு வழங்கப்படும் தடைத்தளர்வுகள், உக்ரைனுக்கு எதிரான அதன் போரை நீடிக்க உதவக்கூடும் என்பதே அவரது முக்கியமான வாதமாகும்.

ரஷ்யா எரிபொருளை விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானத்தைப் பெறுமானால், அந்த வருமானம் ஆயுத உற்பத்தி, ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் இராணுவ ஆட்சேர்ப்பு போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாம் என உக்ரைன் எச்சரிக்கிறது.

ஜெலென்ஸ்கி முன்வைத்த மாற்றுத் திட்டமும் கவனிக்கத்தக்கது. ரஷ்யா உக்ரைனின் மின்சார நிலையங்கள் மற்றும் எரிசக்திக் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தினால், ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த உக்ரைன் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், இரு தரப்பும் ஒரே நேரத்தில் எரிசக்திக் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை நிறுத்தும் பரஸ்பர உடன்பாட்டையே உக்ரைன் விரும்புவதாகத் தெரிகிறது. ஆனால் டிரம்ப் நிர்வாகத்தின் பார்வையில், ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீதான உக்ரைனின் தாக்குதல்கள் சர்வதேச எரிபொருள் சந்தையையும் அமெரிக்க நுகர்வோரையும் பாதிக்கின்றன. இதனால், அமெரிக்காவின் பொருளாதார நலன்களை உக்ரைனின் இராணுவ உத்திகளுடன் இணைத்துப் பார்க்கும் அணுகுமுறை உருவாகியுள்ளது.

உக்ரைனுக்குப் புதிய அதிபர் தேவை

டிரம்பின் அதிகாரப்பூர்வ அரசியல் செய்தியாக உக்ரைனுக்குப் புதிய அதிபர் தேவை என்ற அறிவிப்பு ஐரோப்பிய நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒக்டோபர் 10ஆம் திகதி டிரம்ப் வெளியிட்ட கருத்து இந்த மோதலைப் புதிய கட்டத்துக்கு எடுத்துச் சென்றது.

ஒரு உடன்பாட்டைச் செய்து கொள்ளக்கூடிய புதிய தலைவரை உக்ரைன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பொருளில் கருத்துத் தெரிவித்த அவர், உக்ரைனுக்கு புதிய அதிபர் தேவைப்படும் நேரம் வந்துவிட்டதாகக் கூறினார். ஜெலென்ஸ்கி பல சந்தர்ப்பங்களில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் ஒப்பந்தங்களைச் செய்திருக்கலாம் என்றும், ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

டிரம்ப் ஜெலென்ஸ்கியின் போர்த் தலைமையை விமர்சித்து, விரைவான பேச்சுவார்த்தைக்கு இணங்கக்கூடிய உக்ரைன் தலைமையை விரும்புகிறார். போர் தொடர்வதால் அமெரிக்காவுக்கு ஏற்படும் பொருளாதார மற்றும் அரசியல் செலவுகளைக் குறைப்பதே அவரது நோக்கமாக இருக்கலாம்.

இத்தகைய கருத்து உக்ரைனின் உள்நாட்டு அரசியலில் வெளிநாட்டுத் தலையீடாகப் பார்க்கப்படலாம். ஒரு நாட்டின் தலைவரை மாற்ற வேண்டும் என்று மற்றொரு நாட்டின் அதிபர் வெளிப்படையாகக் கூறுவது, இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையைப் பாதிக்கக்கூடியது.

மேற்கத்திய நாடுகளுக்கு சவால்

இந்த ஒப்பந்தத்தின் முக்கியமான விளைவு, ரஷ்யாவுக்கு எரிசக்தி வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு உருவாகுவது தான். உக்ரைன் போருக்குப் பின்னர் ரஷ்யாவின் எரிசக்தித் துறையைப் பொருளாதார ரீதியாகக் கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பல்வேறு தடைகளை விதித்திருந்தன.

அத்தகைய சூழலில், டிரம்ப் நிர்வாகம் சில தடைகளைத் தளர்த்தி ரஷ்ய டீசல் விநியோகத்துக்கு வழிவகுப்பது, மேற்கத்திய நாடுகளின் ரஷ்யக் கொள்கையில் முரண்பாடு இருப்பதாகத் தோற்றமளிக்கிறது. ஐரோப்பிய நாடுகள் இந்த நடவடிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்ததுடன், ரஷ்யாவுக்கு எதிரான தடைகளுக்கான தமது உறுதிப்பாட்டையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

எனினும், எரிபொருள் விநியோகம் அதிகரிப்பதால் அமெரிக்காவில் விலைகள் உடனடியாகக் குறையும் என்று உறுதியாகக் கூற முடியாது. சர்வதேசச் சந்தை விலைகள், போக்குவரத்துச் செலவுகள், விநியோகத் தடைகள் மற்றும் மத்திய கிழக்கின் போர் நிலைமை போன்ற பல காரணிகள் எரிபொருள் விலையைத் தீர்மானிக்கின்றன.

எனவே, டிரம்பின் நடவடிக்கை அமெரிக்காவின் குறுகியகாலப் பொருளாதார நலன்களுக்காக எடுக்கப்பட்ட முடிவா அல்லது ரஷ்யாவுடனான நீண்டகால உறவை மறுசீரமைக்கும் முயற்சியா என்பதை எதிர்கால நடவடிக்கைகளே தெளிவுபடுத்தும்.

தொடர்ச்சியான போர் உயிரிழப்புகளையும் பொருளாதார அழிவையும் அதிகரிக்கிறது. எனவே, பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் அவசியமானவை. போர் நிறுத்தம் என்பது வெறுமனே துப்பாக்கிச் சூடு நிறுத்தப்படுவதைக் குறிப்பதல்ல. அது நிலையான அமைதியாக மாற வேண்டுமானால், இரு தரப்பினருக்கும் நடைமுறைப்படுத்தக்கூடிய நிபந்தனைகளும் நம்பகமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தேவை.

ஜெலென்ஸ்கி அனைத்து சமரசங்களையும் நிராகரிக்கிறார். ரஷ்யாவுடன் எரிசக்திக் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்குப் பரஸ்பர உடன்பாட்டை முன்மொழிந்திருப்பது, நிபந்தனைகளுடன் கூடிய சமரசத்துக்கு அவர் தயாராக இருப்பதைக் காட்டுகிறது. அதேவேளை, டிரம்ப் விரும்பும் ஒப்பந்தம் எந்த நிபந்தனைகளைக் கொண்டிருக்கும் என்பதும் முக்கியமானது.

அமைதி முயற்சியா, அரசியல் அழுத்தமா?

டிரம்ப்-ஜெலென்ஸ்கி சர்ச்சை சர்வதேச அரசியலில் நட்புறவுகள் தேசிய நலன்களின் அடிப்படையில் எவ்வாறு மாறுகின்றன என்பதற்கான முக்கியமான எடுத்துக்காட்டாகும். அமெரிக்காவுக்கு எரிபொருள் விலையைக் குறைப்பது ஓர் உள்நாட்டுப் பொருளாதார முன்னுரிமை. உக்ரைனுக்கு நாட்டின் இறையாண்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது வாழ்வாதாரப் பிரச்சினை.

ரஷ்யாவுக்கு எரிசக்தி வருமானத்தைப் பெருக்குவதும் தனது அரசியல் மற்றும் இராணுவ இலக்குகளை முன்னெடுப்பதும்

முக்கியமானவை. இந்தப் புதிய மோதல் அமெரிக்கா-உக்ரைன் உறவுகளை மேலும் பலவீனப்படுத்துகிறதா என்பதே அடுத்தகட்ட சர்வதேச அரசியலின் முக்கியமான கேள்வியாக இருக்கும்.

இலட்சியங்கள் வாழ்கின்றன

– ரமணன்
களத்தில் 22.10.1994 –

மணலாற்றின் எல்லைப்புறத்தில் வளர்ந்து நிற்கும் காட்டு மரங்கள் சல சலத்து 'சுதந்திரம்', 'சுதந்திரம்' என்ற ஓசையை எழுப்பிய வண்ணம் இருக்கின்றன.

எதிரிகளின் வரவைக் கண்நோக்கி, கைகளிலே துப்பாக்கியுடன் பனிக்குளிர் உடலில் பரவ, நானும் என் தோழிகளும் தரையிலே படுத்திருக்கின்றோம். விடிவை வரவேற்கும் பறவையினங்களின் ஒலி காற்றிலே படர்ந்துவர, காலைக் கதிரவன் ஒளிக்கிரணங்களை வீசி, ராஜ நடை நடந்து வான வீதியில் வருகின்றான்.

எனது அணியினரின் காவல் பணி முடிந்ததும், அந்த இடத்திற்கு வேறு தோழிகள் மாற்றடப்படனர். நாம் சிறிது ஓய்விற்காக பாசறை நோக்கி புறப்பட்டோம்.

பாசறையின் ஒரு ஓரத்தில், வீரச்சாவை தழுவிவிட்ட தோழன் ஒருவனின் வரலாற்றுப் புத்தகத்தில் மூழ்கியபடி இருந்த நான், சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து விட்டேன். துர்க்காவின் கை என்னில் பட்டதும் துள்ளிக் குதித்து எழுந்தேன். போர் முனையில் இருக்கும் எந்த வீரர்களாயினும், தன்னை மறந்து இருந்து விடக்கூடாது என்பது ஓர் விதி. தூக்கக் கலக்கத்துடன் எழுந்த நான், எனக்கு முன்னே ஓர் கடிதத்துடன் நின்ற துர்க்காவை உற்று நோக்கினேன். அவள் என்னைப் பார்த்தபடி கடிதத்தை நீட்டினாள். வாங்கிப் பிரித்த நான் சிறிது நேரம் சிலையானேன்.

"கவலைப்படாதே! எல்லோருக்கும் நடப்பதுதான். உன்னை உடனடியாகப் புறப்பட்டுச் செல்லட்டாம்" என்றாள் துர்க்கா. ஒழுங்குகள் எல்லாவற்றையும் அவளே கவனித்துள்ளாள் என்பது எனக்குப் புலனாகியது.

பத்தமாதம் என்னைச் சுமந்து பெற்ற என் தாய். இவ்வுலகை விட்டு மறைந்து விட்டாள். அவளின் உயிரற்ற உடல், எனக்காக இந்த மண்ணிலே காத்தக் கிடக்கின்றது. அவளை இறுதி நேரம், இறுதியாக நான் போய் பார்க்க வேண்டும். என்னதான் இருந்தாலும் போர் முனையிலே திடங்கொண்ட நெஞ்சுறுதியுடன் எதிரியுடன் போர் புரிந்தாலும், என் அன்னையை இழந்து விட்டேனே என்ற அந்த நினைவு தாங்க முடியாமல் இதயத்தை அழுத்தியது. கடந்தகால அவளின் வாழ்க்கை... எனக்காக அவள் பட்ட இன்னல்கள்... மனம் வெந்து அழுதது. என் நிலையை என்னுடனே இருந்து கவனித்த துர்க்கா, ஏதொ ஆறதல் வார்த்தைகள் சொல்லுகின்றாள். அவை ஒன்றும் என் மனதில் பதியவில்லை. என் மனதில் என் அம்மாவின் உருவம் தான் நிறைந்திருந்தது. கண்ணீர் என்னை அறியாமலே கன்னத்தில் வழிந்தது.

"என்ன ஜெய்சி குழந்தைப்பிள்ளை மாதிரி... அழாதையும். நீர் ஒரு திடங்கொண்ட விடுதலைப்புலி வீராங்கனை என்பதை மறந்துவிட்டீரா? எத்தனை சாவுகளை கண்ணெதிரே கண்ட நீர், இப்படிக் கலங்கக் கூடாது" என் தோழி துர்க்காவின் குரல் எனக்கு தெளிவாகக் கேட்கின்றது.

வாகனத்தில் எப்படி ஏறி அமர்ந்தோம், பல மைல்களுக்கப்பால் உள்ள குமுழமுனைக் கிராமத்தை எப்படி அண்மித்தோம் என்பது எனக்கு தெரியவில்லை. அழகிய அந்தக் கிராமம், இராட்சதப் பிறவிகளால் வானிலிருந்தே சிதைக்கப்பட்டிருந்தது. வீடு வாசல்கள் இடிந்தும், விழுந்தும், கால்நடைகள் இறந்தும் கிடந்தன. வாசலில் கட்டப்பட்டிருந்த வாழையும், தோரணங்களும் என்வீட்டில் நடந்த இழப்பு நிகழ்வை வெளிப்படுத்தின. எமது வாகனம் போய் நின்றதும், என் தோழிகளும் நானும் இறங்கி வளவினுள் சென்றோம். உறவினர்களில் சிலரும், மற்றும் பலரும் எம்மை எட்டிப்பார்த்தனர். அவர்களின் முகங்கள் காய்ந்து, வரண்டு சோகமாக காட்சியளித்தன. என்னைச் சூழ்ந்து கொண்ட உறவினர்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள். பறை மேளம் முழங்கியபடி இருந்தது. அம்மா 'அழகான வெள்ளை ஆடையில் மாலுக்குள் இருந்த கட்டிலில் படுத்திருந்தாள். அவளின் முகத்தில், நான் காலங்காலமாக பார்த்த ஏக்கம் விலகாமல் படிந்து போய் கிடந்தது.

சுற்றிவரப் பலர் தந்தம் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அம்மாவின் முகத்தைப் பார்த்து அழுது தீர்த்த நான் நிமிர்ந்தேன்– என் முன்னே என் தாயின் தமையனார்கள் என் மாமா சிதம்பர முதலியார் – விசும்பி அழுது கொண்டிருந்தார். மாமா... இப்படி... என்னால் நம்பமுடியவில்லை. என் மாமாவைப் பார்த்து.

"மாமா, கொஞ்சநேரம் இப்படி வாங்கோ" என்றேன். என்னைப் பின்தொடர்ந்தவர்...

"என்ன பிள்ளை என்ன சங்கதி" என்றார். சொல்ல வந்ததை சொல்லத் தெரியாமல் நான் மௌனமாக நின்றேன். மாமாவே தொடர்ந்தார்.

"எங்கட குலம் பலரால் பாராட்டப் பெற்ற, முதலியார் பரம்பரையில் வந்த வேளாளர் குலமெண்டு எல்லோருக்கும் தெரியும் பிள்ளை. இந்த ஊரிலே ஒரு வருக்கும் செய்யாத முறையிலே இந்தச் சாவீட்டை நடத்திக் காட்டிறன் பார்" என்று பெருமை பேசியபடி என்னைப் பார்த்தார். அவரின் இந்த வார்த்தைகளை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. எனக்கு வந்த கோபத்திற்கு என்ன செய்வதென்றே தெரியாமல், சிறிது நேரம் அமைதியானேன்.

"என்ன பிள்ளை நேரம் போச்சுதெல்லே இஞ்ச தம்பி அந்தோனியைப் பிடிச்சு, பொம்பிளையளைக் கூட்டிக் கொண்டு போய் குளிப்பாட்டுற வேலையைக் கவனியுங்கோ" மாமா சுறு சுறுப்பாக நின்றார். ஒரு சுறுட்டை எடுத்து பற்ற வைத்தபடி என்னைப் பார்த்து.

"பிள்ளை உப்படி பேசாமல் இருந்தால் நான் என்னசெய்கிறது" என்றார் புகையைவிட்டபடி. வறுமையில் வாடிய போது எம்மை வந்து எட்டிப் பார்க்காத இந்த மாமா, இப்ப எனது அம்மாவின் சாவில், தமது புகழை நிலைநாட்டத் துடிக்கிறார். என்னுள் ஒரு வேதனைச் சிரிப்பை உதிர்த்த நான், "மாமா இந்த சமுதாயத்தில் சாதி ஒழிப்பை மேற்கொண்டு, அடிமைத் தொழில்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேணும் எண்ட ஓர் கொள்கையை, நாங்கள் மக்களின் முன் வைத்துள்ளோம். சனமும் இப்ப இதுகளை கைவிட்டு வருகின்றார்கள். இப்படி ஒரு நல்ல காலம் மலர்ந்து வரேக்கை, அது என்ர அம்மாவின் சாவால் அடியோடு மாறக்கூடாது."

என் நெறுசத்து உணர்வுகளை கொட்டி விட்டு, மாமாவைப் பார்த்தேன். முகத்தில கோபம் பொங்க, "பிள்ளை நான் ஆருக்கு இதுகள் எல்லாம் செய்தனான். உன்ரை அம்மாவுகக்கு – என்ர தங்கச்சிக்கு – அதில உனக்கு விருப்பம் இல்லையென்டால், நான் இதில நிக்க விரும்பேல்ல" என்றபடி துவாயை உதறித் தோளில் போட்டுக்கொண்டார். போட்ட வெத்திலையையும் காறித் துப்பிவிட்டு, "லெச்சமி... இனி ஒரு நிமிசம் கூட இஞ்ச நிக்கத் கூடாது" என்று கர்ச்சித்தார். மாமாவின் குரல் கேட்டவுடன், மாமியும் பிள்ளைகளும் இன்னும் சிலரும் அவர் பின்னே சென்றார்கள். அவர்கள் ஏன் செல்லுகின்றார்கள் என்ற கேள்வியை, அங்கே நின்றவர்கள் பார்வையால் கேட்டனர்.

"நாட்டில் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துங்கள்; சாதி அடிப்படையில் தொழில்களை கைவிட்டு, சமதர்ம பாதைக்கு வாருங்கள்; புதிய சமுதாயம் ஒன்றைப் படைக்க ஒன்று படுங்கள்" என்று குரல் கொடுக்கும் நாங்களே, அதை செயல்படுத்தாமல் விடக்கூடாது. அப்படி விட்டோமானால், மக்களால் என்றோ ஒரு நாள் தூக்கி வீசப்படுவோம் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பே, இப்போ மாமா என்னையும் என் தாயையும் விட்டுப்போகின்றார் என்ற உண்மை, எத்தனை பேருக்குப் புரியும். அங்கே நின்ற சிலருடன் என் அம்மாவுக்கு செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு ஆயத்தமானேன்.

"கொள்ளி யார் வைக்கிறது ஆரோ ஓரவர் கத்தினார். மாமாவும் போய்விட்டார். மாமா நின்றிருந்தால் காலம் முழுவதும் அம்மாவை வேதனைப்படுத்திய மாமாவே, அவளுக்கு தீயும் இட்டிருப்பார்.

"ஏன், நான் நிக்கிறன்" என்னையும் அறியாமல் எனது வார்த்தைள் வெளியில் வந்தன. சுற்றி நின்றவர்கள் அதிசயமாகப் பார்த்தார்கள். அம்மாவின் பிள்ளை நான். என்னைவிட, அம்மா விற்குத் தீயிட, அங்கு எவருக்கும் தகுதி இல்லை.

அம்மாவின் இறுதிப் பயணம் தொடர்ந்தது.

போராளிகளின் கடமை நாட்டைக் காப்பது மட்டுமல்ல – புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதும் அவர்களின் கடமையே. சம்பிரதாயங்களும் சில சமூக பழக்க வழக்கங்களும் எம்மை அறியாமை இருளினுள் தள்ளி விடுகின்றன.

அம்மா சிதையில் கிடந்தாள். இந்த உலகத்தில் எனக்கு கண்ணாக இருந்து, ஏன் எல்லாமாகவே இருந்த அம்மா... தீயுடன்... நான் அழுதேன். என்னால் இயலுமட்டும் அழுதேன்.

தீ... அம்மாவின் சிதையில்... என் கைகள் நடுங்கியது. உள்ளம் வேதனையால் துடித்தது. ஆனாலும், என் உள்ளத்தில் புதிய உணர்வு ஒன்று ஆக்கிரமித்து நின்றது.

பெண் இனம் விழிப்புற, காலம் காலமாக மனித இனம் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயம், என்னால் மாற்றப்பட்டது என்ற பெருமையில் என்னை நான் மறந்து நின்றேன்.



கலினின்கிராட்டை நேட்டோ தாக்கினால் ரஷ்யா அணு ஆயுதத்தை களமிறக்குமா?

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

04.10.2026

ஐரோப்பாவின் பாதுகாப்பு நிலைமை மீண்டும் ஆபத்தான கட்டத்தை நோக்கிச் செல்கிறது என்ற எச்சரிக்கைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக, ரஷ்யாவின் கலினின்கிராட் (Kaliningrad) பிராந்தியத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு நிலைமை, ரஷ்யா-நேட்டோ உறவுகளில் புதிய பதற்றத்தை உருவாக்கியுள்ளது. பனிப்போருக்குப் பின்னர் ஐரோப்பா எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் ஒன்றாக இது இருக்கலாம் என்று சில ஐரோப்பிய பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்.

சமீபத்தில் ரஷ்யா, நேட்டோ நாடுகளுக்கு எழுத்துப்பூர்வமான எச்சரிக்கை ஒன்றை அனுப்பியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கலினின்கிராட் ரஷ்யாவின் பிரதான நிலப்பரப்பிலிருந்து தனிமைப்படுத்தப்படும் வகையில் நேட்டோ நடவடிக்கை மேற்கொண்டால், ரஷ்யா தன்னிடம் உள்ள அனைத்து ஆயதங்களையும் பயன்படுத்தத் தயாராக இருப்பதாக அந்த ஆவணத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் அணு ஆயுதங்களையும் ரஷ்யா குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது.

கலினின்கிராட் விவகாரம், இன்றைய ஐரோப்பாவில் பழைய பனிப்போர் மனநிலைகள் எவ்வாறு புதிய வடிவத்தில் திரும்பியுள்ளது. இந்த பிராந்தியத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு நிலைமை, ரஷ்யா-நேட்டோ உறவுகளில் புதிய பதற்றத்தை உருவாக்கி-யுள்ளது. பனிப்போருக்குப் பின்னர் ஐரோப்பா எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் ஒன்றாக உள்ளது.

கலினின்கிராட் முக்கியத்துவம்:

கலினின்கிராட் ரஷ்யாவின் தனித்துவமான புவியியல் அமைப்பைக் கொண்ட பிராந்தியமாகும். இது ரஷ்யாவின் பிரதான நிலப்பரப்புடன் நேரடி நிலத் தொடர்பு இல்லாத ஒரு பிராந்தியம் ஆகும். பால்டிக் கடற்கரையில் அமைந்துள்ள இந்தப் பகுதி, ஒரு புறம் போலந்தாலும் மற்றொரு புறம் லித்துவேனியாவாலும் சூழப்பட்டுள்ளது.

போலந்தும் லித்துவேனியாவும் இரண்டும் நேட்டோ உறுப்பினர்கள். இதனால் கலினின்கிராட், ரஷ்யாவுக்கும் நேட்டோவுக்கும் இடையிலான நேரடி இராணுவ புவியியல் தொடர்பின் மிக முக்கியமான மையங்களில் ஒன்றாக மாறியுள்ளது. ரஷ்யா பல ஆண்டுகளாக கலினின்கிராட்டை வலுவான இராணுவத் தளமாக மாற்றியுள்ளது. அங்கு ஏவுகணை அமைப்புகள், வான் பாதுகாப்பு, கடற்படை வசதிகள் மற்றும் பிற இராணுவக் கட்டமைப்புகள் உள்ளன. இதனால் பால்டிக் கடல் மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பாதுகாப்பு கணக்கீடுகளில் கலினின்கிராட் முக்கிய இடம் பெறுகிறது.

கலினின்கிராட் தொடர்பான எந்த விவாதத்திலும் போலந்து - லித்துவேனியா எல்லைப் பகுதியிலுள்ள சுவால்கி இடைவெளி முக்கியமானதாகிறது. இது கலினின்கிராட் மற்றும் பெலாரஸ் இடையிலான குறுகிய நிலப்பகுதியாகும். நேட்டோவின் பால்டிக் நாடுகளான லித்துவேனியா, லாட்வியா, எஸ்டோனியா ஆகியவற்றுக்கு மேற்கு ஐரோப்பிய நேட்டோ நாடுகளிலிருந்து நிலவழி இணைப்பை வழங்கும் முக்கிய பாதைகளில் இதுவும் ஒன்று.

எனவே, எதிர்காலத்தில் ரஷ்யா-நேட்டோ இடையே நேரடி இராணுவ மோதல் ஏற்பட்டால், இந்தப் பகுதி மூலோபாய முக்கியத்துவம் பெறக்கூடும் என்ற கவலை நீண்ட காலமாகவே பாதுகாப்பு ஆய்வாளர்களிடம் உள்ளது.

ரஷ்யாவின் கடும் எச்சரிக்கை

ரஷ்யா அனுப்பியதாகக் கூறப்படும் தூதரக ஆவணத்தில், நேட்டோ மேற்கொள்ளும் சில இராணுவ நடவடிக்கைகள் ஆபத்தான பாதையில் செல்வதாக மாஸ்கோ குற்றஞ்சாட்டியுள்ளது. குறிப்பாக கலினின்கிராட் பகுதியை ரஷ்யாவின் பிரதான நிலப்பரப்பிலிருந்து துண்டிக்கும் நோக்கத்திலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், அது நேரடி ஆயுத மோதலுக்குக் காரணமாகலாம் என்று ரஷ்யா எச்சரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மோதல் தொடங்கிய ஆரம்ப கட்டத்திலேயே நேட்டோ நாடுகளின் முடிவெடுக்கும் மையங்கள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடும் என்ற கடுமையான எச்சரிக்கையும் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இது சாதாரண இராணுவ அறிக்கை அல்ல. அணு ஆயுதங்களைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருப்பது, இந்த எச்சரிக்கையின் தீவிரத்தை மேலும் அதிகரிக்கிறது.

ஆனால், இத்தகைய எச்சரிக்கை வெளியிடப்பட்டிருப்பது மட்டுமே ரஷ்யா உண்மையில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த முடிவு செய்துவிட்டது என்று பொருள் கொள்ள முடியாது. அணு ஆயுதப் பேச்சு, எதிரியின் கணக்கீட்டை மாற்றுவதற்கும், தடுப்பு நடவடிக்கையை வலுப்படுத்துவதற்கும், அரசியல் அழுத்தம் ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படலாம்.

நேட்டோவின் பதில்

நேட்டோ தனது பதிலில், தாம் ஒரு தற்காப்பு கூட்டணி என்றும், அதன் இராணுவப் பயிற்சிகளும் நடவடிக்கைகளும் ரஷ்யப் பிரதேசத்தை அச்சுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் தெரிவித்துள்ளது. மேலும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும், பொறுப்பற்ற அணு ஆயுதப் பேச்சுகளை நிறுத்த வேண்டும் என்றும் நேட்டோ வலியுறுத்தியுள்ளது.

நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட்டே, ரஷ்யாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்கள் தேவையற்றவை என்றும் அவை நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் இரு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ள போதிலும், அடிப்படைப் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. இது உண்மையான சிவப்புக் கோடா அல்லது தூதரக அழுத்தமா என்ற இந்தக் கேள்விக்கு இப்போது உறுதியான பதில் அளிப்பது கடினம்.

ஒரு புறம் பார்த்தால், கலினின்கிராட் ரஷ்யாவின் முக்கியமான இராணுவ மற்றும் புவியியல் சொத்தாகும். அதைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டால், மாஸ்கோ அதனை மிகக் கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதக்கூடும். மறு புறம், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என்ற மொழி, எதிரியை அச்சுறுத்துவதற்காக இருக்கலாம். அதாவது, குறிப்பிட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் முன்பே அதன் சாத்தியமான விளைவுகளைப் பற்றி எச்சரித்து, எதிரியைப் பின்வாங்கச் செய்வது.

எனவே, ரஷ்யாவின் எச்சரிக்கையை உடனடியாக அணு போர் தொடங்கப்போகிறது என்று புரிந்துகொள்வது சரியானதாக இருக்காது. அதே நேரத்தில், அதனை வெறும் வழக்கமான அரசியல் அறிக்கையாகப் புறக்கணிப்பதும் ஆபத்தானது. ரஷ்யா-ஐரோப்பா உறவு ஏற்கனவே மிக மோசமான நிலையில் உள்ளது. ஐரோப்பிய அரசுகள், ரஷ்யா தங்களது நாடுகளில் நாசவேலை, தீவைத்தல், இணையத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டி வருகின்றன. ரஷ்யா இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கிறது.

அதே நேரத்தில், ரஷ்யா நேட்டோ நாடுகளைத் தாக்கத் தயாராகி வருவதாக மேற்கத்திய நாடுகளில் வெளியாகும் எச்சரிக்கைகளையும் மாஸ்கோ நிராகரிக்கிறது. இதனால் இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையின்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மிகப்பெரிய ஆபத்து

வியன்னாவைச் சேர்ந்த அணு ஆயுத ஆய்வாளரும் முன்னாள் ரஷ்ய தூதருமான நிகோலை சோகோவ் உள்ளிட்ட சில ஆய்வாளர்கள், தற்போதைய சூழ்நிலையில் மிகப்பெரிய ஆபத்து திட்டமிட்ட போர் மட்டுமல்ல, தவறான கணக்கீடு என்றும் சுட்டிக்காட்டுகின்றனர். இராணுவப் பயிற்சி ஒன்று எதிர்பாராத வகையில் உண்மையான தாக்குதலாக புரிந்துகொள்ளப்படலாம். ஏவுகணைச் சோதனை ஒன்று தவறாக மதிப்பிடப்படலாம். எல்லைப் பகுதியில் நிகழும் ஒரு சிறிய சம்பவம் பெரிய இராணுவ நடவடிக்கையாக மாறலாம்.

குறிப்பாக அணு ஆயுதம் கொண்ட இரு தரப்புகள் நேருக்கு நேர் நிற்கும் சூழலில், தகவல் தொடர்பில் ஏற்படும் ஒரு தவறும் மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஆனால் கலினின்கிராட் விவகாரத்தை உக்ரைன் போரிலிருந்து தனியாகப் பார்க்க முடியாது. 2022ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீது முழுமையான படையெடுப்பைத் தொடங்கிய பின்னர், ஐரொப்பிய பாதுகாப்புக் கட்டமைப்பு அடிப்படையாக மாறியுள்ளது.

நேட்டோ தனது கிழக்கு எல்லைப் பகுதிகளில் இராணுவத் தயார்நிலையை அதிகரித்துள்ளது. பால்டிக் நாடுகளும் போலந்தும் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை மிகுந்த கவனத்துடன் கண்காணித்து வருகின்றன. மறுபுறம், ரஷ்யா தனது எல்லைகளைச் சுற்றி நேட்டோ இராணுவ நடவடிக்கைகள் அதிகரிப்பதை தனது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதுகிறது.

இவ்வாறு இரு தரப்பும் தங்களது நடவடிக்கைகளை தற்காப்பு என விளக்குகின்றன. ஆனால் ஒருதரப்பின் தற்காப்பு நடவடிக்கை மற்றொரு தரப்புக்கு தாக்குதல் தயாரிப்பாகத் தோன்றும் நிலை உருவாகியுள்ளது. இதுவே பாதுகாப்பு சிக்கலின் மையமாகும். கலினின்கிராட் தொடர்பான ரஷ்யாவின் புதிய எச்சரிக்கை, ஐரோப்பாவின் பாதுகாப்பு சூழல் எவ்வளவு நுட்பமான நிலையை எட்டியுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

அணு ஆயுதங்கள் தொடர்பான எச்சரிக்கைகள் இடம்பெறும் அளவுக்கு இரு தரப்பினருக்கும் இடையிலான நம்பிக்கையின்மை அதிகரித்திருப்பது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயமாகும். கலினின்கிராட் வெறும் ரஷ்யாவின் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பிராந்தியம் அல்ல. அது பால்டிக் கடல், போலந்து, லித்துவேனியா, பெலாரஸ், நேட்டோவின் கிழக்கு எல்லை மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு கட்டமைப்பு ஆகிய அனைத்தையும் இணைக்கும் ஒரு மூலோபாயப் புள்ளியாக உள்ளது.

எனவே, எதிர்காலத்தில் இந்தப் பிராந்தியத்தில் ஏற்படும் எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் மிகுந்த எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டியதாகும். குறிப்பாக அணு ஆயுதங்களைக் கொண்ட இரு தரப்புகளுக்கிடையே தவறான புரிதல் அல்லது தவறான கணக்கீடு ஏற்படாமல் இருப்பதே மிக முக்கியமான சவாலாக இருக்கும். கலினின்கிராட் விவகாரம், இன்றைய ஐரோப்பாவில் பழைய பனிப்போர் மனநிலைகள் எவ்வாறு புதிய வடிவத்தில் திரும்பியுள்ளன என்பதற்கான ஒரு முக்கிய எடுத்துக்காட்டாக பார்க்கப்படுகிறது.

தாயகத்தின் காவலர்கள்



மண்ணைக் காக்கும் உயரிய நோக்கில்
மடியை மறந்து களம் புகுந்தீர்!
விண்ணும் மண்ணும் வணங்கும் அளவுக்கு
வீரத்தின் விதையாய் விழுந்துவிட்டீர்!
தாய் நிலத்தின் விடுதலை மூச்சாக
தங்கள் உயிரையே முகவரியாக்கி,
சுயநலமின்றியே சுடராய் எரிந்து
சுதந்திரக் கனவுக்கு ஒளியமைத்தீர்!
இடிமுழக்கத்திலும் அஞ்சா நெஞ்சம்,
புயல் அடித்தாலும் தளராத் தஞ்சம்,
தாயகத்தின் அமைதிப் விடியலுக்காய்
தந்திட்டீர் உங்கள் குருதித் துளி தஞ்சம்!
பசி மறந்து, உறக்கம் துறந்து,
பனி சூழ் இரவிலும் காவல் நின்று,
எல்லைக் கோட்டில் தன் வாழ்வைக் கொடுத்து
எங்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பு தந்து,
சொந்தக் குடும்பத்தின் நினைவுகளை
நெஞ்சின் ஓரமாய் பூட்டி வைத்து,
நாடே எந்தன் குடும்பம் என்று
நாளும் களத்தில் நின்று போராடி,
முள்முனைப் பாதையும் மலர்ப்பாதையாய்
முன்னேறிச் சென்ற உங்கள் பாதங்கள்,
இன்று சரித்திரப் பக்கங்களில்
பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விளங்கும்!
காலங்கள் ஓடி மறைந்தாலும் – உங்கள்
காவிய வரலாறு மறைவதில்லை!
நெஞ்சில் சுடரும் நினைவுகளாய்
என்றும் வாழ்வீர், மடிவதில்லை!

–சு. லோஜிதன்–

www.sangathamil.com

கொரியத் தீபகற்பத்தில் இராணுவச் சமநிலை: கிம் ஜாங் உன் – டிரம்ப் சந்திப்புச் சாத்தியமா?

07.10.2026

கொரியத் தீபகற்பம் மீண்டும் உலக அரசியலின் மிக நுணுக்கமான பாதுகாப்புப் பகுதிகளில் ஒன்றாக மாறியுள்ளது. ஒருபுறம் வட கொரியா தனது அணு ஆயுதங்களையும் ஏவுகணைத் திறன்களையும் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது. மறுபுறம் தென் கொரியா தனது பாதுகாப்புத் திறன்களை நவீனப்படுத்துவதுடன், வட கொரியாவுடன் மீண்டும் உரையாடலைத் தொடங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்தச் சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் வட கொரியத் தலைவர் கிம் ஜாங்-உன் மீண்டும் சந்திப்பார்களா என்ற கேள்வி சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

2026 செப்டம்பர் தொடக்கத்தில் தென் கொரியாவின் தேசிய உளவுத்துறை, வாஷிங்டனுக்கும் பியோங்யாங்கிற்கும் இடையே உரையாடலுக்கான சில அறிகுறிகள் இருப்பதாகவும், ட்ரம்ப்-கிம் உச்சி மாநாடு எப்போது வேண்டுமானாலும் சாத்தியமாக இருக்கலாம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்து. ஆனால் இதுவரை இரு தரப்புக்கும் இடையில் உறுதியான பேச்சுவார்த்தை தொடங்கியதாக உறுதிப் படுத்தப்பட்ட தகவல் இல்லை.

டிரம்ப் -கிம் மீண்டும் சந்திப்பார்களா?

டிரம்ப் மற்றும் கிம் ஏற்கனவே மூன்று முக்கிய சந்திப்புகளை நடத்தியுள்ளனர். 2018 சிங்கப்பூர் சந்திப்பு, 2019 வியட்நாம் ஹனோய் சந்திப்பு மற்றும் 2019இல் இராணுவமற்ற மண்டலத்தில் நடைபெற்ற சந்திப்பு ஆகியவை அமெரிக்கா-வட கொரிய உறவில் வரலாற்றுச் சம்பவங்களாக அமைந்தன. ஆனால் அந்தச் சந்திப்புகள் வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய நிரந்தர உடன்பாட்டை உருவாக்கவில்லை.

2026இல் ட்ரம்ப் மீண்டும் கிம் ஜாங்-உனுடன் நேரடியாகச் சந்திக்க விருப்பம் காட்டியுள்ளார். ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கா - தென் கொரியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை குறைப்பதற்கான ட்ரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கையும் பியோங்யாங்கை நோக்கிய ஒரு அரசியல் சைகையாகப் பார்க்கப்பட்டது. அதே வேளை, அமெரிக்கா தனது கூட்டாளியான தென் கொரியாவின் பாதுகாப்பு உறுதிப்பாட்டைத் தொடர்வதாகவும் தெரிவித்துள்ளது.

ஆனால் இங்கு மிகப்பெரிய தடையாக இருப்பது அணு ஆயுத விவகாரம். அமெரிக்காவின் பாரம்பரிய நிலைப்பாடு வட கொரியாவின் முழுமையான அணு ஆயுதக் கைவிடலாக இருந்து வருகிறது. ஆனால் கிம் ஜாங்-உன் தலைமையிலான வட கொரியா தனது அணு ஆயுதத் திறனை நாட்டின் பாதுகாப்புக்கான முக்கிய கருவியாகக் கருதுகிறது. செப்டம்பர் 2026இல் வட கொரியா தனது அணு ஆயுத நிலை மாற்ற முடியாதது என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்தியது. மேலும் அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட சர்வதேச அழைப்பையும் பியோங்யாங் நிராகரித்தது.

இதனால் ட்ரம்ப்-கிம் சந்திப்பு நடந்தாலும், வட கொரியா உடனடியாக அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட வேண்டும் என்ற அணுகுமுறையும், வட கொரியா அணு ஆயுத நாடாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற பியோங்யாங்கின் நிலைப்பாடும் எவ்வாறு சமரசம் செய்யப்படும் என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கும்.



வட – தென் கொரியா உறவு

வட மற்றும் தென் கொரியாக்கள் 1953 கொரியப் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் தொழில்நுட்ப ரீதியில் அமைதிப் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. எனவே கொரியப் போர் முறையாக முடிவடைந்ததாகக் கருதப்படவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் இரு நாடுகளின் உறவு மேலும் மோசமடைந்துள்ளது. வட கொரியா தென் கொரியாவுடனான சமரச முயற்சிகளிலிருந்து விலகி, தனது அணு ஆயுதத் திட்டத்தை அரசின் பாதுகாப்புக் கொள்கையின் மையமாக மாற்றியுள்ளது. 2020இல் இரு நாடுகளுக்கிடையிலான தொடர்பு அலுவலகம் வட கொரியாவால் வெடிக்கச் செய்யப்பட்டதும் உறவின் வீழ்ச்சிக்கான முக்கிய அடையாளமாக அமைந்தது.

2026இல் இந்தப் பதற்றம் இராணுவ மட்டத்திலும் தொடர்கிறது. செப்டம்பர் மாதம் இராணுவமற்ற மண்டலத்தில் ஏற்பட்ட கண்ணிவெடி வெடிப்பில் தென் கொரிய வீரர்கள் காயமடைந்தனர். தென் கொரியா அந்தக் கண்ணிவெடிகள் வட கொரியாவால் புதைக்கப்பட்டவை என்றும், அவை போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகவும் கூறியது. வட கொரியா இதனை மறுத்தது.

அதே நேரத்தில் வட கொரியா தனது எல்லைப் பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தி வருவதாக தென் கொரியா தெரிவிக்கிறது. இதனால் சிறிய எல்லைச் சம்பவங்கள்கூட மிகப் பெரிய இராணுவ மோதலாக மாறக்கூடிய அபாயம் நீடிக்கிறது.

தொடரும் ஆயுதப் போட்டி

வட கொரியாவின் அணு ஆயுதங்களும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பானுக்கு நீண்டகால பாதுகாப்புச் சவாலாக உள்ளன. 2026லும் வட கொரியா பல்வேறு ஏவுகணைகள், தாக்குதல் ட்ரோன்கள் மற்றும் பல்குழல் ராக்கெட் அமைப்புகளை உள்ளடக்கிய இராணுவப் பயிற்சிகளை நடத்தியுள்ளது.

வட கொரியாவின் பார்வையில் இத்தகைய ஆயுதங்கள் வெளிநாட்டு இராணுவ அழுத்தத்திலிருந்து ஆட்சியைப் பாதுகாப்

பதற்கான தடுப்புச் சக்தியாகும். ஆனால் தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் பார்வையில் அவை பிராந்திய பாதுகாப்புக்கு நேரடியான அச்சுறுத்தலாக உள்ளன.

இந்தப் பாதுகாப்பு முரண்பாடு ஒரு சுழற்சியை உருவாக்குகிறது. வட கொரியா ஏவுகணைகளை அதிகரிக்கிறது அதற்கு பதிலாக தென் கொரியா மற்றும் அமெரிக்கா தங்களது பாதுகாப்புத் திறன்களை அதிகரிக்கின்றன் அதனை வட கொரியா மீண்டும் தனது பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கையாகக் கருதி புதிய ஆயுதங்களை உருவாக்குகிறது.

தென் கொரியாவின் அணுகுமுறை

தென் கொரிய அதிபர் லீ ஜே-மியோங் ஒருபுறம் நாட்டின் இராணுவத் திறனை வலுப்படுத்தவும், மறுபுறம் வட கொரியாவுடன் உரையாடலை மீண்டும் தொடங்கவும் முயற்சித்து வருகிறார்.

அவர் வட கொரிய அணு ஆயுதப் பிரச்சினைக்கு ஒரே கட்டத்தில் முழுமையான தீர்வை எதிர்பார்ப்பதைவிட, படிப்படியான அணுகுமுறையை முன்வைத்துள்ளார்.

முதலில் அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களின் விரிவாக்கத்தை நிறுத்துவது, பின்னர் ஆயுதக் களஞ்சியத்தை குறைப்பது, இறுதியில் முழுமையான அணு ஆயுத ஒழிப்பை நோக்கிச் செல்வது போன்ற கட்டங்களுடன் அரசியல் மற்றும் பொருளாதார ஊக்கங்களை இணைக்கலாம் என்பது அவரது அணுகுமுறை.

ஆனால் இதே நேரத்தில் தென் கொரியா தனது இராணுவத்தை பலவீனப்படுத்தும் பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை. அக்டோபர் 1ஆம் தேதி ஆயுதப்படைகள் தின உரையில் லீ, வட கொரியாவுடன் நம்பிக்கையையும் உரையாடலையும் மீண்டும் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், தென் கொரியாவின் பாதுகாப்புத் திறனையும் அதிகரிக்கும் திட்டங்களை முன்வைத்தார். இதில் எதிர்காலத்தில் அணு சக்தியால் இயக்கப்படும் நீர்மூழ்கிக் கப்பல்கள், மேம்பட்ட ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள் ஆகியவை அடங்குகின்றன.

அமெரிக்கா–தென் கொரியா கூட்டணி

கொரியத் தீபகற்பத்தின் பாதுகாப்பில் அமெரிக்கா முக்கிய பங்காற்றுகிறது. அமெரிக்கப் படைகள் தென் கொரியாவில் தொடர்ந்து நிலைகொண்டுள்ளன. அதே நேரத்தில் இரு நாடுகளும் வழக்கமாக கூட்டு இராணுவப் பயிற்சிகளை நடத்துகின்றன. வட கொரியா இப்பயிற்சிகளை தனது மீது நடத்தப்படும் ஆக்கிரமிப்புக்கான தயாரிப்பாகக் கருதுகிறது. அமெரிக்காவும் தென் கொரியாவும் அவை தற்காப்பு நோக்கமுடையவை எனக் கூறுகின்றன.

2026இல் ட்ரம்ப் நிர்வாகம் சில கூட்டு இராணுவப் பயிற்சிகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. இது பியோங்யாங்குடன் மீண்டும் தூதரகத் தொடர்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகப் பார்க்கப்பட்டது. ஆனால் வட கொரியா அதற்குப் பதிலாக தனது ஆயுதச் செயல்பாடுகளை முழுமையாக நிறுத்தவில்லை.

ரஷ்யா, சீனா – புதிய சமன்பாடு

இன்றைய வட கொரியாவை 2018-19 காலகட்டத்தின் வட கொரியாவுடன் ஒப்பிட முடியாது. கடந்த சில ஆண்டுகளில் ரஷ்யாவுடனான அதன் உறவு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. சீனாவுடனான உறவுகளும் தொடர்கின்றன. இதனால் பியோங்யாங்கிற்கு அமெரிக்க அழுத்தங்களை சமாளிக்க கூடுதல் அரசியல் மற்றும் பொருளாதார இடவசதி கிடைத்துள்ளது.

குறிப்பாக உக்ரைன் போர் தொடர்பாக வட கொரியா-ரஷ்யா இரா ணுவ ஒத்துழைப்பு அதிகரித்திருப்பதாக சர்வதேச ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இதுவும் அமெரிக்கா-வட கொரியா பேச்சுவார்த்தைகளின் பின்னணியை முன்பைவிட சிக்கலாக்கியுள்ளது.

ட்ரம்ப்-கிம் சந்திப்புக்கான வாய்ப்பு முற்றிலும் இல்லாத ஒன்று அல்ல. தென் கொரியாவின் தேசிய உளவுத்துறை கூட உரையாடலுக்கான சில அறிகுறிகள் இருப்பதாக மதிப்பிட்டுள்ளது. ஆனால் சந்திப்பு நடைபெறுவது மற்றும் அந்தச் சந்திப்பில் கணிசமான உடன்பாடு உருவாகுவது இரு வேறு விடயங்கள்.

ஒரு உச்சி மாநாடு நடந்தால், அணு ஆயுதங்கள் மட்டுமல்லாமல் தடைகள், அமெரிக்க-தென் கொரிய இராணுவப் பயிற்சிகள், அமெரிக்கப் படைகள், வட கொரியா-ரஷ்யா இராணுவ உறவு, கொரியப் போரை முறையாக முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் வட-தென் கொரியா உறவு ஆகியவை பேச்சுவார்த்தையின் பகுதிகளாக மாறக்கூடும்.

ஆனால் மிக முக்கியமான சிக்கல் தென் கொரியாவைத் தவிர்த்து அமெரிக்கா-வட கொரியா இடையே மட்டும் ஒரு பெரிய ஒப்பந்தம் உருவாகக்கூடாது என்பதுதான். சியோலின் பாதுகாப்பு நலன்கள் நேரடியாக பாதிக்கப்படுவதால், எதிர்கால அமெரிக்க-வட கொரியா பேச்சுவார்த்தையில் தென் கொரியாவின் பங்கு முக்கியமானதாக இருக்கும்.

தற்போதைய நிலவரப்படி கொரியத் தீபகற்பம் போர் வெடிக்கும் நிலை மட்டுமல்ல; அதே நேரத்தில் தூதரக வாய்ப்புகள் முற்றிலும் மூடப்பட்ட நிலையும் அல்ல. ஒரு புறம் அணு ஆயுதங்கள், ஏவுகணைகள், எல்லைப் பதற்றம் மற்றும் இராணுவக் கட்டமைப்பு அதிகரிக்கின்றன. மறுபுறம் வாஷிங்டன் மற்றும் சியோல் இரண்டும் வெவ்வேறு வழிகளில் உரையாடலுக்கான வாய்ப்புகளைத் திறந்து வைத்துள்ளன.

எனவே ட்ரம்ப்-கிம் சந்திப்பு நடந்தாலும், அதன் உண்மையான முக்கியத்துவம் சந்திப்பு நடைபெறுகிறதா என்பதில் மட்டும் இருக்காது. அந்தச் சந்திப்பு கொரியத் தீபகற்பத்தில் ஆயுதப் போட்டியை கட்டுப்படுத்துமா, அணு ஆயுதத் திட்டத்தை முடக்கும் வகையில் ஒரு படிப்படியான செயல்முறையை உருவாக்குமா, அல்லது வெறும் அரசியல் தொடர்பாக மட்டுமே முடிவடையுமா என்பதே உலகம் கவனிக்கும் முக்கியக் கேள்வியாக

யாழ். மக்களின் வலி நிறைந்த இடம்பெயர்வு

30.10.1995

யேமனில் சவுதி ஆதரவுப் படை முன்னேற்றம்!

பாப் அல் - மந்தப் நீரிணையில் புதிய போர்முனை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

10.10.2026

மத்திய கிழக்கின் அரசியல் மற்றும் இராணுவச் சூழலில் யேமன் போர் ஒரு முக்கியமான புவிசார் அரசியல் பிரச்சினையாகத் தொடர்ந்து காணப்படுகிறது. குறிப்பாக, செங்கடலையும் ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் பாப் அல்-மந்தப் (Bab el-Mandeb) நீரிணை, உலகளாவிய கடல்வழி வர்த்தகம், எரிசக்தி விநியோகம் மற்றும் சர்வதேச பாதுகாப்பு ஆகியவற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

யேமனில் சவுதி அரேபியா ஆதரவு பெற்ற படைகள், "Operation Dawn of Yemen" எனக் குறிப்பிடப்படும் இராணுவ நடவடிக்கையின் கீழ், பாப் அல்-மந்தப் நீரிணைக்கு அருகிலுள்ள முக்கிய நிலைகளையும், துபாப் (Dhubab) மாவட்டத்தின் பெரும் பகுதியையும் கைப்பற்றியதாகக் கூறப்படும் தகவல் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த முன்னேற்றத்துக்கு சவுதி தலைமையிலான கூட்டணியின் தீவிரமான வான்வழித் தாக்குதல்கள் ஆதரவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும், ஹூதி ஆதரவு ஊடகங்கள் இந்தக் கூற்றுகளை முற்றிலும் மறுத்துள்ளன.

2026 அக்டோபர் 5ஆம் திகதியில் யேமன் அரசாங்கத்தின் படைகள், சவுதி அரேபியாவின் ஆதரவுடன் ஹூதி இயக்கத்துக்கு எதிராகப் புதிய இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன. இந்த நடவடிக்கை "Dawn of Yemen" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

யேமன் அரசாங்கத்தின் ஜனாதிபதி தலைமைச் சபைத் தலைவர் ரஷாத் அல்-அலிமி, ஹூதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மீட்டெடுத்து அரச நிறுவனங்களின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதே நடவடிக்கையின் நோக்கம் எனத் தெரிவித்துள்ளார். சவுதி ஆதரவு பெற்ற தெற்கு ஜயன்ட்ஸ் படையணிகள் (Southern Giants Brigades), நேஷன்ஸ் ஷீல்ட் படைகள் (Nation's Shield Forces) மற்றும் அரசாங்க ஆதரவு உள்ளூர் படைகள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யேமனின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் ஹூதி இயக்கம் அண்மையில் பெற்றிருந்த முன்னேற்றங்களைத் தடுத்து, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த கடல்வழிப் பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவதே உடனடி இராணுவ இலக்காகக் காணப்படுகிறது.

மூலோபாய பாப் அல்-மந்தப் நீரிணை:

பாப் அல்-மந்தப் நீரிணை என்பது யேமனுக்கும் ஆப்பிரிக்காவின் ஜிபூட்டி, எரித்திரியா பகுதிகளுக்கும் இடையில் அமைந்துள்ள மிக முக்கியமான கடல்வழிப் பாதையாகும். இது செங்கடலை ஏடன் வளைகுடாவுடனும் அதன்மூலம் அரேபியக் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலுடனும் இணைக்கிறது.

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான சரக்குப் போக்குவரத்தில் இந்த நீரிணை முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக, செங்கடல் வழியாக சூயஸ் கால்வாயை அடையும் கப்பல்கள், ஆப்பிரிக்காவின் தென்முனையைச் சுற்றிச் செல்ல வேண்டிய நீண்ட பயணத்தைத் தவிர்க்க முடிகிறது.

எனவே, இந்தப் பகுதியில் எந்தத் தரப்பு இராணுவ ஆதிக்கத்தைப் பெறுகிறது என்பது யேமனின் உள்நாட்டுப் போருக்கு அப்பாற்பட்ட சர்வதேசப் பிரச்சினையாக மாறுகிறது. எண்ணெய், இயற்கை எரிவாயு, தொழிற்சாலைப் பொருட்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களின் பாதுகாப்பும் இதனுடன் நேரடியாகத் தொடர்புடையது. இந்த நீரிணையில் தாக்குதல்கள் அதிகரித்தால், கப்பல் காப்புறுதிக் கட்டணங்கள் உயரலாம்; கப்பல் நிறுவனங்கள் மாற்றுப் பாதைகளைத் தேர்ந்தெடுக்கலாம் போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கலாம். இதன் விளைவுகள் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளையும் எரிபொருள் விலைகளையும் பாதிக்கக்கூடும்.

துபாப் மாவட்டம், யேமனின் தாயிஸ் மாகாணத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. பாப் அல்-மந்தப் நீரிணைக்கு அருகில் இருப்பதால், இப்பகுதியின் கட்டுப்பாடு இராணுவ ரீதியாகவும் போக்குவரத்து ரீதியாகவும் முக்கியமானது. யேமன் அரசாங்கப் படைகள் துபாப் மாவட்டத்தின் பெரும்பகுதியையும் அங் குள்ள முக்கிய இராணுவ நிலைகளையும் கைப்பற்றியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. துபாப் விமான நிலையத்தைக் கைப்பற்றியதாகவும், துபாப்-மொகா இடையிலான பாதையைத் துண்டித்ததாகவும் அரசாங்கத் தரப்பு அறிவித்துள்ளது.

பாப் அல்-மந்தப் நீரிணையில் புதிய போர்முனை உருவாகியதால், செங்கடல் வர்த்தகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. சவுதி ஆதரவு யேமன் படைகள் "Operation Dawn of Yemen" நடவடிக்கையின் கீழ் பாப் அல்-மந்தப் நீரிணைக்கு அருகிலுள்ள முக்கிய நிலைகளையும் துபாப் மாவட்டத்தின் பெரும்பகுதியையும் கைப்பற்றியுள்ளதாக கூறியுள்ளன. இந்த முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டு நீடித்தால், செங்கடல் கடல்வழிப் பாதுகாப்பிலும் யேமனின் உள்நாட்டுப் போரின் போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

இந்த முன்னேற்றங்கள் உண்மையாகவும் நீடித்ததாகவும் இருந்தால், ஹூதி படைகளின் விநியோகப் பாதைகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் அவற்றின் இராணுவச் செயல்பாடுகள் பாதிக்கப்படலாம். அதேவேளை, ஒரு மாவட்டத்தில் முக்கிய நிலைகளைக் கைப்பற்றுவது மட்டும் அந்தப் பகுதி முழுவதும் நிரந்தரக் கட்டுப்பாட்டைப் பெற்றுவிட்டதாகப் பொருள்படாது.

மலைப்பகுதிகள், மாற்றுப் பாதைகள், உள்ளூர் ஆயுதக் குழக்களின் செயல்பாடுகள் மற்றும் எதிர்த்தாக்கு தல்கள் ஆகியவை நிலைமையை மீண்டும் மாற்றக்கூடும். எனவே, அரசாங்கப் படை களின் அறிவிப்புகளைத் தொடர்ந்து வரும் சுயாதீனச் செய்திகள் மற்றும் களநிலைத் தகவல்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

சவுதி அரேபியா தாக்-குதல்:

இந்த இராணுவ நடவடிக்கையில் சவுதி தலைமையிலான கூட் டணியின் வான்வழி ஆதரவு முக்கியப் பங்கு வகிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் 100 போர் விமானங்கள் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூட்டணித் தரப்பு கூறியுள்ளது. தரைப்படைகளுக்கு வான்வழிப் பாதுகாப்பு வழங்குவதுடன், ஹூதி இயக்கத்தின் இராணுவ இலக்குகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவைப் பொறுத்தவரையில், பாப் அல்-மந்தப் நீரிணையின் பாதுகாப்பு என்பது யேமனின் எல்லைப் பாதுகாப்புடன் மட்டும் முடிவடைவதில்லை. பிராந்தியத்தில் ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி இயக்கத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதும், கடல்வழி வர்த்தகத்தின் தொடர்ச்சியைப் பாதுகாப்பதும் அதன் முக்கிய நோக்கங்களாகக் கருதப்படுகின்றன.

எனினும், வான்வழித் தாக்குதல்கள் தரைப்படைகளுக்கு உடனடி முன்னேற்றத்தை ஏற்படுத்தினாலும், அவை நீண்டகால அரசியல் தீர்வை உறுதிப்படுத்தாது. பொதுமக்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல்கள் நிகழ்ந்தால் உயிரிழப்புகள், உட்கட்டமைப்புச் சேதங்கள் மற்றும் புதிய இடம்பெயர்வுகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

தகவல் போரின் இன்னொரு முகம்:

ஆனாலும் ஹூதி ஆதரவு ஊடகங்கள், அரசாங்கப் படைகள் துபாப் பகுதியில் முன்னேற்றம் கண்டதாக வெளியான தகவல்களை மறுத்துள்ளன. சில செய்திகள் இந்தக் கூற்றுகளை முற்றிலும் ஆதாரமற்றவை எனக் குறிப்பிட்டுள்ளன. இராணுவ மோதல்களில் நிலப்பரப்பைக் கைப்பற்றுவது மட்டுமல்லாமல், அந்த முன்னேற்றம் குறித்து உலகம் எவ்வாறு புரிந்துகொள்கிறது என்பதும் முக்கியமாகிறது. அரசாங்கத் தரப்பு தனது வெற்றிகளை முன்னிலைப்படுத்த முயற்சிக்கலாம். எதிர்த்தரப்பு தனது தோல்விகளை மறுக்கவோ, எதிரியின் முன்னேற்றத்தைச் சிறியதாகக் காட்டவோ முயலலாம்.

மனிதாபிமான நெருக்கடி:

யேமனின் பொதுமக்கள் பல ஆண்டுகளாகப் போர், உணவுப் பற்றாக்குறை, மருத்துவ வசதிகளின் குறைபாடு, இடம்பெயர்வு மற்றும் பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். புதிய இராணுவ நடவடிக்கைகள் விரிவடைந்தால், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேலும் சிக்கலடையக்கூடும்.

போரில் எந்தத் தரப்பு முன்னேற்றம் பெற்றாலும், பொதுமக்களைப் பாதுகாப்பது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைக் கடமையாகும். பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகளுக்கு இடையில் வேறுபாடு காணுதல், அளவுக்கு மீறிய தாக்குதல்களைத் தவிர்த்தல், மனிதாபிமான உதவிகள் சென்றடைவதை உறுதிப்படுத்துதல் ஆகியவை அவசியம். அரசியல் பேச்சுவார்த்தைகள் இல்லாமல் இராணுவ வெற்றிகளை மட்டுமே நம்புவது, புதிய மோதல்களுக்கான சூழலை உருவாக்கக் கூடும்.

நீரிணையைக் கைப்பற்றுவது மட்டுமே வெற்றியா?

"Operation Dawn of Yemen" நடவடிக்கையின் கீழ் பாப் அல்-மந்தப் நீரிணைக்கு அருகிலுள்ள முக்கிய நிலைகளையும் துபாப் மாவட்டத்தின் பெரும்பகுதியையும் கைப்பற்றியுள்ளதாக சவுதி ஆதரவு யேமன் படைகள் கூறியுள்ளன. இந்த முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டு நீடித்தால், செங்கடல் கடல்வழிப் பாதுகாப்பிலும் யேமனின் உள்நாட்டுப் போரின் போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

ஆனால் ஹூதி தரப்பின் மறுப்புகளும், போர்க்கள நிலைமையின் வேகமான மாற்றங்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒரு மூலோபாயப் பகுதியில் இராணுவ ஆதிக்கம் பெறுவது, ஒரு நாட்டின் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்குச் சமமானதல்ல.

பாப் அல்-மந்தப் நீரிணையின் எதிர்காலம் யார் அந்தப் பகுதியைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதில் மட்டுமல்ல; உலக வர்த்தகம் எவ்வளவு பாதுகாப்பாகத் தொடர்கிறது, யேமன் மக்கள் எப்போது அமைதியான வாழ்க்கைக்குத் திரும்புகிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது. நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வும், பொதுமக்களின் பாதுகாப்பும், பாதுகாப்பான கடல்வழிப் போக்குவரத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இலக்குகளாகவே இருக்கின்றன.

ஈராக் குர்திஸ் மக்களின் எதிர்காலம்: அமெரிக்கப் படை வெளியேற்ற விளைவு?!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

12.10.2026

மத்திய கிழக்கின் அரசியல் மற்றும் இராணுவச் சூழலில் அமெரிக்காவின் படைநிலை மாற்றங்கள் பல்வேறு நாடுகளிலும் பிராந்தியங்களிலும் வெவ்வேறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, ஈராக்கின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள குர்திஸ்தான் தன்னாட்சிப் பிராந்தியம், அமெரிக்க இராணுவத்தின் இருப்பையும் அதன் பாதுகாப்பு ஆதரவையும் தனித்துவமான கோணத்தில் அணுகுகிறது.

அமெரிக்காவின் இராணுவப் பங்களிப்பு குறைக்கப்படுவது அல்லது அதன் படைகள் குறிப்பிட்ட தளங்களிலிருந்து வெளியேறுவது என்பது வெறுமனே ஒரு நாட்டின் படைநிலை மாற்றம் மட்டுமல்ல. அது குர்திஷ் பிராந்தியத்தின் பாதுகாப்பு, அரசியல் தன்னாட்சி, பொருளாதார நிலைத்தன்மை மற்றும் எதிர்கால அதிகாரச் சமநிலை ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். (ISIS) எனப்படும் இஸ்லாமிய அரசு அமைப்புக்கு எதிரான போரில் அமெரிக்காவுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்ட குர்திஷ் பெஷ்மெர்கா படைகள், அந்தக் கூட்டணியின் மூலம் இராணுவப் பயிற்சி, ஆயுத உதவி, உளவுத் தகவல் மற்றும் வான்வழித் தாக்குதல் ஆதரவு போன்ற பல்வேறு உதவிகளைப் பெற்றன. இந்நிலையில், அமெரிக்காவின் பாதுகாப்பு அரண் பலவீனமடையக்கூடும் என்ற அச்சம் குர்திஷ் மக்களிடையே எழுவது இயல்பானதாகும்.

அதேவேளை, அமெரிக்கப் படைகள் வெளியேறுவது குறித்த ஒவ்வொரு செய்தியையும் முழுமையான வெளியேற்றமாகப் புரிந்துகொள்ள முடியாது. படைகளின் எண்ணிக்கை குறைப்பு, குறிப்பிட்ட தளங்களிலிருந்து இடமாற்றம், ஈராக் அரசுடன் பாதுகாப்புப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது போன்ற நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. எனவே, இந்த விவகாரத்தைப் புரிந்துகொள்ள அமெரிக்கா-குர்திஷ் உறவு, ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் மற்றும் ஈராக்கின் உள்நாட்டு அரசியல் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்க வேண்டும்.

அமெரிக்க-குர்திஷ் கூட்டணி

2014ஆம் ஆண்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஈராக்கின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றியபோது, அந்நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டன. மோசூல் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். கட்டுப்பாட்டுக்குள் சென்றன. இந்தச் சூழலில், குர்திஷ் பெஷ்மெர்கா படைகள் வடக்கு ஈராக்கில் முக்கியமான எதிர்ப்புச் சக்தியாக உருவெடுத்தன.

அமெரிக்கா தலைமையிலான சர்வதேசக் கூட்டணி, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பைத் தோற்கடிப்பதற்காக ஈராக்கியப் படை



களுக்கும் குர்திஷ் படைகளுக்கும் பல்வேறு வகைகளில் ஆதரவளித்தது. பெஷ்மெர்கா படைகளின் உள்ளூர் நிலப்பரப்பு அறிவும், அமெரிக்காவின் தொழில்நுட்ப மற்றும் வான்வழி ஆதரவும் இணைந்து செயல்பட்டன.

இந்த ஒத்துழைப்பு குர்திஷ் பிராந்தியத்துக்குப் பாதுகாப்பு மட்டுமல்லாமல் சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்தது. எனினும், அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட்டதால் குர்திஷ் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிரந்தரமாக உறுதிசெய்யப்பட்டுவிட்டது என்று கருத முடியாது.

2026 செப்டம்பர் 30ஆம் திகதியுடன் ஈராக்கில் அமெரிக்கத் தலைமையிலான கூட்டணியின் ஐ.எஸ்.ஐ.எஸ். எதிர்ப்பு இராணுவப் பணி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் ஈராக்கில் நீண்டகாலமாக நிலவிய அமெரிக்க இராணுவ இருப்பில் ஒரு முக்கியமான அத்தியாயம் முடிவுக்கு வந்துள்ளது.

வான் பாதுகாப்பு இல்லாததால் அச்சுறுத்தல்

குர்திஷ் மக்களின் கவலைக்கான முக்கிய காரணம் அமெரிக்கப் படைகள் வெளியேறுவது மட்டுமல்ல. அவற்றுடன் தொடர்புடைய முக்கியமான வான் பாதுகாப்பு அமைப்புகளும் அகற்றப்பட்டிருப்பதாகும்.

அமெரிக்காவின் பேட்ரியட் (Patriot) உள்ளிட்ட வான் பாதுகாப்பு அமைப்புகள் ஏவுகணைகளையும் ட்ரோன்களையும் கண்டறிந்து அவற்றை இடைமறிக்கும் திறன் கொண்டவை. எர்பில் விமான நிலையத்தைச் சுற்றியிருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பில் இத்தகைய பாதுகாப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகித்தன.

ஈராக்கில் 2026 ஜூலை மாதத்திலேயே அமெரிக்கப் படைகளின் மீளப்பெறல் நடவடிக்கைகள் தீவிரமடைந்தபோது, பேட்ரியட் வான் பாதுகாப்பு அமைப்புகள் அங்கிருந்து அகற்றப்பட்டதாகச் செய்திகள் வெளியாகின. அதனைத் தொடர்ந்து, பிராந்தியத்தின் பாதுகாப்புத் திறன் குறித்த கேள்விகள் அதிகரித்தன.

ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியம், ஈரான், ஈராக் மத்திய அரசு, அமெரிக்கா மற்றும் பல்வேறு ஆயுதக் குழுக்களின் நலன்கள் சந்திக்கும் முக்கியமான புவிசார் அரசியல் மையமாக உள்ளது.

ஈரான் ஆதரவு பெற்ற சில ஆயுதக் குழுக்கள் ஈராக்கில் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கும் அமெரிக்க இராணுவத்துக்கும் இடையிலான மோதல்கள் பல ஆண்டுகளாக நீடிக்கின்றன. பிராந்தியத்தில் அமெரிக்காவின் இருப்புக்கு எதிரான நடவடிக்கைகளும், ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களும் இந்தப் பாதுகாப்புச் சூழலை மேலும் சிக்கலாக்குகின்றன.

குர்திஸ்தான் பிராந்தியத்தின் பெஷ்மெர்கா அமைச்சு வெளியிட்ட அறிக்கையின்படி, அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்த காலப்பகுதியில், அந்தப் பிராந்தியம் ஆயிரத்துக்கும் அதிகமான ட்ரோன் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களை எதிர்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் சில பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளையும் பாதித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்களின் ஒவ்வொன்றுக்கும் ஒரே தரப்பைப் பொறுப்பாக்குவது சரியானதல்ல. இருப்பினும், ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் செயல்பாடுகளும் பரந்த பிராந்திய மோதல்களும் குர்திஷ் பிராந்தியத்தின் பாதுகாப்பு அபாயங்களை அதிகரித்துள்ளன என்பது தெளிவாகிறது.

அமெரிக்க இராணுவப் பாதுகாப்பு இல்லாத சூழலில், இத்தகைய தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறிதல், இடைமறித்தல் மற்றும் தாக்குதலுக்குப் பின்னர் விரைவாகப் பதிலளித்தல் ஆகியவற்றில் குர்திஷ் அதிகாரிகள் புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அமெரிக்க வெளியேற்றம் ஈரானுக்குச் சாதகமா?

அமெரிக்கப் படைகள் வெளியேறுவதால் ஈரானின் பிராந்தியச் செல்வாக்கு அதிகரிக்கக்கூடும் என்பது முக்கியமான அரசியல் மதிப்பீடாகும். ஈராக்கில் ஈரானுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள சில ஆயுதக் குழுக்கள் அமெரிக்க வெளியேற்றத்தைத் தங்களுக்குச் சாதகமான நிகழ்வாக வரவேற்றுள்ளன.

அமெரிக்கப் படைகள் இருந்த காலத்தில், அந்நாட்டின் இராணுவ இருப்பு சில ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாக இருந்தது. அந்தத் தடை குறையும் பட்சத்தில், ஈராக்கின் உள்நாட்டு அதிகாரச் சமநிலை மாறக்கூடும். ஆனால் அமெரிக்க வெளியேற்றம் தானாகவே ஈரானுக்கு முழுமையான வெற்றியை வழங்கிவிடும் என்று கூற முடியாது. ஈராக் அரசு தனது பாதுகாப்பு நிறுவனங்களை வலுப்படுத்தி, ஆயுதக்

குழுக்களின் நடவடிக்கைகளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியுமா என்பதே முக்கியமான கேள்வியாகும்.

மேலும், குர்திஸ்தான் பிராந்தியத்தின் அரசியல் தலைமையும் தன்னாட்சியைப் பாதுகாப்பதற்காக பாக்தாத் மத்திய அரசுடன் உறவுகளை வலுப்படுத்த வேண்டியிருக்கிறது. வெளிநாட்டு இராணுவ ஆதரவை மட்டுமே சார்ந்திருக்கும் பாதுகாப்பு அணுகுமுறை நீண்டகாலத் தீர்வாக அமையாது.

குர்திஷ் தன்னாட்சியின் எதிர்காலம்

ஈராக் குர்திஸ்தான் பிராந்தியம் தனித்துவமான அரசியல் அமைப்பையும் தன்னாட்சி அரசாங்கத்தையும் கொண்டுள்ளது. இருப்பினும், அது தனிநாடாக அங்கீகரிக்கப்பட்ட பகுதி அல்ல; ஈராக்கின் கூட்டாட்சி அமைப்புக்குள் இயங்குகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்கப் படைகள் வெளியேறுவது குர்திஷ் தலைமையிடம் இரண்டு முக்கியமான சவால்களை முன்வைக்கிறது. முதலாவது, பெஷ்மெர்கா படைகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல். குர்திஷ் அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய படைப்பிரிவுகளுக்கு இடையில் நீடிக்கும் அமைப்புசார் வேறுபாடுகளைக் குறைத்து, ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்குவது அவசியமாகும்.

இரண்டாவது, ஈராக் மத்திய அரசுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல். வான் பாதுகாப்பு, உளவுத் தகவல் பகிர்வு, எல்லைப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இரு தரப்பும் இணைந்து செயல்பட வேண்டும்.

அமெரிக்க வெளியேற்றத்துக்குப் பின்னர் குர்திஷ் படைகள் புதிய பாதுகாப்புச் சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்தி வருவதாகவும், ஈராக் மத்திய அரசுடனான ஒருங்கிணைப்பைத் தொடர விரும்புவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.எஸ்.ஐ.எஸ். மீண்டும் வலுப்பெறும் அபாயம்

அமெரிக்கப் படைகள் வெளியேறுவதால் ஏற்படக்கூடிய மற்றொரு சவால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மீளெழுச்சியாகும்.

அந்த அமைப்பு முன்பு கொண்டிருந்த பரந்த நிலப்பரப்பு கட்டுப்பாட்டை இழந்திருந்தாலும், அதன் எஞ்சிய உறுப்பினர்கள் பாதுகாப்பற்ற பகுதிகளில் தாக்குதல்களை நடத்தும் அபாயம் முற்றிலும் நீங்கிவிடவில்லை. குறிப்பாக, ஈராக்கின் சில பகுதிகளில் நிலவும் அரசியல் மற்றும் பாதுகாப்பு இடைவெளிகள் தீவிரவாதக் குழுக்களுக்குச் சாதகமாக அமையக்கூடும்.

அமெரிக்காவின் நேரடி இராணுவ இருப்பு முடிவுக்கு வந்தாலும், ஈராக்கியப் படைகளின் பயங்கரவாத எதிர்ப்புத் திறன், உளவுத் தகவல் பரிமாற்றம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்ந்து முக்கியமானவையாக இருக்கும். குர்திஷ் பெஷ்மெர்கா படைகள் ஏற்கெனவே பெற்றுள்ள போர் அனுபவத்தைப் பயன்படுத்தி, புதிய பாதுகாப்புச் சூழலில் தங்களது திறன்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஈராக் குர்திஸ்தான் பிராந்தியத்தில் அமெரிக்க இராணுவ வெளியேற்றம் என்பது ஒரே நேரத்தில் அரசியல் வாய்ப்பாகவும் பாதுகாப்புச் சவாலாகவும் விளங்குகிறது. பாக்தாத் அரசாங்கம் இதனை ஈராக்கின் இறையாண்மையை வலுப்படுத்தும் நடவடிக்கையாகப் பார்க்கிறது. ஆனால் எர்பிலை மையமாகக் கொண்ட குர்திஷ் தலைமை, மாற்று வான் பாதுகாப்பு அமைப்புகள் இல்லாத நிலையில், பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

பாதுகாப்பு வெற்றிடத்தை யார் நிரப்புவர்?

இந்த மாற்றத்தின் வெற்றி, அமெரிக்கப் படைகள் வெளியேறியதா என்பதில் மட்டும் தீர்மானிக்கப்படாது. அதற்குப் பின்னர் உருவாகும் பாதுகாப்பு அமைப்பு எவ்வளவு வலிமையானது, ஈராக்கின் மத்திய அரசும் குர்திஷ் தன்னாட்சி அரசாங்கமும் எவ்வளவு திறமையாக இணைந்து செயல்படுகின்றன, ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்பவற்றில்தான் அதன் எதிர்காலம் தங்கியுள்ளது.

குர்திஷ் மக்களின் பாதுகாப்பையும் அரசியல் தன்னாட்சியையும் உறுதிப்படுத்துவது வெறுமனே ஒரு இராணுவப் பிரச்சினை அல்ல. அது அரசியல் சமரசம், கூட்டாட்சி உறவுகள், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் பிராந்திய நாடுகளுடனான சமநிலையான உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

அமெரிக்கப் பாதுகாப்பு அகன்ற பின்னர், குர்திஸ்தான் தனது எதிர்காலத்தைத் தானே பாதுகாக்கக்கூடிய வலிமையை உருவாக்குமா? அல்லது ஈரான்-அமெரிக்கப் போட்டியின் புதிய களமாக மீண்டும் மாறுமா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே மத்திய கிழக்கின் அடுத்தகட்ட அரசியல் மற்றும் பாதுகாப்புச் சமன்பாடுகளைத் தீர்மானிக்கக்கூடும்.



2027 வணிகம் VANIKAM

LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

ACCIDENT INJURIES
ACCOUNTING SERVICES & CONSULTANTS
ALARMS & SECURITY
APPLIANCES SALES & SERVICES
ARCHITECTURAL & DESIGNS
ATTIC INSULATION
AUTO BODY WORKS & PAINTING
AUTO CAR WASH
AUTO GLASS & WINDSHEILD
AUTO NEW & USED CAR DEALERS
AUTO PARTS
AUTO RENTAL
AUTO REPAIRS & MAINTENANCE
AUTO TRUCK & TRAILERS REPAIR
BANKRUPTCY
BANQUET & WEDDING HALLS
BASEMENT - LEGAL & PERMIT DRAWING
BEAUTY CARE & BRIDAL ORNAMENTATION
BOOK DISTRIBUTION
BUILDER
BUILDING MAINTENANCE
BUS. CARD, LOGO & SOCIAL MEDIA POST DESIGNS
CAKE DECORATIONS
CARPET CLEANERS
CATERING SERVICE & TAKEOUT
CELL PHONE SALE & SERVICES
CHILDREN & NURSING HOMES
COMMERCIAL - COOLERS & FREEZERS
COMMUNITY SERVICES
COMPUTER SALES & SERVICES

CONSTRUCTION
COOLERS & FREEZERS - COMMERCIAL
DECK, FENCE & LANDSCAPE
DENTISTS
DIVINE HOME DECOR
DOCTORS
DOORS & WINDOWS
DRAPERIES, BLINDS & SHUTTERS
DRIVING SCHOOL
DRIVING SCHOOL-TRUCKS
DUCT CLEANERS
EDUCATION CENTERS
EDUCATION CERTIFICATION
EDUCATION FINE ARTS
EDUCATION KARATE
EDUCATION LOANS
ELECTRICAL
ELECTRONIC SALES & SERVICE
ENGINEERING & STRUCTURAL DESIGN
FISH & MEAT STORE
FLOORING
FLORISTS & FLORAL ARRANGEMENTS
FUNERAL SERVICES
FURNITURE SALES
GARAGE DOOR
GLASS & MIRROR
GRAPHIC DESIGN CONSULTANT
GROCERIES
HAIR DRESSING
HANDYMAN SERVICE

HEATING & COOLING
HOME INSPECTION
INSURANCE AGENTS & CONSULTANTS
JEWELLERIES
JUNK REMOVAL
KITCHEN CABINETS
LAWYERS (BARRISTERS & SOLICITORS)
LOCK SMITH
MATRIMONY SERVICES
MILLS & GRINDERS
EY TRANSFER
MORTGAGE & FINANCIAL SERVICES
MOVERS
MUSIC GROUPS
NEWSPAPER
OPTICIANS
ORGANIZATIONS
PAINTING
PALLETS
PAWN BROKER
PEST CONTROL
PHOTOGRAPHERS STUDIO
PHYSIOTHERAPIST
PLUMBING SERVICES
POOJA ITEMS
PRIESTS
PRINTERS & GRAPHIC CONSULTANTS
RADIO STATIONS
REAL ESTATE AGENTS & BROKERS
REAL ESTATE HOME APPRAISALS
REFRIGERATION - WALK IN FREEZERS & COOLERS
REGISTRAR OF MARRIAGE
RENOVATION
RESTORATION
SHIPPING AGENTS
SINGS & BANNERS
SPORTS CLUB
SWEETS
TAILORS
TELEPHONE SERVICES
TELEVISIONS
TEXTILES &GIFTS
RAVEL AGENTS
WEB MEDIA
WEB SITE DEVELOPMENT & HOSTING
WHOLESALE DISTRIBUTORS
WINDOWS & DOORS

Vanikam.ca

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
437 345 4203

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

ரஷ்ய மொழியில் வெளியான திருக்குறள்!

எல்லைகளைக் கடந்த தமிழின் உலகப் பயணம்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

06.10.2026

தமிழ் மொழியின் தொன்மை, செழுமை, சிந்தனை ஆழம் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த இலக்கியப் படைப்புகளில் முதன்மையான இடத்தைப் பெறுவது திருக்குறள். திருவள்ளுவர் இயற்றிய 1,330 குறள்கள், 133 அதிகாரங்களாக அமைந்து, மனித வாழ்வின் அறம், சமூக ஒழுக்கம், அரசியல் நிர்வாகம், பொருளாதாரம், அன்பு, குடும்ப வாழ்க்கை எனப் பரந்த தளங்களை மிகக் குறைந்த சொற்களில் எடுத்துரைக்கின்றன. காலத்தையும், நாட்டையும், இனத்தையும், மொழியையும் கடந்து வாசிக்கக்கூடிய தன்மையே திருக்குறளின் உலகளாவிய சிறப்பாகும்.

இந்த உலகப் பயணத்தின் புதிய முக்கிய அத்தியாயமாக, 2026 செப்டெம்பர் 11 அன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் விளாதிமிர் புட்டினுக்கு திருக்குறளின் ரஷ்ய மொழி பெயர்ப்பு நூலைப் பரிசாக வழங்கிய நிகழ்வு அமைந்துள்ளது. புதுடில்லியில் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பின்போது, பிரிக்ஸ் உச்சி மாநாட்டை முன்னிட்டு இந்த நூல் வழங்கப்பட்டது.

ரஷ்ய மொழியில் திருக்குறள்

இந்த ரஷ்ய மொழிபெயர்ப்பு சாதாரணமான ஒரு மொழி பெயர்ப்பு நூல் அல்ல. சென்னை மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள 2026 பதிப்பில், மூலத் தமிழ் குறள்களுடன் அவற்றின் ஒலிபெயர்ப்பும் ரஷ்ய மொழி பெயர்ப்பும் இடம்பெற்றுள்ளன. ரஷ்ய மொழிபெயர்ப்பை நைரா மிகிர்த்சியான் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் பணியின் பின்னணியும் குறிப்பிடத்தக்கது. தினமணி

கதிர் வெளியிட்டுள்ள நேர்காணலின்படி, 2025ஆம் ஆண்டில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் சார்பில் நைரா மிகிர்த்சியானை அணுகி ரஷ்ய மொழியில் திருக்குறளை மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு முன்னர் அவர் திருக்குறளை ஆழமாக அறிந்திருக்கவில்லை என்றாலும், திருவள்ளுவரின் சிந்தனைகளை அறிந்த பின்னர் அந்தப் பணியை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நைராவுக்கு இருந்த மிகப் பெரிய சவால் தமிழ் மொழி தெரியாதது. எனவே வ.வே.சு. ஐயர் உள்ளிட்ட ஆங்கில மொழி பெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு ரஷ்ய மற்றும் தனது தாய்மொழியான ஆர்மேனிய மொழியில் அவர் மொழிபெயர்ப்பு செய்தார். மேலும் பல ஆங்கிலப் பதிப்புகள், பிரெஞ்சு மொழி பெயர்ப்பு மற்றும் பிற குறிப்புரைகளை ஒப்பிட்டு பொருளைத் தெளிவுபடுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணிக்கு ரஷ்ய மொழியில் ஆழ்ந்த புலமை பெற்ற நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் துணையாக இருந்துள்ளார். மொழி பெயர்க்கப்பட்ட பகுதிகளை அவர் ஆய்வு செய்து திருத்தங்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். மின்னஞ்சல் வழியாக இருவரும் தொடர்ந்து கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு பணியை நிறைவு செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1,330 குறள்களின் உலகச் செய்தி

திருக்குறளின் தனித்துவம் அதன் சுருக்கத்தில் மட்டுமல்ல; அதன் கருத்துகளின் உலகளாவிய தன்மையிலும் இருக்கிறது. “அறம்” மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

“பொருள்” சமூக அமைப்பு, அரசாட்சி, நிர்வாகம், பொருளாதாரம், தலைமைத்துவம் போன்றவற்றை விளக்குகிறது.



உலக இலக்கியங்களின் பரந்த வெளியில் திருக்குறளின் பயணம் என்பது ஒரு மொழியின் வெற்றிக் கதை மட்டுமல்ல. ஒரு பழமையான தமிழ்க் குரல், புதிய புதிய மொழிகளில் ஒலித்து, காலத்தையும் எல்லைகளையும் கடந்து மனிதகுலத்துடன் தொடர்ந்து உரையாடும் வரலாறாகும். திருவள்ளுவரின் குறள் தமிழில் பிறந்தது, உலக மொழிகளில் வளர்கிறது, மனித மனங்களில் எப்போதும் நிறைந்து வாழ்கிறது.

“இன்பம்” மனித உறவுகளையும் அன்பின் நுண்ணுணர்வுகளையும் பதிவு செய்கிறது.

இதனால் திருக்குறள் ஒரு குறிப்பிட்ட சமயம் அல்லது சமூகத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட நூலாக இல்லாமல், மனித வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களைப் பேசும் பொதுமையான அறநூலாக வாசிக்கப்படுகிறது. மொழிபெயர்ப்பு என்பது இங்கு வெறும் சொற்களை வேறு மொழிக்கு மாற்றுவது அல்ல. ஒரு மொழியின் பண்பாடு, உவமை, சொல் நயம், வரலாற்றுப் பின்னணி, கருத்து ஆழம் ஆகியவற்றையும் மற்றொரு மொழியின் வாசகருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பணியாகும். குறிப்பாக இரண்டு வரிகளில் மிகப்பெரிய கருத்தை அடக்கியுள்ள திருக்குறளை மொழிபெயர்ப்பது மிகப்பெரிய அறிவுசார் சவாலாகும்.

திருக்குறளின் உலகப் பயணம் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது. ஐரோப்பிய மொழிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகால மொழிபெயர்ப்புகளிலிருந்து இன்று ஆசிய, ஐரோப்பிய மற்றும் பிற உலக மொழிகளில் மேற்கொள்ளப்படும் புதிய மொழிபெயர்ப்புகள் வரை அதன் பரவல் விரிவடைந்து வருகிறது. மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் மேற்கொண்டு வரும் மொழிபெயர்ப்புத் திட்டம் இந்தப் பயணத்திற்கு புதிய வேகத்தை வழங்குகிறது. தற்போது வெளியான தகவலின்படி, 2026ஆம் ஆண்டில் நிறுவனம் சார்பில் 65 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளதாகவும், 2027 ஜனவரி இறுதிக்குள் 100 மொழிகளை எட்டும் இலக்கு இருப்பதாகவும் நிறுவன இயக்குநர் இரா. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய மொழிபெயர்ப்புடன் சுவீடிஷ், பெங்காலி உள்ளிட்ட மொழிகளிலும் புதிய பதிப்புகள் மற்றும் மொழிபெயர்ப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை நிறுவனத்தின் வெளியீட்டு பட்டியலும் காட்டுகிறது.

ஒரு நூல் – பல பண்பாடுகள்

ஒரு தமிழ் நூல் ரஷ்ய மொழியில் வாசிக்கப்படுவது என்பது தமிழுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இலக்கியப் பாலத்தை உருவாக்கும் நிகழ்வாக பார்க்கலாம். அதேபோல், ஒரு ஜப்பானியர் ஜப்பானிய மொழியில் திருக்குறளை வாசிப்பதும், ஒரு ஐரோப்பியர் தமது மொழியில் வாசிப்பதும், ஒரு ஆபிரிக்க வாசகர் தமது மொழியில் வாசிப்பதும், திருவள்ளுவரின் சிந்தனையைத் தமது சொந்த பண்பாட்டு சூழலுடன் உரையாடச் செய்கிறது.

இதுவே மொழிபெயர்ப்பின் மிகப்பெரிய சக்தி

திருக்குறள் உலகின் பல மொழிகளில் சென்றடையும் போது, அது தமிழின் பெருமையை மட்டும் வெளிப்படுத்துவதில்லை. மனித சமுதாயம் எதிர்கொள்ளும் பொதுவான கேள்விகளுக்கான ஒரு பழமையான தமிழ்ச் சிந்தனைப் பார்வையையும் உலக வாசகர்களிடம் கொண்டு செல்கிறது.பண்பாட்டுத் தூதராக திருக்குறள் விளங்கி வருகிறது.

பிரதமர் மோடி புட்டினுக்கு ரஷ்ய மொழிபெயர்ப்பு திருக்குறளை வழங்கிய நிகழ்வு, இலக்கியம் எவ்வாறு பண்பாட்டு பரிமாற்றத்தின் ஒரு கருவியாக அமைய முடியும் என்பதற்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்த நூலை வழங்கியபோது, மொழிகளையும் எல்லைகளையும் கடந்து திருவள்ளுவரின் ஞானத்தை எடுத்துச் செல்லும் படைப்பாக திருக்குறளை அவர் குறிப் பிட்டார்.

முக்கியமாக, இது ஒரு தமிழ் இலக்கியப் படைப்பு உலக அரசியல் மேடையில் இடம்பெற்ற ஒரு தருணமாகவும் கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால் திருக்குறளின் பெருமை எந்த அரசியல் நிகழ்வையும் சார்ந்தது அல்ல. அரசியல் தலைவர்கள் மாறலாம் நாடுகளின் உறவுகள் மாறலாம் ஆனால் மனித வாழ்வின் அடிப்படை அறக் கேள்விகள் தொடர்ந்து நிலைத்திருக்கின்றன.

அந்த அடிப்படை மனிதக் கேள்விகளுக்குப் பதில் தேடும் முயற்சியில்தான் திருக்குறளின் நிரந்தரத்தன்மை இருக்கிறது.

உலகப் பொதுமறையாகும் பாதையில், திருக்குறளை உலகின் பல மொழிகளில் மொழிபெயர்ப்பது தமிழின் தொன்மையைப் பாதுகாப்பதற்கான முயற்சி மட்டுமல்ல் தமிழ்ச் சிந்தனையை எதிர்கால தலைமுறைகளிடம் கொண்டு செல்வதற்கான பணியுமாகும்.

ஒரு காலத்தில் தமிழில் எழுதப்பட்ட 1,330 குறள்கள் இன்று ரஷ்ய மொழியில் வாசிக்கப்படுகின்றன. நாளை இன்னும் பல மொழிகளில் புதிய வாசகர்களைச் சந்திக்கப் போகின்றன. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் திருவள்ளுவருக்கும் உலகின் ஒரு புதிய சமூகத்திற்கும் இடையே ஒரு புதிய பாலத்தை அமைக்கிறது.

திருக்குறள் தமிழரின் இலக்கியச் செல்வம் ஆனால் அதன் சிந்தனை மனிதகுலத்தின் பொதுச் செல்வமாக மாறும் திறன் கொண்டது.

அதனால், உலக இலக்கியங்களின் பரந்த வெளியில் திருக்குறளின் பயணம் என்பது ஒரு மொழியின் வெற்றிக் கதை மட்டுமல்ல. ஒரு பழமையான தமிழ்க் குரல், புதிய புதிய மொழிகளில் ஒலித்து, காலத்தையும் எல்லைகளையும் கடந்து மனிதகுலத்துடன் தொடர்ந்து உரையாடும் வரலாறாகும். திருவள்ளுவரின் குறள் தமிழில் பிறந்தது, உலக மொழிகளில் வளர்கிறது, மனித மனங்களில் எப்போதும் நிறைந்து வாழ்கிறது.

மாவீரர் நாளின் வரலாறு

பரிமாணங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம்

சு. லோகிதன்

13.10.2026

முன்னுரை

ஒரு தேசத்தின் அல்லது ஓர் இனத்தின் வரலாற்றில் நினைவேந்தல்கள் வெறும் சடங்குகள் அல்ல; அவை அந்த இனத்தின் கூட்டு மனசாட்சியையும், அடையாளத்தையும், வரலாற்றுத் தொடர்ச்சியையும் தக்கவைத்துக்கொள்ளும் முதன்மை அரண்களாகும். உலக வரலாற்றில் ஒவ்வொரு விடுதலை இயக்கமும், தேசமும் தங்களது சுதந்திரத்திற்காக இன்னுயிரை ஈகம் செய்த வீரர்களை நினைவு கூரத்தனித்துவமான நாட்களை ஒதுக்கியுள்ளன. அவ்வரிசையில், தமிழ் சமூகத்தின் நவீன வரலாற்றில் மிகவும்உணர்வுப்பூர்வமான, ஒழுங்கமைக்கப்பட்ட, மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவேந்தல் நிகழ்வாக மாவீரர்நாள் (நவம்பர் 27) திகழ்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் பாதுகாப்புக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த ஆயிரக்கணக்கான போராளிகளை நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தும் நாளாக இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிரான ஒரு தேசிய இனத்தின் எதிர்ப்புக் குரலாகவும், தியாகத்தின் உயரிய குறியீடாகவும் விளங்கும் மாவீரர் நாளின் வரலாற்றுத் தோற்றம், நவம்பர் 27 தேர்வின் பின்னணி, அதன் பண்பாட்டுச் சின்னங்கள் மற்றும் நவீனசமூக அமைப்பில் அது வகிக்கும் பங்கு குறித்து இக்கட்டுரைவிரிவாக ஆராய்கிறது.

நவம்பர் 27 ஏன் தேர்வு செய்யப்பட்டது?

மாவீரர் நாளாக நவம்பர் 27 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டதற்குப் பின்னணியில் ஆழமானவரலாற்றுச் சம்பவமும், இலட்சியப் பிணைப்பும் உண்டு. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தொடக்ககாலப் போராளியும், முதன்மைத் தளபதிகளில் ஒருவருமான லெப்டினன்ட் சங்கர் (இயற்பெயர்: செல்வச்சந்திரன் சத்தியநாதன்) வீரமரணமடைந்த நாளே நவம்பர் 27 (1982) ஆகும்.

- ***முதல் களப்பலியும் விதையாக்கமும்:*** 1982 ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று திருநெல்வேலிப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையில் விழுப்புண்ணடைந்த சங்கர், தமிழ் நாட்டில் பண்டுவம் (சிகிச்சை) பெறும் போது வீரச்சாவு அடைந்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரப்பூர்வ முதன்மை மாவீரராக இவர் கணிக்கப்படுகிறார்.

- ***தேர்வின் பின்னணி:*** விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக உயிர் ஈகம் செய்த போராளியின் நினைவை அடித்தளமாகக் கொண்டு, அவருக்குப் பின் தாய்நாட்டிற்காக மடிந்த அனைத்து போராளிகளையும் ஒரே குடையின் கீழ் நினைவு கூருவது ஒரு வரலாற்றுத் தேவையாகக் கருதப்பட்டது.

- ***நேரத்தின் அமைவு:*** லெப்டினன்ட் சங்கர் வீரசாவடைந்த மாலையின் மாலை 6:05 மணி என்பது மாவீரர் நாளில் முதன்மைச் சுடரேற்றும் புனித நேரமாகப் பின்நாட்களில் வரலாற்றுச் சட்டகத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

மாவீரர் நாளின் வரலாற்றுத் தோற்றம்மற்றும் வளர்ச்சி

மாவீரர் நாள் அமைப்பியல் ரீதியாகத் தொடங்கப்பட்டு, ஈழத் தமிழர்களின் தேசிய நினைவேந்தலாகப் பரிணமித்த வரலாறு பல கட்டங்களைக் கொண்டது.

அ) முதல் மாவீரர் நாள் (1989)

1989 ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று மணலாற்று வனப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனையில் முதல் மாவீரர் நாள் நிகழ்வு உணர்வுப் பூர்வமாகவும் நடைபெற்றது.

- அந்நாள் வரை வீரச்சாவடைந்த 607 போராளிகளின் பெயர்களும் வாசிக்கப்பட்டு, அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

- காட்டகத்தில் இவ் மாவீரர்களுக்குச் சுடரேற்றி வணக்கம் செலுத்தும் வழக்கம் முறைமைப்படுத்தப்பட்டது.

ஆ) மாவீரர் வாரமாக அறிவிக்கப்படல் (1991)

1991 ஆம் ஆண்டு முதல், நினைவேந்தல் நிகழ்வுகள் மேலும் முறைப்படுத்தப்பட்டு நவம்பர் 21 முதல் நவம்பர் 27 வரையிலான வாரம் "மாவீரர் வாரமாக"ப் பிரகடனப்படுத்தப்பட்டது.

- இவ்வாரத்தில் மாவீரர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.

- பள்ளிக்கூடங்கள், வீதிகள், கிராமங்கள் என அனைத்து இடங்களிலும் தாய்மைப் பணிகளும், நினைவேந்தல்கலை நிகழ்வுகளும் அமைக்கப்பட்டன.

இ) மாவீரர் துயிலுமில்லங்கள்

மாவீரர்களின் நினைவைப் போற்றுவதற்காக அமைக்கப்பெற்ற பிரத்யேக நினைவிடங்கள் "மாவீரர் துயிலுமில்லங்கள்" என்று அழைக்கப்பட்டன.

- கோப்பாய், சாட்டி, விசுவமடு, கனகபுரம் உள்ளிட்ட பல இடங்களில் அமைக்கப்பட்ட துயிலுமில்லங்கள் புனிதமான நினைவிடங்களாகப் பராமரிக்கப்பட்டுவந்தன.

- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27 மாலை 6:05 மணிக்கு ஒரேநேரத்தில் பல்லாயிரக்கணக்கான உறவினர்களும் மக்களும் இத் துயிலுமில்லங்களில் ஒன்றுகூடித் தீபமேற்றி வணக்கம செலுத்தும் நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்க வீரவணக்க நிகழ்வு வடிவமாகப் பரிணமித்தது.

மாவீரர் நாளின் முதன்மைப் பண்பாட்டுச்சின்னங்கள்

மாவீரர் நாள் என்பது வெறும் கண்ணீர் வணக்க நிகழ்வாக இல்லாமல், தனித்துவமான கலை மற்றும் பண்பாட்டுக் குறியீடுகளைத் தன்னகத்தே கொண்டது.

கார்த்திகைப் பூ (Gloriosa Superba)

ஈழத்தின் தேசிய மலரான கார்த்திகைப் பூ (செங்காந்தள் மலர்), குருதியின் நிறத்தையும், தீயின் சுடரையும் நினைவூட்டுவதால் முதன்மைச் சின்னமாக விளங்குகிறது.

துயிலும் இல்லச்சுடர்

மாலை 6:05 மணிக்குத் துயிலுமில்லங்களில் "மாவீரர் துயிலும் இல்லப் பாடல்" இசைக்கப்படும் வேளையில் முதன்மைச் சுடரும் அகல் விளக்குகளும் ஏற்றி வணக்கம் செலுத்தப்படும்.

சிவப்பு மற்றும் மஞ்சள்

தமிழீழத் தேசியக் கொடியின் முதன்மை வண்ணங்களான சிவப்பு (ஈகத்தின்) மற்றும் மஞ்சள் (விடுதலை விடியல்) நிறக் கொடிகளினால் நிலப்பரப்புகள் பொலிவூட்டப்படும்.

மாவீரர் நாளின் சமூக மற்றும் உணர்வுப்பரிமாணங்கள்

இதன் முக்கியத்துவம் என்னவென்றால், ஒவ்வொரு பிரச்சினையும் நேரடியாக ஜனாதிபதிகள் மட்டத்தில் மோதலாக மாறாமல், நிரந்தரமான அரசாங்கத் தொடர்பு வழியாகக் கையாளப் படுவதற்கான வாய்ப்பு உருவாகிறது. அத்துடன் செயற்கை நுண்ணறிவு - போட்டியிலும் ஒத்துழைப்பிலும் கவனம் செலுத்த வேண்டிய சூழல் நிலவுகிறது.

உண்மையில் அமெரிக்கா-சீனா போட்டியின் புதிய போர்க்களமாக மாறியிருப்பது செயற்கை நுண்ணறிவு (AI) தான்.

செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தில் உலகின் முன்னணி நாடுகளாக அமெரிக்காவும் சீனாவும் உருவெடுத்து வருகின்றன. செயற்கை நுண்ணறிவு பொருளாதாரம் மட்டுமல்லாமல், பாதுகாப்பு, இராணுவம், சைபர் பாதுகாப்பு மற்றும் எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சியிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த நிலையில், இரு நாடுகளும் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக ஒரு புதிய இருதரப்பு உரையாடல் அமைப்பை உருவாக்க ஒப்புக்கொண்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆபத்துகள், அவசரச் சம்பவங்கள் மற்றும் எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சிகள் குறித்து தகவல் பரிமாற்றம் செய்வதே இதன் நோக்கமாகும்.

இது மிகவும் முக்கியமான மாற்றமாகும். ஏனெனில் செயற்கை நுண்ணறிவு துறையில் இரு நாடுகளும் கடுமையான போட்டியாளர்களாக இருந்தாலும், கட்டுப்பாடின்றி நடைபெறும் தொழில்நுட்பப் போட்டி உலகப் பாதுகாப்புக்கு புதிய ஆபத்துகளை உருவாக்கக்கூடும்.

அமெரிக்கா–சீனாவின் புதிய உறவு என்பது பழைய பகையை முடித்த நட்பு அல்ல. போட்டியை கட்டுப்படுத்திக்கொண்டு, தேவையான இடங்களில் ஒத்துழைப்பை உருவாக்கும் புதிய உலக அரசியல் சமநிலை எனக் கூறலாம். பல ஆண்டுகளாக வர்த்தகப் போர், தொழில்நுட்பப் போட்டி, தைவான் விவகாரம், அரிய கனிமங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் இராணுவப் போட்டி என இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் இன்னமும் நிலவுகிறது.

அரிய கனிமங்களே சீனாவின் பலம்

அமெரிக்கா-சீனா உறவில் இன்னொரு முக்கியமான பிரச்சினை அரிய கனிமங்கள் (Rare Earths) ஆகும். மின்சார வாகனங்கள், மின்னணு சாதனங்கள், விமானங்கள், ஏவுகணைகள், காற்றாலை தொழில்நுட்பம் மற்றும் பல உயர் தொழில்நுட்பத் துறைகளுக்கு அரிய கனிமங்கள் தேவைப்படுகின்றன. இந்தத் துறையில் சீனா உலகளாவிய உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு சங்கிலியில் மிகப்பெரிய பங்கை வகிக்கிறது. இதனால் அமெரிக்காவுக்கு சீனாவுடன் முழுமையான பொருளாதாரப் பிரிவை மேற்கொள்வது எளிதானதல்ல.

இதுவே புதிய உறவில் ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறது: அமெரிக்காவுக்கு சீனா தேவைப்படுவது போலவே, சீனாவுக்கும் அமெரிக்க சந்தையும் தொழில்நுட்பமும் முக்கியமானவை. அதனால் இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் முற்றிலும் துண்டித்துக் கொள்வதற்குப் பதிலாக, முக்கிய துறைகளில் சார்பைக் குறைத்துக்கொண்டு, தேவையான இடங்களில் தொடர்புகளைத் தொடரும் கொள்கையை பின்பற்றுகின்றன.

தைவான் தீர்க்கப்படாத பிரச்சினை

ஆனாலும் புதிய அமெரிக்கா-சீனா உறவில் மிகப்பெரிய சவால் தைவான் விடயம் தான். வர்த்தக உறவு முன்னேற்றம் ஏற்பட்டாலும், தைவான் தொடர்பான அமெரிக்கா-சீனா அடிப்படை கருத்து வேறுபாடு தொடர்கிறது. சீனா தைவானை தனது நாட்டின் ஒரு பகுதியாகக் கருதுகிறது. அதேவேளை தைவான் தனித்த அரசியல் அமைப்புடன் செயல்பட்டு வருகிறது. அமெரிக்கா தைவானுடன் அதிகாரபூர்வமான தூதரக உறவை வைத்திருக்காதபோதிலும், அதன் பாதுகாப்புக்கு நீண்டகால ஆதரவை வழங்கி வருகிறது.

அமெரிக்காவின் தைவான் ஆயுத விற்பனையும் சீனாவின் கடுமையான எதிர்ப்புக்குள்ளாகிறது. எனவே வர்த்தகத் துறையில் ஏற்பட்டிருக்கும் சமரசம் தைவான் விவகாரத்தில் ஏற்பட்ட சமரசமாகக் கருத முடியாது. சமீபத்திய சந்திப்பிலும் தைவான் தொடர்பான அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை.

இங்கே ஒரு முக்கியமான வேறுபாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். அமெரிக்காவும் சீனாவும் நண்பர்களாக மாறிவிட்டன என்று கூறுவதற்கு தற்போதைய நிலைமை போதுமான ஆதாரத்தை வழங்கவில்லை. மாறாக, இரு நாடுகளும், பொருளாதாரப் போட்டியைத் தொடர்கின்றன. தொழில்நுட்ப முன்னிலை பெற முயற்சிக்கின்றன, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தங்களது செல்வாக்கை விரிவுபடுத்துகின்றன, தைவான் குறித்து முரண்படுகின்றன, அதே நேரத்தில் வர்த்தகப் போர் தீவிரமடையாமல் பேச்சுவார்த்தைகளைத் தொடர்கின்றன.

இதனால் உருவாகும் புதிய உறவை போட்டிக்குள் நிர்வகிக்கப்பட்ட ஒத்துழைப்பு என்று புரிந்துகொள்ளலாம். இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தால் உலக வர்த்தகம், பங்குச் சந்தைகள், தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகள், குறைக்கடத்தி உற்பத்தி மற்றும் கடல் போக்குவரத்து பாதிக்கப்படலாம்.

மாறாக, இரு நாடுகளும் வர்த்தகப் பதற்றத்தைக் குறைத்தால் உலக பொருளாதாரத்திற்கு ஓரளவு நிலைத்தன்மை கிடைக்கலாம். அவுஸ்திரேலியாவுக்கும் இந்த மாற்றம் மிகவும் முக்கியமானது. அவுஸ்திரேலியா பாதுகாப்பு ரீதியாக அமெரிக்காவுடன் நெருக்கமான கூட்டாண்மையைக் கொண்டிருக்கிறது அதே வேளை சீனா அதன் மிக முக்கியமான வர்த்தகக் கூட்டாளிகளில் ஒன்றாக உள்ளது. எனவே அமெரிக்கா-சீனா உறவு சீராக இருப்பது அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்திற்கும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கும் முக்கியமானதாகும்.

2026ஆம் ஆண்டின் அமெரிக்கா-சீனா புதிய அணுகுமுறை, இரு வல்லரசுகளும் தங்களது நீண்டகாலப் போட்டியை முடிவுக் குக் கொண்டு வந்துவிட்டன என்பதைக் காட்டவில்லை. ஆனால் போட்டியை நேரடி மோதலாக மாறவிடாமல் நிர்வகிக்க வேண்டும் என்ற இருதரப்பு தேவையை வெளிப்படுத்துகிறது.

வர்த்தக வரிக் குறைப்புகள், புதிய வர்த்தகக் குழு, AI உரையாடல், விவசாய மற்றும் சந்தை அணுகல் பேச்சுவார்த்தைகள் ஆகியவை உறவில் புதிய வாயில்களைத் திறந்துள்ளன. ஆனால் தைவான், தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள், அரிய கனிமங்கள், இராணுவப் போட்டி மற்றும் உலகளாவிய செல்வாக்கு போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

எனவே, அமெரிக்கா-சீனாவின் புதிய உறவு என்பது பழைய பகையை முடித்த நட்பு அல்ல. போட்டியை கட்டுப்படுத்திக் கொண்டு, தேவையான இடங்களில் ஒத்துழைப்பை உருவாக்கும் புதிய உலக அரசியல் சமநிலை எனக் கூறலாம்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுச் சிலையை உடனடியாக மீள நிறுவுமாறு சிறீலங்காவை வலியுறுத்தக் கோரி, ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அவசர வேண்டுகோள்!

ஜெனீவா / நியூயோர்க் - 6 ஒக்டோபர் 2026

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இன்று, அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் அமைப்புகளை உருவாக்குவதற்குமான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளரிடமும், கருத்துச் சுதந்திரத்தையும், அதனை வெளிப்படுத்தும் சுதந்திரத்தையும் மேம்படுத்திப் பாதுகாப்பதற்கான சிறப்பு அறிக்கையாளரிடமும் இரு அவசர மனுக்களைச் சமர்ப்பித்துள்ளது.

2026 செப்டம்பர் 27ஆம் நாள், சிறீலங்காப் பொலிஸ் அதிகாரிகளால் லெப். கேணல் திலீபனின் நினைவுச் சிலை அகற்றப்பட்டமை தொடர்பாக இம்மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. லெப். கேணல் திலீபன் 1987ஆம் ஆண்டு மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தையும் அவரது உயிர்த்தியாகத்தையும் நினைவுகூரும் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் காலப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும். பறிமுதல் செய்யப்பட்ட நினைவுச் சிலை எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது இதுவரை தெரியவில்லை என்றும் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் தலைவரான, இருபத்து மூன்று வயதுடைய லெப். கேணல் திலீபன், இந்தியாவிடம் முன்வைக்கப்பட்ட ஐந்து அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்திப் பன்னிரண்டு நாட்கள் உணவும் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் மேற்கொண்டு, 1987 செப்டம்பர் 26ஆம் நாள் உயிர்த்தியாகம் செய்தார்.

அவரது மறைவுக்குப் பின்னர், யாழ்ப்பாணத்திலும் தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளிலும் உலகெங்கிலும் ஆண்டுதோறும் அமைதியான நினைவேந்தல்கள் நடைபெற்று வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் குழு (UN Human Right Council) ஏற்றுக்கொண்ட பொதுக் கருத்துரை எண் 37(2020)ஐ மேற்கோள்காட்டி, நினைவேந்தலின் மையச் சின்னமாக விளங்கிய திலீபனின் நினைவுச் சிலையை அகற்றியமை, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) 19ஆம் உறுப்புரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தையும், அதன் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், 21ஆம் உறுப்புரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அமைதியாக ஒன்றுகூடும் உரிமையையும் மீறுவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது மனுக்களில் வாதிடுகிறது. இவ்வுடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சிறீலங்கா சட்டரீதியாகக் கட்டுப்பட்டுள்ளது என்றும் மனுக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2026 செப்டம்பர் 29ஆம் நாள் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில், தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பை அதன் கொடிகள், சின்னங்கள் உள்ளிட்டவகைகளை பிரபலப்படுத்துவதை உள்நாட்டுச் சட்டங்கள் தடைசெய்வதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

இந்த விளக்கத்திற்குப் பதிலளிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத, தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தமையும், சிறீலங்கா அரசுக்கும் அவ்வியக்கத்திற்கும் இடையிலான ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடைந்த பின்னரும் அத்தடையைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதும், சட்ட நடவடிக்கை என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகளே என வாதிடுகிறது.

மேலும், வாதத்தின் பொருட்டு அவ்வியக்கத்தின் மீதான தடையும், அதனைத் தொடர்ந்து தடைப் பட்டியலில் வைத்திருப்பதும் முறையான சட்ட நடவடிக்கைகள் என ஏற்றுக் கொண்டாலும்கூட, அவை ஈழத் தமிழ் மக்கள் தமது விடுதலைப் போராளிகளை நினைவுகூரும் உரிமையைப் பறிக்க முடியாது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது.

அப்போராளிகள், ICCPR உடன்படிக்கையின் முதலாம் உறுப்புரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமது மக்களின் அரசியல் நிலையைத் தீர்மானிப்பதற்கும், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்குமான போராட்டத்தில் பங்கேற்றவர்கள் எனவும் அது குறிப்பிடுகிறது.

இது தொடர்பாக, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் Holder v. Humanitarian Law Project, 561 U.S. 1, 25-26 (2010) என்ற வழக்குத் தீர்ப்பை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கோள்காட்டியுள்ளது. பயங்கரவாத அமைப்பொன்றுக்கு ஆதரவாகச் சுயாதீனமாகக் கருத்துகளை முன்வைப்பது பேச்சுச் சுதந்திரத்தின் கீழ் பாதுகாக்கப்படுவதாக அத்தீர்ப்பில் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக அது சுட்டிக்காட்டுகிறது.

அமெரிக்க உச்ச நீதிமன்றம் மேலும்:

“அரசியல் இலக்குகளை அடைவதற்குப் பயங்கரவாதமே சிறந்த வழி என்று ஒருவர் கூறுவதை அச்சட்டம் தடைசெய்யவில்லை.” எனக் குறிப்பிட்டுள்ளதையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதே ஆயுத போராட்டத்தில் உயிரிழந்த சிறீலங்கா இராணுவத்தினருக்கான நினைவுச் சின்னங்களும் நினைவேந்தல் தலங்களும் தொடர்ந்து பராமரிக்கப்படுவதையும், அவர்கள் பகிரங்கமாக நினைவுகூரப்பட்டுப் போற்றப்படுவதையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டுகிறது.

இத்தகைய வேறுபட்ட அணுகுமுறை, சர்வதேச அரசியல் சிவில் உரிமைகள் (ICCPR) உடன்படிக்கையால் பாதுகாக்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதில் சமத்துவமும் பாகுபாடின்மையும் பேணப்படுகின்றனவா என்பது குறித்து முக்கியமான கேள்விகளை எழுப்புவதாக அது வாதிடுகிறது.

திலீபனின் நினைவுச் சிலை அகற்றப்பட்டமையைத் தனித்ததொரு சம்பவமாகக் கருதக்கூடாது எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது.

இது தொடர்பாக, 2024 பெப்ரவரி 7ஆம் நாளிடப்பட்ட, ஐ.நா. சிறப்பு நடைமுறைகளின் கீழ் அனுப்பப்பட்ட AL LKA 1/2024 என்ற தொடர்பாடலை அது சுட்டிக்காட்டுகிறது.

அத்தொடர்பாடலில், மாவீரர் நாள் நினைவேந்தல்கள் உள்ளிட்ட தமிழர் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்படுத்தப்பட்ட தடைகள் குறித்து, பல்வேறு பொறுப்புகளைக் கொண்ட ஐ.நா. நிபுணர்கள் சிறீலங்கா அரசாங்கத்திடம் தமது கரிசனைகளைத் தெரிவித்திருந்தனர். கருத்துச் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பண்பாட்டு உரிமைகள் மற்றும் நிலைமாறுகால நீதி ஆகியவை தொடர்பான கரிசனைகள் அத்தொடர்பாடலில் எழுப்பப்பட்டிருந்தன. எனவே, தமிழர் நினைவேந்தல்களைப் பாதிக்கும் கட்டுப்பாடுகள் மீண்டும் மீண்டும் விதிக்கப்படுவதைத் தனித்தனி சம்பவங்களாகக் கருதாமல், தொடர்ச்சியான ஒரு பரந்த போக்கின் பகுதியாக ஆராய வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது.

2026 செப்டம்பர் 14ஆம் நாளிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் அறிக்கையை A/HRC/63/84 மேற்கோள்காட்டி, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது மனுக்களின் இறுதியில் ஒரு பரிந்துரையை முன்வைத்துள்ளது.

தமிழர் நினைவேந்தல்கள் மற்றும் அமைதியான கருத்து வெளிப்பாடுகளின் மீதான கட்டுப்பாடுகள் குறித்த ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இச்சம்பவத்தையும் இணைத்து ஆராய்ந்து, ஐ.நா.வின் இனப்படுகொலை மற்றும் அட்டூழியக் குற்றங்களைத் தடுப்பதற்கான பொறி முறைகளின் கீழ் இதனை ஓர் ஆரம்ப எச்சரிக்கைக் குறியீடாகக் கருத வேண்டுமா என்பதைச் சிறப்பு அறிக்கை யாளர்கள் பரிசீலிக்க வேண்டும் என அது கோரியுள்ளது.

இவ்விவகாரத்தில் உடனடி நடவடிக்கை தேவைப்படுவதாலும், நினைவுச் சிலை எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்ந்து தெரியாத நிலையில் இருப்பதாலும், இதனை அவசரமான விவகாரமாகக் கருதி சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து விரைவான பதிலைப் பெறுமாறு சிறப்பு அறிக்கையாளர்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது.

சட்டரீதியான தீர்வுகளை நாடும் அதேவேளையில், லெப். கேணல் திலீபனின் நினைவுச் சிலையை உடனடியாக மீள நிறுவுவதற்கான அரசியல் போராட்டத்தைத் தீவிரப்படுத்துமாறு இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களுக்கும் உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அழைப்பு விடுக்கிறது.

சட்டப் போராட்டமும் அரசியல் போராட்டமும் இணைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான போராட்டமின்றி எமது அரசியல் பெருவிருப்புகளை நிறைவேற்ற முடியாது.

நெல்சன் மண்டேலா கூறியதுபோல்:

“சுதந்திரத்தை அடைவதற்கு எங்கும் எளிதான பாதை இல்லை. எமது இலட்சியங்களின் மலை உச்சியை அடைவதற்கு முன்னர், நம்மில் பலர் மரணத்தின் நிழல் படிந்த பள்ளத்தாக்கை மீண்டும் மீண்டும் கடந்து செல்ல வேண்டியிருக்கும்.”

லெப். கேணல் திலீபனின் வார்த்தைகளில் கூறுவதாயின்:

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!”
தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்!
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!

விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளரர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

www.vanikam.ca

Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதமர் பணிமனை

875 Avenue of the Americas, Suite 2309 www.tgte.org
New York, NY 10001, USA pmo@tgte.org

October 6, 2026

FORMAL COMPLAINT OF FUNDAMENTAL RIGHTS VIOLATIONS

To: Leopoldo Maldonado Gutierrez

UN Special Rapporteur on the Promotion and Protection to the Right of Freedom of Opinion and Expression

OHCHR-UNOG
8-14 Avenue of De La Paix
1211 Geneva 10
Switzerland

To : Gina Romero
UN Special Rapporteur on Freedom of Peaceful Assembly and Association
OHCHR-UNOG
Palais des Nations
CH-1211 Geneva 10
Switzerland

COMPLIANT DETAILS

Transnational Government of Tamil Eelam
875 Avenue of the Americas
Suite 2309
New York, NY
USA
Contact Number/Email: (614)-202-3377, pmo@tgte.org

URGENT APPEAL

Violations of the Rights to Peaceful Assembly and Association and to Freedom of Opinion and Expression in Sri Lanka

RE: Removal of the Memorial Statue of Lt. Col. Thileepan (on 27 September 2026)

I. INTRODUCTION

1. This urgent appeal is submitted jointly to the United Nations Special Rapporteur on the Rights to Freedom of Peaceful Assembly and of Association and the United Nations Special Rapporteur on the Promotion and Protection of the Right to Freedom of Opinion and Expression by the Transnational Government of Tamil Eelam ("TGTE").
2. The recent removal by Sri Lankan authorities of a memorial statue of Lt. Col. Thileepan during the 39th Commemoration of his hunger strike and death raises serious concerns regarding violations of the rights of the Eelam Tamil People in the North-East of the island of Sri Lanka, including their rights to peaceful assembly, freedom of opinion and expression, and commemoration.
3. The TGTE submits that, if left unaddressed, such conduct intensify the conditions of racial persecution, repression, and denial of fundamental rights of Eelam Tamils. These violations have been the subject of longstanding international concern since the outbreak of armed conflict in 1976.
4. The TGTE further submits that this incident warrants urgent intervention by the relevant United Nations Special Rapporteurs and the Office of the United Nations High Commissioner for Human Rights, including consideration of whether it constitutes an early-warning indicator of the risks of genocide identified in the United Nations Secretary-General's report dated September 14th 2026 on the Prevention of Genocide to the Human Rights Council (A/HRC/63/84).

II. FACTUAL BACKGROUND

5. The Eelam Tamil people in the island of Sri Lanka have experienced decades of political conflict and of discrimination, marginalization, and violations of fundamental rights culminating in the 2009 Genocide. The conflict involved both armed and peaceful forms of political mobilization and culminated in the armed conflict between the State of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam ("LTTE").
6. On September 13, 1987, the LTTE leadership conveyed to India a letter setting out five demands, in the belief that India could bring pressure upon the Government of Sri Lanka to address those demands. On September 15, 1987, after no response was received from India, Lt. Col. Thileepan, a political leader of the LTTE in the Jaffna Peninsula, commenced a hunger strike in an effort to persuade India to act upon the five demands.
7. Lt. Col. Thileepan, then 23 years old, delivered speeches that were widely broadcast, and large numbers of people participated in or gathered around the hunger strike. After refusing both food and water for twelve days, he died on September 26, 1987. He was subsequently accorded a public funeral in Jaffna.
8. Since his death, annual commemorations have been held in Jaffna and elsewhere to commemorate Lt. Col. Thileepan's death.
9. On September 15th, 2026, as part of the commemorative observances, a memorial statue of Lt. Col. Thileepan was installed on a tiled concrete plinth at the site where members of the public had gathered to pay their respects. The tiled concrete plinth and statue were newly installed, following damage done to the original structure.
10. On September 27, 2026, at approximately 6:15 a.m., three police vehicles arrived at the memorial enclosure. More than twelve armed and uniformed officers attached to the Sri Lankan Police reportedly exited the vehicles and surrounded the site.

11. According to information received by the TGTE, the police officers entered the elevated memorial area and proceeded to dismantle the memorial statue using tools, damaging the brickwork and concrete structure supporting the plinth.
12. By approximately 6:35 a.m., the officers had removed the statue, confiscated floral arrangements and commemorative banners, and loaded the seized property into police vehicles before departing in the direction of central Jaffna.
13. Following the incident, members of the Eelam Tamil community, political representatives, and civil society activists publicly called for the immediate return of the memorial statue.
14. At the time of this submission, the statue has reportedly not been returned, and its present whereabouts are unknown.
15. The Sri Lankan Cabinet Spokesperson, Nalinda Jayatissa, stated on September 29th, 2026, during a media briefing that the LTTE remains a proscribed organization and that "the laws of our country do not allow promotion of a banned outfit including their flags, logo, etc."

III. APPLICABLE INTERNATIONAL LAW

A. Right to Peaceful Assembly

16. The right to peaceful assembly is a fundamental human right protected by Article 21 of the International Covenant on Civil and Political Rights ("ICCPR"), to which Sri Lanka is a party. The right is also protected by other international and regional human rights instruments.
17. In its General Comment No. 37 (2020), adopted on September 17, 2020, the United Nations Human Rights Committee emphasized the fundamental importance of peaceful assembly to individual autonomy, democratic participation, human rights, the rule of law, and pluralism. The Committee further recognized that peaceful assemblies are particularly important for marginalized individuals and groups and observed that failure to respect and ensure the right of peaceful assembly is typically a marker of repression.
18. The Human Rights Committee further made clear that the contentious nature of an assembly or the ideas expressed by its participants does not, in itself, deprive the assembly of protection under Article 21. The Committee recognized that peaceful assemblies may cause disruption to vehicular or pedestrian movement or economic activity, but emphasized that such consequences do not remove the protection afforded by Article 21. Any resulting risks or disruption must instead be managed within the framework of the Covenant.
19. Article 2(1) of the ICCPR requires States Parties to respect and ensure the rights recognized in the Covenant. In relation to peaceful assemblies, the Human Rights Committee has emphasized that States must facilitate the exercise of the right and protect participants. States should not prohibit, restrict, block, disperse, or disrupt peaceful assemblies without compelling justification, nor sanction participants or organizers without legitimate grounds.
20. The Committee has further emphasized that States must ensure that laws, and their interpretation and application, do not result in discrimination in the enjoyment of the right of peaceful assembly, including on grounds of race, color, or ethnicity. States also have a duty to protect participants from discriminatory abuse and attacks.

21. Article 21 permits restrictions on the right to peaceful assembly only where those restrictions satisfy the requirements set out in the Covenant. Such restrictions must be narrowly drawn and must pursue one or more of the legitimate aims expressly identified in Article 21, namely the interests of national security, public safety, public order, the protection of public health or morals, or the protection of the rights and freedoms of others.
22. Restrictions must also satisfy the requirements of legality, necessity, and proportionality. The Human Rights Committee has emphasized that restrictions may not be based merely on the identity of participants or their relationship with the authorities.

B. Freedom of Opinion and Expression

23. The protection of peaceful assembly is closely connected with the protection of freedom of opinion and expression. The ability to assemble, commemorate, express political or historical views, and communicate collective grievances is an important component of the exercise of freedom of expression.
24. Article 19 of the ICCPR protects the right to hold opinions without interference and the right to seek, receive, and impart information and ideas through various forms and media. Restrictions on expression must likewise comply with the requirements of legality, legitimacy, necessity, and proportionality established under international human rights law.

IV. APPLICATION OF THE LAW TO THE PRESENT CASE

25. According to the Human Rights Committee, determining whether conduct falls within the ambit of Article 21 requires consideration of whether the conduct constitutes a "peaceful assembly" and, if so, whether any restriction imposed upon it satisfies the requirements of Article 21.
26. The TGTE submits that the annual commemoration of Lt. Col. Thileepan, insofar as it involved members of Eelam Tamil Nation gathering peacefully to pay respects, place flowers, display commemorative materials, and participate in a public memorial observance, falls within the scope of activities protected by the rights to peaceful assembly and freedom of expression.
27. The removal of the memorial statue, which constituted a central physical feature of the commemoration, interfered with the community's ability to engage in peaceful remembrance, cultural expression and collective commemoration.
28. The TGTE therefore submits that the Government's stated justification concerning the LTTE's proscription should not be treated as dispositive. The relevant question under international human rights law is whether the particular commemorative activities constituted protected peaceful assembly and expression and, if so, whether the State's interference satisfied the strict requirements of Articles 19 and 21 of the ICCPR.
29. . The Cabinet's Spokesperson's justification that the "laws of Sri Lanka do not allow the promotion of the banned outfit, including their flags, logos, etc." is misplaced. Placing an organization on a "terrorist list", cannot serve as a justification to prohibit communities paying respects to the dead, unless the acts of commemoration fall within Article 21. Respect for the war dead, and their graves, is protected under human rights law, in particular the right to human dignity and respect for private life.
30. The TGTE contends that placing the LTTE in the banned organization list and/or continuing to keep it in the list, even after the end of the war between the Sri Lankan State and the LTTE in May 2009, is a political act masquerading it as a legitimate law enforcement activity.

31. *Arguendo,* placing the LTTE and continuing to keep it in the banned list as a law enforcement activity, the TGTE contends that it does not deny the Eelam People's right to Commemorate their freedom fighters who were engaged in a self-determination struggle to "determine their political status and freely pursue their economic, social, and cultural development (Article 1 ICCPR)".
32. It is instructive to note the following observation made by the U.S. Supreme Court, in the context of a legal challenge to placing an organization in terrorist organizations list from the freedom of speech perspective:

> "The statute does not prohibit independent advocacy or expression of any kind. Plaintiffs may speak and write in support of the PKK and LTTE, the Government of Turkey and Sri Lanka, or anyone else. Indeed, the statute does not ban plaintiffs from saying that terrorism is the best way to achieve political goals or from advocating that the PKK and LTTE use only peaceful means to achieve their goals."
> *Holder v Humanitarian Law Project*
> *561 US 1, 25-26 (2010)*

33. The TGTE further submits that the issue must be examined in the broader context of the treatment of memorialization and monuments relating to the armed conflict. The TGTE contends that monuments and commemorative sites associated with Sri Lankan military personnel who died during the same conflict have been maintained and glorified, while memorialization by Eelam Tamil people of combatants who fought on the LTTE side has been subjected to severe forms of restrictions or removal.
34. This type of differential treatment raises serious questions concerning equality and non-discrimination in the enjoyment of the rights protected by the ICCPR. It would also warrant examination as to whether the laws governing commemorative activities are being applied in a manner that disproportionately interferes with the rights of the Eelam Tamil People.
35. The TGTE further submits that the removal of the statue should not be viewed in isolation from the broader historical and contemporary context of allegations concerning discrimination, persecution and genocide of the Eelam Tamil People, restrictions on memorialization, and limitations on freedom of expression and peaceful assembly in the NorthEast of Sri Lanka.
36. The TGTE, in this connection, submits that the present incident should also be considered in light of the United Nations Special Procedures communication **AL LKA 1/2024**, dated 7 February 2024, in which multiple UN mandate holders raised concerns with the Government of Sri Lanka regarding alleged restrictions and obstruction of Tamil memorialization activities, including Maaveerar Naal commemorations. The communication engaged concerns relating to freedom of opinion and expression, peaceful assembly and association, cultural rights, and transitional justice. The recurrence of restrictions affecting Tamil memorialization therefore warrants examination as part of a broader pattern rather than as an isolated incident.
37. The TGTE respectfully maintains that the conduct described above constitutes an unjustified interference with the rights protected under Articles 19 and 21 of the ICCPR and the removal of Lt. Col. Thileepan's memorial statue has resulted in discriminatory treatment on the basis of Tamil nationality/ethnicity.

V. REQUEST FOR URGENT ACTION

38. In light of the foregoing, the TGTE respectfully requests that the Special Rapporteur on the Rights to Freedom of Peaceful Assembly and of Association and the Special Rapporteur on the Promotion and Protection of the Right to Freedom of Opinion and Expression consider

transmitting an **urgent communication to the Government of Sri Lanka** concerning the removal of the memorial statue of Lt. Col. Thileepan.

39. In particular, the TGTE respectfully requests that the Special Rapporteurs urge the Government of Sri Lanka to:

a. Immediately return the memorial statue of Lt. Col. Thileepan and restore it to the location from which it was removed, subject to appropriate guarantees that its restoration and the associated commemoration can take place peacefully;

b. Provide the legal basis for the removal and seizure of the statue, floral arrangements, banners, and other commemorative materials;

c. Disclose the present location and status of the removed statue and other seized property;

d. Ensure that any restrictions imposed upon commemorative assemblies are consistent with Articles 19 and 21 of the ICCPR and satisfy the requirements of legality, necessity, and proportionality;

e. Ensure that laws regulating commemorative activities and their interpretation and application do not discriminate against members of the Tamil Nation on the basis of nationality/ethnicity or political identity;

f. Ensure that Eelam Tamil People are able to engage in peaceful commemoration and expression without intimidation, discrimination, or unwarranted interference; and

g. Conduct an independent and impartial investigation into the circumstances surrounding the removal of the memorial statue, including the seizure and destruction of commemorative property, and make the findings public.

40. Finally, the TGTE respectfully requests that the Special Rapporteurs consider the removal of the memorial statue within the broader context of the United Nations' ongoing assessment of risks of serious human rights violations in Sri Lanka, including concerns relating to discrimination, accountability, memorialization, and the prevention of genocide.
41. The TGTE further requests that the Special Rapporteurs consider whether the incident, together with other relevant information concerning restrictions upon Tamil memorialization and peaceful expression, warrants consideration as an **early-warning indicator** within the framework of the United Nations' prevention of genocide and atrocity crimes mechanisms.
42. Given the time-sensitive nature of the incident and the continuing uncertainty concerning the whereabouts of the memorial statue, the TGTE respectfully urges the Special Rapporteurs to treat this matter as **urgent** and to seek a prompt response from the Government of Sri Lanka.

Respectfully submitted,

Visuvanathan Rudrakumaran
Prime Minister
Transnational Government of Tamil Eelam

ஈராக்கில் அமெரிக்காவின் இரு தசாப்தங்கள்:
தேவையற்ற போரின் அழிவுகளும் விளைவுகளும்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

01.10.2026

2003ஆம் ஆண்டு தொடங்கிய அமெரிக்கத் தலைமையிலான ஈராக் போர், இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் 2026 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. அமெரிக்காவின் கடைசி படையினரும் ஈராக்கிலிருந்து வெளியேறியுள்ள நிலையில், வெளிநாட்டு இராணுவத் தலையீட்டிலிருந்து இறையாண்மை கொண்ட ஈராக் என்ற புதிய அத்தியாயம் தொடங்குகிறது. ஆனால் இந்த வெளியேற்றம், போர் முடிவடைந்துவிட்டது என்ற பொருளைக் கொண்டதல்ல. மாறாக, இரண்டு தசாப்தங்களாக உருவான அரசியல் பிளவுகள், ஆயுதக் குழுக்கள், பொருளாதாரச் சிக்கல்கள், பிராந்திய போட்டிகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஈராக் அரசே இனி சமாளிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

2003 போரும் மனித பேரழிவும்

2003 மார்ச் மாதத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை ஈராக்கை ஆக்கிரமித்தது. சதாம் ஹுசைன் தலைமையிலான பாத் கட்சி ஆட்சி அகற்றப்பட்டது. ஆனால் போருக்குப் பின்னர் ஈராக் எதிர்பார்த்த வேகத்தில் அமைதியான ஜனநாயக நாடாக மாறவில்லை.

சதாம் ஹுசைன் ஆட்சி வீழ்ந்தவுடன் மத்திய அரசின் கட்டுப்பாடு பல இடங்களில் பலவீனமடைந்தது. ஆயுதக் குழுக்கள், கிளர்ச்சியாளர்கள், மத அடிப்படையிலான அரசியல் சக்திகள் மற்றும் பல்வேறு சமூகக் குழுக்கள் அதிகாரத்திற்காக போட்டியிட்டன. குண்டுத் தாக்குதல்கள், கடத்தல்கள், கொலைகள், மத அடிப்படையிலான வன்முறைகள் ஆகியவை நாளாந்த வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறின. உலக வங்கி ஆய்வுகளும் 2003க்குப் பின்னர் வன்முறை, கொள்ளை, படுகொலைகள் மற்றும் கடத்தல்கள் ஈராக் சமூக அமைப்பை கடுமையாகப் பாதித்ததாக பதிவு செய்கின்றன.

ஈராக் போரின் மிகப்பெரிய விலை மனித உயிர்களாகும். ஈராக் மக்களுக்கான உயிரிழப்புகளின் சரியான எண்ணிக்கை குறித்து ஆய்வுகளுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. காரணம், போரின் பல ஆண்டுகளில் மருத்துவமனைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் பதிவுகள் முழுமையாக இருக்கவில்லை.

பாக்தாத் முதல் பலூஜா வரை

ஆவணப்படுத்தப்பட்ட பதிவுகளின்படி, 2003 முதல் 2011 இறுதி வரை குறைந்தது 114,000க்கும் அதிகமான பொதுமக்கள் வன்முறையில் கொல்லப்பட்டனர். அதன் விரிவான கணக்கீட்டில் போருடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் சேர்த்த போது 162,000க்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகியிருந்தன.

பிறவுண் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் 2003 முதல் 2013 வரையிலான காலத்தில் குறைந்தபட்சம் 134,000 பொதுமக்கள் நேரடி போர்வன்முறையால் கொல்லப்பட்டிருக்கலாம் என மதிப்பிட்டது. மறைமுக உயிரிழப்புகள் சுகாதார சேவைகள் சீர்குலைவு, நோய்கள், உணவு மற்றும் குடிநீர் பற்றாக்குறை போன்றவை இந்த எண்ணிக்கையில் முழுமையாக இடம்பெறவில்லை.

இதனால் போரில் எத்தனை பேர் இறந்தார்கள் என்ற கேள்விக்கு ஒரே எண்ணைச் சொல்வது வரலாற்று ரீதியாக சிக்கலானது. ஆனால் ஒரு உண்மை மட்டும் தெளிவானது. ஈராக் போரின் மிகப்பெரிய மனிதச் செலவை ஈராக் பொதுமக்களே சுமந்தனர். பாக்தாத் நகரம் போரின் முக்கிய மையமாக இருந்தது. அதே நேரத்தில் பலூஜா, மொசூல், நஜஃப், பஸ்ரா உள்ளிட்ட நகரங்களும் கடுமையான மோதல்களை எதிர்கொண்டன.

2004ஆம் ஆண்டில் பலூஜாவில் நடந்த கடுமையான போர்கள் ஈராக் போரின் முக்கியமான இரத்தக்களரி அத்தியாயங்களில் ஒன்றாக அமைந்தன. பொதுமக்கள் பெருமளவில் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

2006-2007 காலப்பகுதியில் சுனி–ஷியா மதவாத வன்முறை உச்சத்தை எட்டியது. பள்ளிவாசல்கள், சந்தைகள், குடியிருப்புப் பகுதிகள் தாக்கப்பட்டன. பல குடும்பங்கள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறினர். போரின் மிகக் கொடிய காலம் 2006ஆம் ஆண்டைச் சுற்றிய காலமாகும் 2006 முதல் 2008 வரை வன்முறை மிக உயர்ந்த நிலையில் நீடித்தது.

ஈராக்கில் 2026 செப்டெம்பர் 30 அன்று அமெரிக்கப் படைகளின் இறுதி வெளியேற்றம் நிறைவடைந்துள்ளது. ஈராக் போரின் இருபது ஆண்டுகளை வெறும் அமெரிக்கா வந்தது, போர் நடந்தது, அமெரிக்கா வெளியேறியது என்ற மூன்று வரிகளில் புரிந்துகொள்ள முடியாது. அது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றியது. ஒரு சமூகத்தின் மத மற்றும் இன உறவுகளை ஆழமாகப் பாதித்தது.

இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியது. பல குடும்பங்களைப் பிரித்தது. கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்தது. அத்துடன் அடிப்படை கட்டமைப்புகளின் மீள் கட்டமைப்பை பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளியது. மேலும், அமெரிக்கா–ஈரான் போட்டியின் மையப் பகுதிகளில் ஒன்றாக ஈராக்கை மாற்றியது.

போரின் மறைமுக அழிவு

போர் என்பது குண்டுவெடிப்புகளால் மட்டுமே ஒரு நாட்டை அழிப்பதல்ல. ஒரு நாட்டின் அடிப்படை கட்டமைப்புகளும் சிதைந்தால் அதன் தாக்கம் பல தலைமுறைகளுக்கு நீடிக்கும். 2003க்குப் பின்னர் ஈராக்கின் மின்சார உற்பத்தி மற்றும் விநியோகக் கட்டமைப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. உலக வங்கி ஆய்வின்படி, மறுசீரமைப்புக்காக பில்லியன் கணக்கான டாலர்கள் செலவிடப்பட்ட போதிலும், மின்சாரத் துறையின் மீட்பு மெதுவாகவும் வரம்புக்குட்பட்டதாகவும் இருந்தது. ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட 6,000 மெகாவாட் உற்பத்தித் திறனை அடையவே பல ஆண்டுகள் பிடித்தன. இதனால் பல ஈராக்கியர்கள் தினமும் சில மணி நேரங்களே மின்சாரம் பெற்ற காலங்கள் இருந்தன.

மருத்துவமனைகள், பள்ளிகள், சாலைகள், குடிநீர் அமைப்புகள், கழிவுநீர் கட்டமைப்புகள் போன்றவற்றின் சேதமும் சமூக வாழ்க்கையை பாதித்தது. இதன் பொருள், போரின் அழிவு குண்டுவீச்சு முடிந்த நாளில் முடிவடையவில்லை. ஒரு மருத்துவமனை அழிந்தால், அதன் தாக்கம் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும் ஒரு பள்ளி மூடப்பட்டால், ஒரு தலைமுறையின் கல்வி பாதிக்கப்படும்.

2011 அமெரிக்க படை முதல் வெளியேற்றம்

2011 டிசம்பரில் அமெரிக்காவின் கடைசி போர் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறின. அப்போது அமெரிக்கா தனது முக்கிய இராணுவப் பணியை முடித்துவிட்டதாக அறிவித்தது.

ஆனால் ஈராக் முழுமையான அமைதியை அடையவில்லை. அரசியல் பிளவுகள், சுனி-ஷியா பதற்றங்கள், பாதுகாப்பு அமைப்புகளின் பலவீனம் மற்றும் அரசியல் அதிருப்தி தொடர்ந்தன. அதன் பின்னணியிலேயே ISIS என அழைக்கப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பு வேகமாக வளர்ந்தது.

இதனால் 2014 இல் மீண்டும் அமெரிக்காவை ஈராக்கிற்கு அழைத்தது. 2014ஆம் ஆண்டில் ISIS ஈராக் மற்றும் சிரியாவின் பரந்த பகுதிகளை கைப்பற்றியது. மொசூல் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் அதன் கட்டுப்பாட்டுக்குள் சென்றன.

இதனால் ஈராக் அரசு மீண்டும் அமெரிக்காவிடம் இராணுவ உதவி கோரியது. அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டணி ISIS-க்கு எதிரான நடவடிக்கையைத் தொடங்கியது.

இந்த இரண்டாவது அமெரிக்க இராணுவப் பங்களிப்பு 2003ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பிலிருந்து வேறுபட்டது. இம்முறை பிரதான நோக்கம் ஈராக் அரசை கவிழ்ப்பது அல்ல; ISIS-ஐ தோற்கடிப்பதாக இருந்தது. 2017ஆம் ஆண்டில் ISIS தனது பிராந்தியக்

கட்டுப்பாட்டின் பெரும்பகுதியை இழந்தது. இருப்பினும் அதன் சிறிய அளவிலான தாக்குதல் திறன் முற்றிலும் அழிந்துவிடவில்லை.

ஆயுதக் குழுக்களின் எழுச்சி

ஈராக் போரின் மிக முக்கியமான நீண்டகால விளைவுகளில் ஒன்று பல்வேறு ஆயுதக் குழுக்களின் அரசியல் மற்றும் பாதுகாப்புத் தாக்கம் அதிகரித்ததாகும். ISIS-க்கு எதிரான போரில் பல ஆயுதக் குழுக்கள் ஈராக் பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டன. பின்னர் அவற்றில் சில அரசியல் அமைப்புகளுடனும் நெருக்கமாக இணைந்தன. அதில் ஈரானுடன் நெருக்கமான ஆயுதக் குழுக்களும் முக்கியமானவை. இதனால் ஈராக் அரசுக்கு ஒரு சிக்கலான கேள்வி எழுந்தது.

ஆயுதத்தின் இறுதி அதிகாரம் ஈராக் அரசிடமா? அல்லது அரசுக்கு வெளியே செயல்படும் சக்திவாய்ந்த ஆயுத அமைப்புகளிடமா? இந்தக் கேள்வியே இன்று அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னரும் ஈராக்கின் மிகப்பெரிய பாதுகாப்புச் சவால்களில் ஒன்றாக உள்ளது.

அமெரிக்க வெளியேற்றமும் ஈரான் செல்வாக்கும்

2026 செப்டெம்பர் 30 அன்று அமெரிக்கப் படைகளின் இறுதி வெளியேற்றம் நிறைவடைந்துள்ளது. 2024ஆம் ஆண்டு வாஷிங்டனும் பாக்தாத்தும் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் ISIS-க்கு எதிரான அமெரிக்கத் தலைமையிலான கூட்டணியின் இராணுவப் பணியை முடிவுக்கு கொண்டுவரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் ஈராக் ஒரு நுணுக்கமான சமநிலையைப் பேண வேண்டியுள்ளது. ஒரு புறம் அமெரிக்கா, மறுபுறம் ஈரான். இரண்டுக்கும் இடையில் ஈராக் தனது இறையாண்மையையும் தேசிய நலன்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

அமெரிக்க இராணுவ இருப்பு முடிவடைந்தாலும், அமெரிக்கா-ஈராக் உறவு முடிவடைவதில்லை. பாதுகாப்பு ஒத்துழைப்பு, உளவுத்துறை, பயிற்சி, தொழில்நுட்ப உதவி மற்றும் பொருளாதார உறவுகள் தொடரக்கூடிய வாய்ப்பு இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் குர்திஸ்தான் பிராந்தியத்தின் அச்சம் தற்போது அதிகரித்து வருகிறது. ஈராக் குர்திஸ்தான் பிராந்தியம் அமெரிக்க வெளியேற்றத்தை வேறுபட்ட கோணத்தில் பார்க்கிறது.

ISIS-க்கு எதிரான போரில் குர்திஷ் பெஷ்மெர்கா படைகள் அமெரிக்காவுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டன. சமீப காலங்களில் ஈரான் ஆதரவு குழுக்களிடமிருந்து ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களும் அந்தப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ளன. அமெரிக்காவின் வான் பாதுகாப்பு அமைப்புகள் இல்லாத சூழலில் குர்திஷ் அதிகாரிகள் பாதுகாப்பு குறித்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னரான விளைவு

2003இல் அமெரிக்கா ஈராக்கிற்குள் நுழைந்தபோது அதன் நோக்கங்கள் பாதுகாப்பு, ஆட்சி மாற்றம் மற்றும் பின்னர் ஜனநாயக அமைப்பு உருவாக்கம் போன்ற பல்வேறு இலக்குகளுடன் முன்வைக்கப்பட்டன.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் ஈராக் முற்றிலும் அழிந்த நாடாகவும் இல்லை. முழுமையாக நிலையான நாடாகவும் இல்லை.

அது தேர்தல்களை நடத்துகிறது. எண்ணெய் வளம் கொண்ட பொருளாதாரத்தை வைத்திருக்கிறது. பாதுகாப்புப் படைகள் முன்னைய காலத்தை விட அதிக அனுபவம் பெற்றுள்ளன. ISIS-ன் பிராந்திய ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆனால் அதே நேரத்தில் மத-இன அரசியல் பிளவுகள், ஊழல், ஆயுதக் குழுக்களின் செல்வாக்கு, வெளிநாட்டு சக்திகளின் போட்டி, வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை சேவைகள் தொடர்பான பிரச்சினைகள் இன்னும் தொடர்கின்றன.

ஒரு போர் முடிந்தாலும் அதன் நிழல் முடியாது. ஈராக் போரின் இருபது ஆண்டுகளை வெறும் அமெரிக்கா வந்தது - போர் நடந்தது - அமெரிக்கா வெளியேறியது என்ற மூன்று வரிகளில் புரிந்துகொள்ள முடியாது.

அது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றியது. ஒரு சமூகத்தின் மத மற்றும் இன உறவுகளை ஆழமாகப் பாதித்தது. இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியது. பல குடம்பங்களைப் பிரித்தது. கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்தது.

அத்துடன் அடிப்படை கட்டமைப்புகளின் மீள்கட்டமைப்பை பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளியது. மேலும், அமெரிக்கா-ஈரான் போட்டியின் மையப் பகுதிகளில் ஒன்றாக ஈராக்கை மாற்றியது. இன்று அமெரிக்கப் படைகள் வெளியேறிவிட்டன. ஆனால் 2003ஆம் ஆண்டில் தொடங்கிய போரின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பாதுகாப்பு விளைவுகளிலிருந்து ஈராக் இன்னும் முழுமையாக வெளியேறவில்லை.

எனவே 2026 செப்டெம்பர் 30 என்பது ஈராக் வரலாற்றில் ஒரு முடிவுத் திகதி மட்டுமல்ல. அது ஒரு புதிய கேள்வியின் தொடக்கம்.

வெளிநாட்டு இராணுவப் படைகள் இல்லாத ஈராக், தனது அரசியல் இறையாண்மை, பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் உள்நாட்டு ஒற்றுமையைத் தானாக எவ்வாறு கட்டியெழுப்பப் போகிறது. இதுவெ அந்தக் கேள்விக்கான பதிலே, 2003இல் தொடங்கிய ஈராக் போரின் அடுத்த அத்தியாயத்தை தீர்மானிக்கப் போகிறது.

19th Year Veeravanakkam

19 ஆம் ஆண்டு வீரவணக்கம்

லெப். கேணல் அலெக்ஸ்

மேஜர் செல்வம்

மேஜர் மிகுதன்

மேஜர் கலையரசன்

லெப். ஆட்சிவேல்

லெப். மாவைக்குமரன்

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்
பிரிகேடியர்
சு.ப. தமிழ்ச்செல்வன்

**02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில்
சிறீலங்கா வான்படையின் தாக்குதலில்
வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர்
பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின்
19ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்**

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்